Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 24
ரூபா 30.00
ஜனவரி. 20-26, 2011

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 895



## சூரியப் பொங்கலில் ஜனாதிபதி சொன்ன செய்தி

## மரணம் ஒரு ஐக்கிய நிகழ்வு




## கிழக்கில் மழை

ஒன்பது இலட்சம் அகதிகள் - தொடர்பற்ற கிராமங்கள் - மந்தகதியில் நிவாரணம்

சூடு - சுவை - சுவாரசியம் - அதுதான் தினமுரசு

# ஆன்மீகம்

## குரு வழிபாடு



"குரு" என்றால் பாசத்தை நீக்குபவர் அல்லது "அஞ்ஞானம்" என்னும் இருளை அகற்றுபவர் என்பது பொருள். மனமொழி, மெய்களால் வணக்குதற்குரிய சிவ சொரூபமாக இருப்பதோடு, குருவானவர் வாழ்விற் பின்பற்றுதற்குரிய சிறந்த இலட்சியமாகவும் ஆன்மீகத் துறையில் சந்தேகங்களைப் போக்கி நல்வழிப்படுத்தும் வழிகாட்டியாகவும் விளங்குகின்றார். குருவிடம் ஞான நூல்களைக் கேட்கும் போது அடக்கத்துடனும், பக்தியுடனும் இருந்து, கவனம் முழுவதையும் சொல்லப்படும் விடயத்திற் செலுத்திக் கேட்கவேண்டும். குருவுக்குச் செய்யும் சேவை மிகச் சிறந்த திருத்தொண்டாகும்.குருவின் உபதேசப்படி ஒழுகுதல் அவர்க்குச் செய்யும் வழிபாடுகளெல்லாம் முதன்மையானது. அவரவருடைய குருவை உள்ளன்போடு வழிபடுவதுடன், சமய குரவர், சந்தான குரவர் ஆகியோருக்கும் குரு பூசை செய்து வருவது அவசியம். நாயன்மார்களுள் திருமூலர், மங்கையற்கரசியார், குலச்சிறையார், அப்பூதியடிகள் ஆகியோர் குருவழிபாட்டால் வீடுபேறடைந்தோருட் சிலராவர். சந்தானகுரவர் முதலானோர் குருவழிபாட்டினாலேயே உயர் பதம் எய்தியவர்கள். தங்கள் குருவின்பால் தாங்கள் கொண்டிருந்த பக்தியையும் பெருமதிப்பையும் தங்கள் நூல்களிலும் அவர்கள் வெளிப்படுத்தியிருப்பதைக் காணலாம்.

சரவணபவன்-நல்லூர்.

## மனிதத்துவம் மதிப்போம்

மனிதனா? சட்டமா? பயிர் முக்கியமா? வேலி முக்கியமா? தற்காலத்தில் மனிதன் மனிதனாக வாழாது சட்டம், சம்பிரதாயம் என தன் பார்வையைச் செலுத்துகிறான். சட்டமும் தேவை, ஆனால் மனிதத்துவம் மதிக்கப்படல் வேண்டும். எதிலும் நல்லதையும் சிறந்ததையும் முக்கியமானதையும் பார்க்கும் கண்ணோட்டம் இருந்தால் எதிலும் நல்லது மட்டுமே தெரிய வரும். சிலர் மனிதனையும் மனிதத்தையும் புதைக்கும் சட்டத்தைப் பார்க்கின்றனர். வேலியைக் காக்கும் முயற்சியில் இறங்குகின்றனர். பயிரை விட வேலியைப் பாதுகாக்கும் முயற்சியில் அதிகம் ஈடுபடுகின்றனர். இயேசுவின் நற்குணங்கள் எனும் பயிரை வளர்த்துப் பாதுகாப்போம். பலரை அது வாழ்விக்கும். நன்மையைச் செய்வதற்கு நாள், நேரம் பாராமல் இருக்க முயற்சிப்போம். எந்நேரமும் தீமையைத் தவிர்ப்போம்.

அ.மரியா, ஆனைக்கோட்டை

## குர் ஆனை ஓதிடுவோம்

புளாலத்துனு உபைத் (ரலி) அவர்கள் அறிவிப்பதாவது " தன் அடிமைப் பெண்ணாகிய பாடகியின் பாடலைக் கேட்கும் ஒரு மனிதனை விட, குர் ஆண் ஓதக் கூடியவரின் சத்தத்தை அல்லாஹுத ஆலா மிக விருப்பத்துடன் கேட்கிறான்" என ரஸூல் (ஸல், அவர்கள் கூறினார்கள். நூல் (இப்னுமாஜா)

பாடல்களின் ஓசையின் பக்கம் இயற்கையாவே நம்முடைய கவனம் செல்கிறது. ஆனால் மார்க்கம் தடை செய்திருப்பதின் காரணத்தினால் தீன்தாரிகள் அதன் பக்கம் கவனம் செலுத்துவதில்லை. எனினும் பாடுகின்ற பெண் தன் அடிமைப் பெண்ணாக இருந்தால் அவளுடைய பாடலைக் கேட்பதில் மார்க்கத்தில் தடை ஏதுமில்லை என்பதால் அதன் பக்கம் முழுமையான கவனம் ஏற்படுகிறது. ஆனால் பரிசுத்த குர் ஆனை பாடல்களின் ராகத்தில் ஓதுவது கூடாது ஹதீஸ்களில் இதற்கு தடைவந்துள்ளது.

ஹஸீனா ஏ.அஸீஸ்,
கல்முனை-5

# உங்கள் பக்கம்

## கட்டண அறவீடு குறையுமா?

வாகன நெருக்கடி மிக்க தலைநகரின் வீதிகளில் மக்களின் போக்குவரத்துக்களை இலகுபடுத்துவதற்கும் வேகப்படுத்துவதற்கும் பொருத்தமானதாக முச்சக்கரவண்டிகள் காணப்படுகின்றன. இதன் மூலம் துரிதகதியில் ஒருவர் தன்னுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாக உள்ளது. அதிலும் வெளிமாவட்டங்களில் இருந்து வருகின்ற பொதுமக்கள் தங்களுடைய தேவைகளையும், செல்லவேண்டிய இடங்களையும் இலகுவாகத் தெரிந்துகொள்வதற்கு முச்சக்கர வண்டிகள் உதவுகின்றன என்பது மறுப்பதற்கில்லை. எனினும் ஒரு சில முச்சக்கர வண்டி சாரதிகள் விடுகின்ற தவறுகள் அனைத்து முச்சக்கர வண்டிகள் மீதும் பொதுமக்களுக்குச் சந்தேகத்தையும் அச்சத்தையும் தோற்றுவிக்கின்றன.
குறிப்பாக வெளிமாட்டத்திலிருந்து செல்லும் பொதுமக்களிடம் அளவுக்கதிகமான கட்டணத்தை அறவிடுகின்றனர். அத்தோடு கொழும்பு தலைநகர் பற்றிய தவறான குறிப்புக்களையும் ஆலோசனைகளையும் வழங்கி ஏமாற்றுவதற்கு முயற்சிக்கப்படுகின்றது. இது விடயத்தில் காவல்துறையினரும், கொழும்பு மாநகரசபையினரும் அக்கறையெடுத்து தலைநகரின் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள முச்சக்கர வண்டிகளின் கட்டணங்களைத் தீர்மானிப்பதற்கு மீற்றர்களைப் பொருத்துவதைக் கட்டாயமான நடைமுறைக்குக் கொண்டுவருவதன் மூலம் அப்பாவிப் பொதுமக்கள் தீய எண்ணம் கொண்ட ஒரு சிலரால் ஏமாற்றப்படுவதும், வஞ்சிக்கப்படுவதையும் ஓரளவுக்குக் கட்டுப்படுத்த முடியும்.
எனவே இவ்விடயத்தில் உரிய அதிகாரிகள் துரிதகதியில் செயற்பட வேண்டுமென வேண்டுகோள் விடுகின்றேன்.

எஸ்.மது, தெஹிவளை.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 1772, கொழும்பு,
த.பெ.இல:- 167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212221811
தொலை நகல் (Fax): 0212221811
ஈ-மெயில்: (E-mail):- thinamurasu@live.com

# கவிதைப் போட்டி இல.895



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பவேண்டிய கடைசித் திகதி. 26.01.2011

கவிதைப் போட்டி இல. 895
தினமுரசு வாரமலர், த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### ஏக்கம்

நடுத்தெருவில்- அன்று
மடிந்து போகையில்
என் கையில்-உன்னை
தந்து சென்றார் அம்மா
அப்பாவும் அண்ணாவும்
கூடவே சென்றார்கள்
நீயும் நானும் - இன்று
அநாதைகளானோம்
துன்பப்படும்-நம்
துயர்துடைக்க-இங்கு
யார் வருவாரோ?...

சா.தர்சிகா,
ஏழாலை மேற்கு.

### கலங்காதே

கலங்காதே என்
கண்ணே
கொடிய போரால்
இருளாய்ப் போன உன்
எதிர்கால வாழ்க்கைக்கு
ஒளியூட்ட உன் அக்கா
நான் உள்ளேன்.

சு.ஜெயருபன்,
பருத்தித்துறை.

### உதவிக்கு யாருமில்லை

நடைப்பிணமாக
நானிருக்கின்றேன்-எனக்கு
உதவி செய்ய யாரும் இல்லையா?
சொல்லுங்கள் உறவுகளே!
பாழாய்ப்போன யுத்தத்தால்
என் குடும்பத்தவர்களை
இழந்து நானும் தங்கையுமாய்
உண்ண உணவின்றி
மாற்ற உடையின்றி
இந்த தூணுடனே-எம்
பொழுது கழிகின்றது
ஆனால் யாரோ எல்லாம்
இறைவனுக்கென்று
ஏதேதோவெல்லாம் கொண்டு
செல்கின்றார்கள்
அநாதையாக
இருக்கும் எமக்கு-அதில் ஒரு
பிடியாவது தாருங்களேன்.

ராணிமகள் றெசிந்தா
பருத்தித்துறை

### இல்லையே!

யுத்தத்தின் கொடூரம்
அநாதைகளாக்கப்பட்ட
இக்குழந்தைகள்.
உததமர் எவரும்
முன்வரவில்லையே
இப்பிஞ்சுகளின்
துயர் தீர்க்க.

அ.சந்தியாகோ,
கண்டி.

## கவிதைப் போட்டி இல.893

### பாராட்டுக்குரியது



### உளத்துயரம்

பஞ்சு மனங்கொண்டு
விஞ்சி அழுகின்ற
பிஞ்சுக் குழந்தையுடனே
கஞ்சத்தனம் நிறைந்த
நஞ்சு மனிதனிடத்தே-நீ
கஞ்சிக்கும் கெஞ்சியிராதே
அஞ்சி நிற்காதே சிறுமியே
மிஞ்சிய துணிவுடன்
நாளைய வெற்றிப்
பயணத்தைத்
தொடர வேண்டாமா!

சி.கோகுலராம்,
உரும்பிராய்.




# வாசகர் சாலை

### பாராட்டுக்கள்

வியாழன்தோறும் வெளிவரும் முரசு கொண்டுவரும் அனைத்து விடயங்களும் மிகவும் முத்தானவை. அதிலும் குறிப்பாகக் கவிதைப் பகுதி, அரசியல் கட்டுரைகள், மனதுக்கு நிம்மதி பகுதி போன்றவை சிறப்பாகவுள்ளது. அவை பாராட்டத்தக்க. அத்துடன் மேலும் பல தகவல்களை உள்ளடக்கியதாக வண்ணமயமாக வெளிவரவேண்டும் என்பதே என அவாவாகும்.

க.வைஸ்ணவி, திருகோணமலை

### உனக்கு நிகர் நீயே!

சிறியவர் முதல் பெரியவர் வரை அனைவராலும் விரும்பிப்படிக்கும் பலதரப்பட்ட அம்சங்களுடன் வெளிவருகின்றது. அரசியல் கட்டுரைகள் மறைக்கக் கூடிய சில உண்மையை வெளிப்படையாகக் கூறுகிறது. முன்பைவிட 24 ஆம் பக்கத் தகவல்கள் சிறப்பாகவுள்ளது. உனக்கு நிகர் நீயே எனக் கூறுவதில் பெருமைப்பட்டுக்கொள்கின்றேன்.

ஆர்.பிரணவன், யாழ்ப்பாணம்.

### தேனமுதம்

வாரமொருமுறை வந்து வசந்தம் பூக்கும் முரசுக்குக் கோடான நன்றிகள். பன்முகப்படுத்தப்பட்ட பல விடயங்களை முரசு வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். தேன் கிண்ணம் பகுதிக் கவிதைகள் தேனமுதமாக இனிக்கின்றது. பாப்பா முரசு பக்கத்தில் வெளிவந்த "மரத்தின் கவலை" என்ற சிறுகதை படிப்பினையூட்டுகிறது.

சி.தாரணி,
வவுனியா

# கடந்த கால தலைமைகள் விட்ட தவறை
# இனியும் விடுவதற்கு அனுமதிக்கமாட்டோம்
## சூரியப் பொங்கலில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

எமது தேசத்தில் வாழும் தனியொரு மனிதனுக்கு, வலிகள் வதைகள் அவலங்கள் நிகழுமேயானால் அந்த வலியும், வதையும், அவலமும் எமது இதயங்களிலும் வலியெடுக்கும் உணர்வுகளைக் கொண்டவர்கள் நாங்கள் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தெரிவித்துள்ளார்

கடந்த 17.01.2011 அன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையில் சூரியப் பொங்கல் விழா யாழ் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனை அவர் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் எமது கிழக்கு வாழ் உறவுகள் இயற்கை அனர்த்தங்களால் அவலப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த துயரச்சூழலில் நாம் களியாட்டங்களை நடத்திக்கொண்டிருக்க முடியாது.1978ல் எமது கிழக்கு மாகாண மக்கள் இயற்கை அனர்த்தங்களால் அவலப்பட்டு துயரங்களை சுமந்து நின்றபோது நிவாரணப்பொருட்களை சேகரித்து கிழக்கு மக்களிடம் நேரடியாக முதலில் கொண்டு சென்று அந்த மக்களின் துயரங்களை துடைத்தவர்களில் நானும் ஒருவன்.

தற்போதும் கிழக்கு மக்களின் அவலங்களைக் கண்டு எமது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்கள் துரிதமான நிவாரணப்பணிகள் உரிய முறையில் நடக்க வேண்டும் என்று பணிப்புரை வழங்கியுள்ளார். யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொது அமைப்புகளும் ஈடுபட்டு வருகின்றன. கிழக்கு மக்களின் துயர் துடைக்க உதவியுள்ள அனைவருக்கும் இந்த இடத்தில் நான் நன்றி தெரிவிக்கின்றேன். ஒரு புறம் இயற்கையின் அனர்த்தங்கள் நடந்து கொண்டிருப்பினும் மறு புறத்தில் ஏற்கனவே பல்வேறு அவலங்களையும் சந்தித்திருந்த உங்களுக்காகவே சூரியப்பொங்கல் நிகழ்வுகள் நடந்து கொண்டிருக்கின்றது.

எமது மக்கள் உரிமையின் பெயரால் நடத்தப்பட்ட அழிவுயுத்தத்தினாலும் சொந்த இனத்தவர்களாலும் அச்சுறுத்தப்பட்டும் வாழ்ந்து வந்த துயரச்சூழலை இல்லாதொழித்து, எமது மக்களுக்கு ஆறுதல் தரமுடிந்த அமைதிச் சூழலை உருவாக்கி தந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களுக்கும் மற்றும் சகலருக்கும் நன்றி தெரிவிக்கும் நிகழ்வாகவே இதை நாம் கருதவேண்டும். துயரங்கள் இனியில்லை, அவலங்கள் இங்கில்லை.. என்ற நிலைமையை தோற்றுவித்தமைக்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்வாகவே இதை நாம் கருதுகின்றோம். நம்பிக்கையோடு, கிடைத்த சந்தர்ப்பத்தை நாம் உரிய முறையில் பாதுகாப்போம் என்பதற்கு எமது மக்கள் சமிக்ஞை காட்டும் தினமாகவே இன்றைய தேசியப்பொங்கல் தினத்தை நாம் கருதுகின்றோம்.

இனங்களுக்கிடையிலான ஐக்கியத்தை பலப்படுத்தவும், பேணிப்பாதுகாக்கவும், சம உரிமை பெற்ற சுதந்திர பிரஜைகளாக எமது மக்கள் முகமுயர்த்தி கௌரவமாக வாழ்வதற்கும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களுடனான உறவுகளை எமது மக்களும் பலப்படுத்துகின்ற உயரிய எண்ணங்களைக் கொண்ட நிகழ்வாகவே இந்த தேசிய பொங்கல் தினம் என்று பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.



இந் நிகழ்வில் புத்தசாசன மதவிவகார அமைச்சர் எம்.கே.டி.எஸ் குணவர்த்தன நாடளுமன்ற உறுப்பினர்களான முரகேசு சந்திரகுமார், சில்வெஸ்திரி அலென்ரின், திருமதி விஜயகலா மகேஸ்வரன்,தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி, வட மாகாண ஆளுனர் சந்திரசிறி, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோர் கலந்து கொண்டனர் இத்துடன் இந்த நிகழ்வை நேரடியாக பல்லாயிரக்கணக்கான மக்கள் கண்டு களித்ததுடன் சூரியப் பொங்கல் நிகழ்வு ஜனாதிபதி செயலகத்தின் இலத்திரனியல் ஊடகப்பிரிவினரால் நேரடி ஒளிபரப்புச் செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## மாட்டியது கடத்தல் கட்டுநாயக்காவில் சம்பவம்

சட்ட விரோதமான முறையில் வெளி நாட்டு நாணயங்களை கடத்த முயற்சித்த சீன நாட்டு பிரஜைகள் இருவர் கட்டுநாயக்கா விமான நிலைய சுங்க அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளனர். இலங்கை மதிப்பின் படி சுமார் 90 லட்சம் ரூபாய் பெறுமதியான அமெரிக்க டொலர்கள்,யுவான் உட்பட நாணயங்களை எடுத்துக் கொண்டு கடந்த 18ஆம் திகதி அதிகாலை ஹங்கொங் கூடாக சீனா செல்ல முயற்சித்த இரு சீனப் பிரஜைகளே இவ்வாறு சுங்க அதிகாரிகளிடம் சிக்கியுள்ளனர். சுங்க அதிகாரிகளினால் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்ற குறித்த இரு சீனப் பிரஜைகளும் நீதிமன்றின் முன் நிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஜப்பான் நிவாரண உதவி

அண்மையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிப்பொருட்களை ஜப்பான் நிறுவனம் ஒன்று அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மகிந்த சமரசிங்கவிடம் வழங்கியுள்ளது.

கடந்த 40 வருடங்களுக்கு மேலாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் இயற்கை அனர்த்தங்களுக்கு முகம் கொடுக்கின்ற சந்தர்ப்பங்களில் உடனடியாக தலையிட்டு அவசர உதவிப்பணிகளை மேற்கொண்டு வருகின்ற ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் என்ற அமைப்பானது சுமார் 26 மில்லியன் ரூபாய் பெறுமதியான கூடாரங்களும் படுக்கைகளும் வழங்கப்பட்ட நிவாரணப் பொருட்களில் அடங்குகின்றன குறித்த ஜப்பான் நிறுவனமானது கடந்த 2004 ஆம் ஆண்டு சுனாமிப் பேரழிவு ஏற்பட்டதில் இருந்து கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திவதில் இலங்கை அரசிற்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நஸ்டஈடு

கிழக்கில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வயல் நிலங்களுக்கு நஸ்டஈடு வழங்க நடவெடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக விவசாய மற்றும் விவசாயக் காப்புறுதிச் சபை தெரிவித்துள்ளது. பாதிக்கப்பட்ட விவசாய நிலங்கள் பற்றிய மதிப்பீடுகளை மேற்கொள்வதற்காக ஏற்கனவே ஐந்து குழுக்கள் குறித்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் விவசாயகாப்புறுதிச் சபை பொது முகாமையாளர் பண்டுக வீரசிங்க தெரிவித்துள்ளார். மட்டக்களப்பு, பொலனறுவை,அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் சுமார் 4லட்சம் ஏக்கருக்கும் அதிகமான நெல்வயல்கள் பாதிக்கப்பட்டிருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்ற நிலையில் மதிப்பீடுகளை விரைவு படுத்தி 30 தினங்களுக்குள் நஸ்டஈடு வழங்க நடவெடிக்கை எடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

## அதியுயர் பீடத்தில் ஏ.ம். மஜீட் மு.கா. அறிவிப்பு

ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்சியின் அதியுயர் பீடத்தில் இருந்து தற்காலிகமாக இடை நிறுத்தி வைக்கப்பட்ட கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எம்.மஜீட், மீண்டும் கட்சியின் அதியுயர் பீடத்திற்கு உள்வாங்கப் பட்டிருப்பதாக முஸ்லிம் காங்கிரஸ் தனது ஊடாக அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அண்மையில் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தலையில் நடைபெற்ற அதியுயர் பீடம் மற்றும் அரசியல் பீடம் இணைத்த கூட்டத்தின் போதே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. எனினும் அவருடன் அதியுயர் பீடத்தில் இருந்து நீக்கப்பட மாகாண சபை உறுப்பினர் ஜவாத் தொடர்ந்தும் இடைநிறுத்தப்பட்டு இருக்கின்றார்.

கடந்த நாடாளுமன்ற தேர்தலில் திகாடுமல்ல மாவட்டத்தில் மு.கா. சார்பாக போட்டியிட்ட வேட்பாளர்களுக்கு ஆதாரவாக குறித்த இரு மாகாண சபை உறுப்பினர்களும் செயற்படாமையினால் 2010 ஏப்ரல் 8 ஆம் திகதி கட்சியின் அதியுயர் பீட பதவியில் இருந்து இருவரும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் என்னிடம் வந்துவிடும் சஜித் பிரேமதாச உறுதி

எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்கு முன் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் பதவி என்பன தன்வசம் வந்து விடுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவி என்பது தனது பதவியை மட்டும் காப்பாற்றிக் கொண்டு பிரச்சினைகளை விட்டு தூர விலகியோடும் ஒருவரிடம் இருக்கக் கூடாது. அதே போலவே கட்சியினதும், கட்சி உறுப்பினர்களினதும் பிரச்சினைகளைத் தீர்க்கும் ஆற்றல் கொண்ட ஒருவரிடம் தான் கட்சித் தலைமைத்துவம் இருக்க வேண்டும். அந்த வகையில் எதிர்வரும் சிங்கள - தமிழ்ப் புத்தாண்டுக்கு முன்பதாக எதிர்க்கட்சித் தலைவர் பதவி மட்டுமன்றி ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராகவும் நான் உங்களுடன் இணைந்து புத்தாண்டைக் கொண்டாடுவேன் என்பதை உறுதியாக உங்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன். இனிவரும் தேர்தல்கள் அனைத்துக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராகவும், எதிர்க்கட்சித் தலைவராகவும் தான் நான் முகம் கொடுப்பேன். அவற்றின் மூலமாக கட்சியை வெற்றிப் பாதையில் வழிநடாத்திச் செல்வேன். தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அம்பாந்தோட்டையிலிருந்து உருவானதைப் போலவே ஐக்கிய தேசியக் கட்சியின் அடுத்த ஜனாதிபதியும் அம்பாந்தோட்டையிலிருந்து தான் உருவாகப் போகின்றார். என்றும் அவர் கூறினார்.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல:-1772, கொழும்பு.
த.பெ.இல:-167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 1811
தொலைநகல்(Fax):- 021 222 1811
ஈ-மெயில்(E-mail):- thinamurasu@live.com

# முரசம்

## இயற்கையின் அனர்த்தம் மனிதனால் நீடிக்கக்கூடாது

**அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.**

இதுவரை இருந்துவந்த காலநிலை இப்போது சீராகி இருக்கின்றது. 'லாநிணா' காலநிலை இலங்கையை மட்டுமல்ல உலகத்தையே ஒரு உலுப்பு உலுப்பியிருக்கிறது.
மழை, வெள்ளம், இயற்கை அனர்த்தம், என்பன உலக நாடுகளில் பெரும் மனிதப் பேரழிவை ஏற்படுத்தியுள்ளது.
பிரேசில், அவுஸ்திரேலியா, இலங்கை ஆகிய நாடுகளில் பெருமளவான மக்கள் "லாநிணா" காலநிலை மாற்றத்தில் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

இலங்கையில் பத்து இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் அகதியாயிருந்த சம்பவம் வரலாற்றில் முதல்முறையாக பதிவாகக்கூடியது. அதுவும் கிழக்கு மாகாணத்தில் நிலைமை மிக மோசமாக இருந்தது. அங்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறு தரப்புக்களும் உதவிகளைச் செய்திருக்கின்றனர். அந்த முயற்சிகளை வரவேற்கும் அதேவேளை உதவிப் பணிகளை அரசியலாக்கிய கேவலமான சில நிகழ்வுகள் நடந்தேறியிருப்பதையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

இதுதவிர, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்குக் கூட அனுமதி எடுக்க வேண்டும் என்ற நிலைமை இருந்துள்ளதும், அரசியல் தலையீடுகள் இருந்துள்ளதும் தெரியவருகின்றது.

"ஒரே நாடு ஒரே மக்கள்" என்று ஜனாதிபதி தொடர்ந்து கூறி வந்தாலும், இடையில் இருக்கும் சிலர் மக்களையும் மனித உணர்வுகளையும் பிரித்து வைக்கின்ற குள்ளநரி விளையாட்டைக் கனகச்சிதமாக செய்துவருகின்றனர்.

அப்படிச் செய்வதற்குக் காரணம், மக்கள் தேவைகளுக்காகத் தம்மைத் தேடிவரவேண்டும் என்றும், பரஸ்பர தொடர்புகள் ஏற்பட்டு மக்கள் பொது நிலைப்பாட்டுக்கு வந்துவிடக் கூடாது என்பதும் இன்னும் பிறவுமாக இருக்கலாம்.
இந்த மோசமான நயவஞ்சகமான நிலைமை மாறவேண்டும். மக்களின் துன்பங்களை நீடிக்க விரும்புவதும், அதில் கேவலமான அரசியல் நடத்துவதும் கண்டனத்துக்குரியதாகும். அது மனிதவிரோதச் செயல்பாடுமாகும்.

மக்கள் பாதிக்கப்பட்டிருக்கும் போது உதவாமல் முதலைக்கண்ணீர் வடிப்பதும், ஊடகங்களுக்கு முகங்காட்டி உதவாத பாசாங்கு செய்வதும் ஏற்புடையதல்ல. மக்களை வாக்கு இயந்திரங்களாக மட்டும் பார்க்கும் சராசரி அரசியல் தலைவர்களாக எல்லோரும் இருந்து விடாதீர்கள்.

உதவிகள், நிவாரணங்களை மக்களுக்கு பங்கிடும் போது பாரபட்சமும் கவலையீனமுமற்று சேவை மனப்பான்மையுடன் அதிகாரிகளும் அதிகாரத்தில் இருப்பவர்களும் செயற்பட வேண்டும் என்பதை தொடர்ந்து கூறுவது போல் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்படுகின்றது.

மக்கள் வாழ்விடம், உடை, தொழில் என எல்லாம் இழந்தவர்களாக இருக்கின்ற ஒவ்வொரு கால கட்டத்திலும் இதே தவறு நடப்பதுதான் வேதனையளிக்கின்றது. திருத்தப்பட முடியாத தவறாக இது தொடர்கின்றது.

மக்கள் சேவையில் இருப்பவர்கள் உதவிகள் பாதிக்கப்பட்ட மக்களை முழுமையாகவும், உடனடியாகவும் சென்றடைய தமது பணிக்கு மேலதிகமாகவும் அர்ப்பணிப்போடும் செயலாற்றினால், மக்கள் இடர்களிலிருந்து விரைவாக விடுபட்டு இயல்பு வாழ்வுக்குத் திரும்பி விடுவார்கள்.

"மக்கள் சேவையே மகேசன் சேவை" என்பார்கள். அத்தகைய உயரிய சேவை மனிதாபிமானத்தோடும், சகோதர உணர்வோடும் செய்ய அனைத்து அதிகாரிகளும் முன்வர வேண்டுமென மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

**மீண்டும் மறுமடலில்**
**வந்து கலக்கும்வரை**

என்றென்றும் அன்புடன்,
**ஆசிரியர்.**

---

சிவன்

# சூரியப் பொங்கலில் ஜனாதிபதி சொன்னது என்ன

எக்ஸ்ரே ரிப்போர்ட்



யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேசிய பொங்கல் விழா மிகவும் கோலாகலமாக ஆயிரக் கணக்கான மக்களின் பங்குபற்றலுடன் நடைபெற்று முடிந்திருக்கிறது.
இந்த விழாவில் பிரதம விருந்தினராக, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அழைப்பையேற்று வருகை தந்திருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களே அனைவரின் கவனத்திற்கு உரியவராக விளங்கியிருந்தார்.

2009 மே 19 புலிகளுக்கு எதிரான யுத்தம் முடிவடைந்ததற்குப் பின்னர், அரசியல் தீர்வு பற்றி ஆரோக்கியமான நடவடிக்கைகள் ஏதும் அரசினால் முன்வைக்கப் படவில்லை என்ற அதிருப்தி பல்வேறு மட்டங்களிலும் இருக்கின்றது. யுத்தத்தின் இறுதிக்கட்டங்களில் கடுமையான முறையில் குற்றச்செயல்கள் இடம்பெற்றதாகவும் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டதாகவும் சரணடைந்த, கைது செய்யப்பட்ட புலி உறுப்பினர்கள் கொடூரமான முறையில் நடாத்தப்பட்டதாகவும் சர்வதேச அமைப்புகள் உட்பட பலரும் அரசின் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்துக் கொண்டுள்ளனர். போர்க்குற்ற விசாரணைகளைப் பற்றி ஆராய அமைக்கப்பட்ட கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சில உண்மை களை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்ற போதிலும் காலத்தை இழுத்தடித்துக் கொண்டிருக்கின்றது.
இலங்கை விவகாரத்தில் ஐ.நா.வின் செயலர் பான் கீ மூனுக்கு ஆலோசனை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழு இலங்கை வருவது சம்பந்தமான பல்வேறு இழுபறிகள் காணப்படுகின்றது.

மறுபுறத்தில் வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பிற்கேற்ப சம்பள உயர்வு வழங்கப் படவில்லையென அரச உத்தியோகத்தர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். பொருட்களின் விலையேற்றத்தை சமாளித்துக்கொள்ள முடியாத சாதாரண மக்கள் திண்டாடிக் கொண்டிருக்கின்றனர்.

இந்நிலையில், அதுவும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களுக்கான வேட்பு மனுக்கள் கோரப்பட்டுள்ள நிலையில் யாழ் மக்கள்முன் ஜனாதிபதி நேரடியாக தோன்றப் போகின்றார் என்ற செய்தி பரவியதிலிருந்து ஜனாதிபதி அவர்கள் வடக்கு மக்களுக்கு எவ்வாறான செய்தியைச் சொல்லப் போகின்றார் என்ற எதிர்பார்ப்பு பல்வேறு மட்டங்களிலும் மேலோங்கியிருந்தது.

தற்போதைய வடக்கின் வசந்தம் தமிழ் மக்களுக் கானதும் அவர்களது பிள்ளைகளுக்குமான வசந்தமாகும். இந்த வசந்தத் தையும், அபிவிருத்தியையும் சிலர் குழப்ப முயற்சிக்கிறார்கள். இவர்களது முயற்சிகளுக்கு நாம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம்.

பாதாள உலகக் கோஷ்டிகளும், மாபியா குழுக்களும் தென்பகுதியில் இருந்தால் என்ன, வடபகுதி யில் இருந்தால் என்ன அவற்றை இந்நாட்டிலிருந்து இல்லாது ஒழிப்பதுடன் மீண்டும் ஒரு பயங்கரவாதம் ஏற்பட இடமளிக்கமாட்டேன்.

இன்று நாட்டுக்குத் தேவை அபிவிருத்தி ஒன்றேயாகும். இந்த அபிவிருத்திப் பணியில் அரசாங்கம் வடக்கிற்கென்றோ கிழக்கிற்கென்றோ தெற்கிற் கென்றோ பேதம் பாகுபாடு காட்டாது நம் நாட்டை அபிவிருத்தி செய்வதில் ஈடுபட்டு வருகிறோம்.

நாம் செய்துவரும் அபிவிருத்திப் பணிகளைப் பற்றி விமர்சனம் செய்பவர்கள் அபிவிருத்திகள் அனைத்தையும் வெளிநாட்டு உதவிகளுடனேயே செய்து வருகிறோம் என்று கூறுகிறார்கள். நாம் வெளி நாடுகளில் கடன்பட்டு செய்தாலும் அக்கடனுக்கு வட்டியையும் சேர்த்துத்தான் வழங்குகிறோம். இதை அவர்கள் உணரவில்லை.

நாட்டிலுள்ள அரசியல் கட்சிகள் அவை தமிழ் கட்சிகளாக இருந்தால் என்ன? சிங்களக் கட்சிகளாக இருந்தால் என்ன குறுகிய அரசியல் இலாபம் பெறும் நோக்கில் நாட்டு மக்களை இனரீதியாகப் பிரித்து செயற்படும் முறையை அவர்கள் கைவிடவேண்டும். நாம் பிரிந்து செல்லும் நாட்டைப் பார்க்கவில்லை. ஒன்றுபட்ட நாட்டையே பார்க்கவேண்டும்.

30 வருடங்களாகப் பின்னோக்கிச் சென்ற வட-பகுதியின் பயணத்தை இப்பொழுது அபிவிருத்திப் பாதையில் எமது பயணத்தில் முன்னோக்கிச் சென்று வருகிறோம்.

பிரிந்து நின்றோ, தனித்தனியாக நின்றோ எவரும் வாழமுடியாது. சிங்கள மக்களாயினும் சரி, தமிழ் மக்களாயினும் சரி, முஸ்லிம் மக்களாயினும் சரி, பறங்கி மக்களாயினும் சரி, யாராக இருந்தாலும் அவர்கள் எல்லோரும் ஒரு தாயின் மக்களே என்பதை உணரவேண்டும்.

> **இந்நாட்டில் இனபேதத்தையும், குலபேதத்தையும், மதபேதத்தையும் தூண்டிவிடாது எல்லா மக்களையும் ஒன்று சேர்ந்து வாழக்கூடிய சூழ்நிலையைக் கொண்டுவருவதுதான் எல்லா அரசியல் கட்சிகளினதும் முக்கியமான பொறுப்பாக இருக்கவேண்டும்.**

இந்நாட்டில் இனபேதத்தையும், குலபேதத்தையும், மதபேதத்தையும் தூண்டிவிடாது எல்லா மக்களையும் ஒன்று சேர்ந்து வாழக்கூடிய சூழ்நிலையைக் கொண்டுவருவதுதான் எல்லா அரசியல் கட்சிகளினதும் முக்கியமான பொறுப்பாக இருக்கவேண்டும்.

குறுகிய அரசியல் இலாபம் பெறும் நோக்கில் மக்களை இனரீதியாகவும், மதரீதியாகவும் பிரித்து செயற்படக்கூடிய முறை இல்லாதொழிந்து போகவேண்டும் என்று இத் தைத்திருநாளில் நான் கூறிவைக்க விரும்புகிறேன்.

இங்கு மேடையில் இருக்கின்ற எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றுபட்டு ஒருமித்த குரலில் தமது தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு அனைவரும் செயற்பட முன்வாருங்கள் என்று அழைப்பு விடுத்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைப் பொறுத்தமட்டில் உங்களுக்கென்று இருக்கக்கூடிய ஒரே ஒரு அமைச்சர் அவர்தான். ஆனால் அவர் உங்களுக்கு மட்டும்தான் அமைச்சர் என்று நீங்கள் எண்ணிவிடக்கூடாது. அவர் இந்நாடு முழுமைக்கும் அமைச்சர் என்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும்.

தமிழ் மக்களின் பாரம்பரிய கலை கலாசார நிகழ்வுடன் என்னை வரவேற்ற மாணவிகளின் நடனத்தைப் பார்த்தபோது அக்கலையின் மகத்துவத்தை என்னால் உணரமுடிந்தது.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். இத் தைத்திருநாளில் மக்கள் மத்தியில் நம்பிக்கை நிலை யாக இருக்கவேண்டும். சமாதானம் சகவாழ்வு, சமத்துவம், சௌபாக்கியம் எல்லாம் மலரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இத்தேசியப் பொங்கல் விழாவை ஏற்பாடு செய்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நான் பாராட்டுகின்றேன்.

ஆயிரக்கணக்கான மக்கள் மத்தியில் இவ்வாறு பல்வேறு விடயங்களை தெரிவித்திருந்த ஜனாதிபதி அவர்களின் உரையிலிருந்து போரினால் அழிந்த தேசத்தை அபிவிருத்தி செய்வதில் அக்கறையாக இருப்பதையும் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்காது தடுப்பதற்கும், நாட்டில் நடைபெற்று வருகின்ற குற்றச்செயல்களை இல்லாதொழிப்பதற்கும் அதிக அக்கறை செலுத்துவது தெளிவாகிறது. அவரது இந்தத் தீர்மானங்களை செயற்படுத்த வேண்டியதும், ஒத்துழைப்பதும் அனைத்துத் தரப்பினரதும் கடமையாகும். ❋



# கிழக்கின் அழிவும்

அமலன்

**தைப்பொங்கல்** திருநாள் கடந்த 15 ஆம் திகதியன்று கொண்டாடப்பட்டது. எனினும் இலங்கையில் உள்ள தமிழர்கள் இந்த திருநாளை கொண்டாடுவதற்கு இந்தமுறை இயற்கை இடம்கொடுக்கவில்லை. குறிப்பாக கிழக்கின் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலையில் ஏற்பட்ட வெள்ளம் காரண-மாக பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். தைப்பொங்கல் திருநாள் அன்று தமிழர்கள் மத்தியில் இருந்து கேட்கவேண்டிய, பொங்கலோ பொங்கல் என்ற கோசத்துக்கு பதிலாக அவலக்குரல்களும் ஆதங்கக் குரல்களுமே கேட்டன. ஏற்கனவே 2009 ஆம் ஆண்டு போரினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த வடக்கு மற்றும் கிழக்கின் மக்கள் அதன் பின்னர் தொடர்ச்சியாக இயற்கை அனர்த்தங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

மட்டக்களப்பை பொறுத்தவரை கடந்த 15 நாட்களுக்கு பின்னர் நேற்று தைப்பொங்கல் அன்றே சூரியனை அந்த மக்களால் காணக்கூடியதாக இருந்தது.

எனினும் அந்த சூரியனுக்கான தைப்பொங்கல் வழிபாட்டை மேற்கொள்ளும் அளவிற்கு அவர்களை தாக்கிய வெள்ளம் இடம்கொடுக்கவில்லை. மழை நின்று விட்டபோதும் வெள்ளம் வழிந்தோடாமை காரணமாக மக்கள் தமது வீடுகளுக்கு சென்று பொங்கல் வழிபாட்டை மேற்கொள்ள முடியாது போனது. ஏற்கனவே ஆழிப்பேரலை காரண-மாக வடக்குகிழக்கின் கரையோர மக்கள் பாதிக்கப்பட்டனர். தமது உறவுகளையும் காவுகொடுத்தனர். இதன் பின்னர் 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதியுத்தத்தின் போதும் அவர்கள் இடம்பெயர்ந்தனர். தமது சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்த இந்த மக்களில் இன்றும் கிழக்கின் சம்பூர் மக்கள் மீள்குடியேற்றப் படவில்லை. அவர்கள் கட்டைப்பறிச்சானிலும் கிளிவெட்டியிலும் தற்காலிகமாக வாழ்ந்து வருகிறார்கள். வடக்கிலும் வன்னி மற்றும் யாழ்ப்பாணத்திலும் மக்கள் இன்னும் மீள்குடியேற்றப்பட இருக்கின்றனர். வன்னியில் மீள்குடியேற்றப்பட்ட மக்களும் தமக்கான தேவைகள் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை என்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர். எனினும் பிரச்சினைகளை ஒரேயடியாக தீர்க்கமுடியாது. கட்டம் கட்டமாகவே தீர்க்கமுடியும் எனக்கூறி வரும் அரசாங்கம், மீள்குடியமர்த்தப்பட்டவர்களுக்காகப் பல்வேறு வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்து வருகிறது. இந்தநிலையில் வன்னியில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்களும் இந்த முறை தைப்பொங்கலை உரியமுறையில் சந்தோசமாக கொண்டாடவில்லை. அதற்குப் பதிலாக தமது உள்ளங்களிலே தைப்பொங்கலை நினைவுகூரவே அவர்களால் முடிந்தது.

இந்தநிலையில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணங்கள் சென்று சேரவில்லை என்ற குற்றச்சாட்டுக்களை அடுத்து அதையும் அரசாங்கம் சிறந்த முறையில் செயற்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது இதற்கிடையில் வடமத்திய மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக மன்னார் பிரதேசமும் பாதிக்கப்பட்டது. இந்தநிலையில் இந்திய அரசாங்கமும் இலங்கையில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணங்களை அனுப்பி வருகிறது.

இந்திய அரசாங்கத்தின் முதல் கட்ட நிவாரணம் இலங்கையை வந்துசேர்ந்துள்ளது. இரண்டாம் கட்ட நிவாரணப்பொருட்களும் வரவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கனேடிய அரசாங்கம் மற்றும் அமெரிக்க அரசாங்கம் ஆகியனவும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு உதவும் பணித்திட்டங்களை முன்னெடுத்துள்ளன.

இதனை தவிர பிரித்தானிய இளவரசர் சார்ல்ஸும் நிவாரணப் பொருட்களை அனுப்பிவைக்க இணக்கம் வெளியிட்டுள்ளார். இதற்கிடையில் யாழ்ப்பாணத்தில் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் தைப்பொங்கல் தேசிய விழா ஒன்றும் நடத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையில் இலங்கையில் உள்ளூராட்சி சபைகள் கலைக்கப்பட்டுள்ள நிலையில் அவற்றுக்கான தேர்தல் முனைப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனினும் கிழக்கு மாகாணம் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளமையால் அங்கு தேர்தல் வேட்புமனுக்களை தாக்கல் செய்யும் தினத்தை ஒத்திவைக்குமாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பு இலங்கையின் தேர்தல்கள் ஆணையாளரிடம் கோரியுள்ளது.

இதற்கு பதிலளித்துள்ள தேர்தல்கள் ஆணையாளர் இது தொடர்பில் ஜனாதிபதி யுடன் பேசி முடிவெடுப்பதாக தெரிவித்துள்ளார்.

சாதாரண தேர்தல் சட்டங்களின் ஊடாக இதனை செய்யமுடியாது. எனவே அவசரகாலச் சட்டத்தின் மூலம் இதனை மேற்கொள்ள ஜனாதி-பதியின் அங்கீகாரம் தேவை எனத் தேர்தல்கள் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார். இந்த சந்திப்பின் போது தமது சொந்த இடங்களில் குடியமரக் காத்திருக்கும் திருகோ-காணமலை சம்பூர் மக்களுக்கு அதிர்ச்சி செய்தியும் காத்திருந்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் குறிப்பிட்டார்.

அதாவது சம்பூர் என்ற கிராமம் இல்லை என்ற அடிப்படையில் அந்த மக்கள் திருகோண-மலை யுடன் இணைக்கப்பட்ட வாக்காளர் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் குறிப்பிட்டதாக சுரேஸ் பிரேமசந்திரன் தெரிவித்துள்ளார்.

எனினும் சம்பூர் கிராமம் அதியுயர் பாதுகாப்பு பிரதேசமாக உள்ளபோதும் அங்கு உயரதிகாரிகளின் அனுமதி யுடன் மக்கள் சென்று வரலாம் என உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளமையை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் இதன் போது சுட்டிக்காட்டியுள்ளனர். எனவே அது தொடர்பிலும் ஜனாதிபதி யுடன் பேச்சு நடத்தி பதிலை வழங்குவதாக தேர்தல்கள் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை தமிழ்க்கட்சிகளின் அரங்கம் என்ற பெயரில் இயங்கி வரும் தமிழ் கட்சிகள், தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடும் எண்ணத்தை கொண்டுள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார். அதற்கான இறுதி சந்திப்பு ஒன்று இடம்பெறவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

எனி னும்இதனை மறுத்துள்ள தமிழ்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமசந்திரன், சிவாஜிலிங்கம் வீணே கதை-களை பேசி வருவதாக குறிப்பிட்டுள்ளார். எனினும் புளொட், தமி ழர் விடுதலைக்கூட்டணி என்பன தமிழ்தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிட விருப்பம் வெளியிட்டுள்ளன.

# வடக்கின் அபிவிருத்தியும்



(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

# புத்தாண்டு இராசிபலன்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

கணித்து எழுதியவர்
செ.தேவசேனாதிபதி

## மகரம்

**(உத்தராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்)**

ஓயாத செயல்வேகமும், ஒடுங்காத ஊக்கமும் கொண்ட மகர ராசி அன்பர்களே!

இந்த 2011 ஆம் ஆண்டு தன் கரங்களில் உங்களுக்காகக் கொண்டு வந்திருப்பது என்ன? அறிய வேண்டுமா? வாருங்கள் கிரகங்களை அணுகுவோம். இந்த ஆண்டு முழுவதும் உங்கள் ராசிக்கு 3, 4 ஆம் இடங்களில் குருபகவான் சஞ்சரிக்கிறார். ராகுகேதுக்கள் ஆண்டின் முதற்பாதியில் முறையே 12,6 ஆம் இடங்களிலும், பிற்பாதியில் 11, 5 ஆம் இடங்களிலும் பவனி செல்கின்றனர். இந்த ஆண்டைப் பொறுத்தவரை உங்களுக்கு ராகுகேதுக்கள் தான் அட்சய பாத்திரங்களாக இருக்கின்றனர். குருவின் சஞ்சாரம் சரியில்லை. சனியின் இயக்கம் பரவாயில்லை. எல்லாவற்றையும் சேர்த்துப் பார்க்கும் போது நன்மையும் தீமையும் கலந்தே இவ்வாண்டு அமையும். ஆனபோதிலும் நன்மைகள் கொஞ்சம் தூக்கலாகவே இருக்கும்.

வாருங்கள் வாசகர்களே! நன்மைகள் எவை-யெவையென்று முதலில் பார்ப்போம். இலாபம் அதிகரிக்கும், நண்பர்களின் உதவியுண்டு. பாபம் தொலைத்திடலாம். பல புண்ணிய நதிகளில் நீராடி! வேகம் அதிகரிக்கும். புதிய வேலைகள் கைக்கு வரும். ஏக முதல்வனாம் இறைவனின் அருளுண்டு. ஆதலால், எந்தத் தடையையும் தாண்டிச் செல்ல வலிமையுண்டு. அரச அனுகூலங்கள் உண்டு. சிரசு முதல் பாதம் வரை புதுச் செயல்வேகம் ஊற்றெடுக்கும். உரசும் பகைகள் உறவாக மாறிவரும். சரச விளையாட்டில் தாளாத மகிழ்ச்சி வரும்.

பதவி உயர்வு வரும். நல்ல பணியிட மாற் றம் வரும். உதவி நூறு வரும். உற்ற துணை யாவும் வரும். மணமாலை மங்கலங்கள், மழலைப் பாக்கியங்கள் மனம் போலக் கிட்டுமென்பேன். பயண நலம் உண்டு. சயன சுகம் உண்டு. நயன பாசையிலே பேசுகின்ற நங்கையர்கள் நட்புண்டு.ஆடை ஆபரணங்கள் அணியணியாய் வாங்கிடலாம். ஓடையிலே தண்ணீர் போல் ஒரே சீராய் இயங்கிடலாம். மேடையிலே ஏறிடலாம். உங்கள் மேன்மையைக் காட்டிடலாம். எதிர்பாராத அதிர்ஷ்டங்கள், எத்தனையோ ஏற்படலாம். புதிததாச் செயல்தொடங்கிப் பொன்னான பலன் பெறலாம். சதிகாரப் பகைவர்களைத் தனியாளாய் வென்றிடலாம். அதிகாரத்தில் இருப்போரின் அன்பை நீங்கள் பெற்றிடலாம். இவை போன்ற இன்னும் பல நற்பலன்களை இந்த ஆண்டு நீங்கள் பெறமுடியும். இனி 3,4 ஆம் இடங்களில் சஞ்சரிக்கின்ற குருபகவான் கொடுக்கின்ற கெடுபலன்களையும் கூறிவிடுகிறேன். வீடு நிலம் சார்ந்த விசயங்களில் வில்லங்கம் ஏற்படலாம். தேடிப் போகும் விசயங்கள் திசைமாறிப்போய்விடலாம்.

சிறிய காரியங்களை முடிப்பதற்கும் பெரிய போராட்டத்தை மேற்கொள்ள வேண்டியிருக்கலாம். இப்படிப்பட்ட கெடுபலன்கள் நடந்த பலன் கிட்டுவதோடு வேண்டாத சில விளைவுகளும் ஏற்படலாம். சிறிய காரியங்களை முடிப்பதற்கும் பெரிய போராட்டத்தை மேற்கொள்ள வேண்டியிருக்கலாம்.இப்படிப்பட்ட கெடுபலன்கள் நடந்த போதிலும் நீங்கள் சமாளித்துவிடுவீர்கள். தவிரவும், குருவின் 4 ஆம் இடச் சஞ்சாரத்தால் கல்வி சார்ந்த பல்வேறு நன்மைகள் கிட்டும். குடும்பத்தில் குதூகலத்திற்குக் குறைவிருக்காது ஆக மொத்தம் 65% வரை நன்மைகளைப் பார்க்கலாம்.

## கும்பம்

**(அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்)**

பண்பு நலனும், அன்பு மனமும் கொண்ட கும்ப ராசி நேயர்களே!

இந்த ஆண்டு உங்களுக்கு என்னகொண்டு வந்திருக்கிறது என்பதை அறிய, வாருங்கள் கிரகங்களை ஆராய்ந்து பார்ப்போம். இந்த ஆண்டு முழுவதும் உங்கள் ராசிக்கு 2,3 ஆம் இடங்களில் குருபகவான் சஞ்சரிக்கிறார். சனி பகவானோ 14.01.2011 வரை உங்கள் ராசிக்கு 8 ஆம் இடத்தில் அஷ்டம சனியாகச் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறார். ராகுகேதுக்களாலும், குருபகவானாலும் இந்த ஆண்டு உங்களுக்குப் பெருமளவு நன்மைகள் நடைபெறும். அதே சமயத்தில் அஷ்டம் சனி தரும் அல்லல்களும் இடையிடையே நடக்கவே செய்யும். அஷ்டம சனியின் பாதிப்பு இந்த வருடம் பெரிதாக இருக்காது. வாருங்கள் முதலில் நற்பலன்கள் என்னவென்று பார்த்துவிடுவோம். செய்கின்ற தொழிலிலே தொய்வு நிலை மாறும். எய்கின்ற பாணமெல்லாம் இலக்கினைப் போய்ச்சேரும். வைகின்ற கூட்டமது வாழ்த்திடவே வந்து நிற்கும். பெய்கின்ற பேய்மழை போல் பெரு இலாபம் குவியும். இன்ப உலா சென்றிடுவீர். இனிய கனா கண்டிடுவீர். துன்பங்களை வென்றிடுவீர். துயரங்களைத் துரத்திடுவீர்.

கல்யாண யோகம் வரும். கனி மழலை யோகம் வரும். புல்லாக வாழ்வில் புறக்கணிக்கப்பட்டுக் கிடந்தோரும் தில்லாக எழுந்திருந்து, வில்லோடு அம்பாக விரைந்து செயல்பட்டு, வெற்றிகளைக் குவித்திடுவர். வீடு நிலம் வாங்கிடலாம். விசேசங்கள் நடத்திடலாம். காடுகரை திருத்திக் கைநிறையப் பலன்பெறலாம்.இனி சிட்டுப் போல் பறந்திடலாம். சில்லறையைப் பார்த்திடலாம். சிந்தை மகிழ்ந்திடலாம். விட்டுப்போன நண்பர்களும் விரும்பி வந்து சேர்ந்திடுவர். தட்டிப்போன வாய்ப்புகளும் தக்கபடி கிடைத்துவிடும். கண்டங்கள் விலகிவிடும். கஷ்டங்கள் அகன்றுவிடும். கொண்ட மனையாளால் குதூகலங்கள் நிரம்புவதுண்டு. வண்டி வாகனங்கள் வாங்குகின்ற யோகமுண்டு.

மோதல் இனியில்லை. முயற்சி பல வெற்றி பெறும். காதல் மலர்ந்திடலாம். காமரசம் பருகிடலாம். கோயில்குளம் சென்றிடுவீர். கோடி புண்ணியம் சேர்த்திடுவீர். நோயில் வீழ்ந்து பாயில் கிடந்தோரும் பராசக்தித் தாயின் அருளாலே தெம்பு அடைந்திடுவீர். தெளிவு பெற்று வலம் வருவர். இவையெல்லாம் நற்பலன்கள். அஷ்டம் சனியால் கெடுபலன்களும் நடைபெறலாம். அதற்காகப் பயப்படத் தேவையில்லை. சமாளித்துவிடலாம். சரிக்கட்டிக்விடலாம். சாதித்துவிடலாம். இறையுணர்வோடு, விழிப்புணர்வோடும் செயல்படுங்கள். பெருமளவு பிரச்சினைகள் வராமல் தவிர்த்து விடலாம். வந்தாலும் தப்பித்து விடலாம். வம்பு, வழக்கு, வீண்செலவு, அலைச்சல், ஆரோக்கியச் சீர்கேடு, காயங்கள், கண்டங்கள், கஷ்டங்கள், குழப்பங்கள், பிரிவினைகள், பிரச்சினைகள், காரியத் தடைகள், கௌரவக் குறைச்சல், தந்தையாரோடு மனவேறுபாடு, அவமானம், அல்லல்கள், எள்ளல்கள், இழிவுகள் என்று பல்வேறு வகைளில் துன்பங்கள் வந்திடலாம். இறைவனை நினைத்திருங்கள். எப்போதும் துதித்திருங்கள். குறைகளை அவன் களைவான். நம் கோரிக்கைக்கு நல்ல பலன் தருவான்.பல இன்னல்கள் ஏற்பட்ட போதிலும் இந்த ஆண்ட எப்படியும் 60 முதல் 20% வரை நன்மைகளை அடைந்திடுவீர்கள்.

## மீனம்

**(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)**

பெருந்தன்மையும், நன்நடத்தையும் கொண்ட மீன ராசி நண்பர்களே! 2011 ஆம் ஆண்டு உங்களுக்கு என்ன தரப்போகிறது என்பதைக் கிரகங்களிடம் கேட்டுப் பார்ப்போம். வாருங்கள் வாசகர்களே! இந்த வருடம் முழுக்கக் குருபகவான் உங்கள் ஜென்ம ராசியிலும் தனஸ்தானம் என்னும் இரண்டாமிடத்திலும் சஞ்சரிக்கிறார். சனி பகவானோ 14.01.2011 வரை ஏழாம் ஸ்தானத்தில் உலவுகிறார். ராகு கேதுக்கள் ஆண்டின் முதற்பாதியில் முறையே 10,4 ஆம் இடங்களிலும், பிற்பாதியில் 9,3 ஆம் இடங்களிலும் பவனி வருகின்றனர். குருபகவானின் இரண்டாமிடச் சஞ்சாரமும், ராகுகேதுக்களின் சஞ்சாரமும் இந்த ஆண்டு உங்களுக்கு அநேக நன்மைகளை வழங்கும். அதேவேளையில் சனியின் 7 ஆம் இடத்து சஞ்சாரமும், ராகுகேதுக்களின் சஞ்சாரமும் இந்த ஆண்டு உங்களுக்கு அநேக நன்மைகளை வழங்கும். முதலில் வருடம் முழுவதும் நடக்கப்போகின்ற நற்பலன்கள் எத்தகையவை என்று பார்த்துவிடலாம்.

தட்டிப்போன வாய்ப்புக்கள் நற்பலன்கள் எத்தகையவை என்று பார்த்துவிடலாம். தட்டிப் போன வாய்ப்புக்கள் தக்கபடி கிடைத்துவிடும். விட்டுப்போன நண்பர்கள் விரும்பி வந்து சேர்ந்திடுவர். அவப்பெயர் நீங்கிவிடும். அபாண்டப் பழிபோயொழியும், தவப்பயன் கிடைத்துவிடும். தடைகளெல்லாம் தகர்ந்துவிடும். வீடுமனை வாங்கிடலாம். வெற்றிகளைக் குவித்திடலாம். மாடுகன்று இலாபம் தரும். மகத்தான யோகம் வரும் தீர்த்த யாத்திரைக்குச் சென்று வருவீர்கள். மூர்த்திகள் பலரை வணங்கிச் சேர்த்திடுவீர் புண்ணியத்தை! கீர்த்தி பெருகும். கெடுதலெல்லாம் விலகும்! வார்த்தை ஜாலத்தால் வசப்படுத்துவீர் வாய்ப்புக்களை. சேமிப்பு அதிகரிக்கும். சேமங்கள் பல கிடைக்கும். பாதிப்பு ஏதுமின்றிப் பாக்கியங்கள் பெற்றிடுவீர். எண்ணம் போல் மாங்கல்யம்! இஷ்டம் போல் மணவாழ்வு! வண்ணமாய் வாழ்வு மாறும். வசதி பல கூடிவிடும். இவையெல்லாம் நற்பலன்கள். இனி ஜென்ம குருவாலும் ஏழாமிடத்துச் சனியாலும் நடைபெறக் கூடிய கெடுபலன்கள் எத்தகையவை என்று காண்போம்.

இந்தப் பாதகமான பலன்களெல்லாம் அப்படியே நடந்துவிடுமே என்று பயப்படத் தேவையில்லை. விழிப்புணர்வான செயற்பாடுகள் மூலமும், இறைவழிபாட்டின் மூலமும், இன்னல்களைக் குறைக்கவும் முடியும். தவிர்க்கவும் இயலும் என்பதை மறந்துவிடாதீர்கள். செய்யாத தப்புக்காக தலைகுனிய நேரிடலாம். ஒய்யார மங்கையரால் விசயங்கள் அம்பலம் ஆகிடலாம். சொந்தபந்த உறவுகள் சுடுசொல்லால் இகழ்ந்திடலாம்.

எதிர்பாராச் செலவுகளால் இன்னல்பட நேர்ந்திடலாம். அதிகார வர்க்கத்தால் அல்லல் வந்து சேர்ந்திடலாம். சதிகாரர் சூழ்ச்சியால் சங்கடங்கள் தோன்றிடலாம். முயற்சிகளில் முட்டுக்கட்டை விழுந்திடலாம். பயிற்சிகளால் பலன் இன்றிப் போய்விடலாம். அயர்ச்சி வந்து ஆளை அமுக்கிப் பிடித்திடலாம். உயர்ச்சி அடைய இயலாமல் ஓய்ந்துவிட நேரிடலாம்.

இப்படிக் கெடுபலன்கள் இருந்த போதிலும் 55% வரை நற்பலன்களை அடைந்தே தீருவீர்கள்.

---

காரணம், புகழையோ, இகழையோ கணிக்காத பெரிய ஆத்மா, காஞ்சிப் பெரியவர்.

போகங்களில் சிக்காத புனிதர் அவர்.

பக்தி மார்க்கத்திற்கும், ஞான மார்க்கத்திற்கும் பாலம் அவர்.

ஸ்ரீபகவத் பகவத் பாதாளுக்கும், ராமரானுஜருக்கும் இணைப்புப் பாலம் அவர்.

துறவிக்கு வேந்தன் துரும்பு.

துறவி என்பவன் யார்?

அவன் போகங்களைத் துறந்தவன்.

'மத்தியானம் என்ன சாப்பிடலாம்' என்று காலையிலேயே திட்டம் தீட்டாதவன்.

கைப்பிடி ஆவலிலும், அரை அழாக்குப் பாலிலும் ஆன்மாவையும், தேகத்தையும் பாதுகாப்பவன்.



பகுதி -154

# கண்ணதாசனின் அர்த்தமுள்ள இந்துமதம்

## - ஏழாம் பாகம் -

அவன் பெண்ணைத் தொட நேர்ந்தால் கல்லைத் தொடுவது போல் தொடுகிறான்.

மண்ணில் நடக்கும் போது, பகவான் விரித்த நடைபாதையில் நடப்பதாகக் கருதுகிறான்.

என் கடிகாரம் எங்கே?

என் பெட்டி எங்கே?

-என்ற வார்த்தைகளை அவன் உச்சரிப்பதே இல்லை.

'ரஜோ' குணத்துப் போகி, ஆன்மாவை அடியோடு ஒழித்து விட்ட வெறும் தேக சுக லொளகிக வாதி.

போகத்தை அறவே மறந்துவிட்ட துறவி. கடவுளையே தன் சேவைக்கு அழைக்கும் ஞானி.

போகம், முடிவாக ரோகத்தில் கொண்டு சேர்க்கம்.

யோகம், ஆரமப்த்திலேயே கைவரப் பெற்றால், அது போகத்தையும், ரோகத்தையும் தூங்கியெறிந்து விட்டுப் பகவானிடம் கொண்டுபோய்ச் சேர்க்கும்.

"இந்திரப்ரஸ்த நரகத்தின் கடைசி ஷ"த்ரிய அரசனான ப்ருதிவிராஜனுடைய சேனாதிபதிகளிலேயே 'சாமின்டராய்' என்று ஒருவன் இருந்தான். வட பக்கத்து முகம்மதிய அரசர்க்கெல்லாம் அவன் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் நடுக்கம் உண்டாகும்படி அவன் அத்தனை வீரமும், யுத்தத் திறமையும் கொண்டு விளங்கினான். அவனுடைய சரீர வலிமையை நிகரற்றதாகக் கொண்டாடினார்கள். அவனுக்குச் சாமுண்டி உபாஜனை உண்டு விரதங்கள், கண்விழிப்புக்கள், தியானங்கள், வியாயாமங்கள் இவற்றிலே தனது காலம் முழுவதும் கழித்தான்.

"அவன் உணவு கொள்ளும்போது பீமனைப் போல் அளவில்லாத பசியுடன் உண்பான் என்று சந்தக்கவி 'ப்ருதிவிராஜ் ரஸோ' என்னும் தமது காவியத்திலே எழுதியிருக்கிறார். பீமனுடைய பெயர்களில் 'விருகோதரன்' என்பதொன்று: அதாவது 'ஓநாய் வயிறுடையவன்' என்றர்த்தம். இது அவனுக்கிருந்த நேர்த்தியான பசியைக் கருதிச் சொல்லியது.

இக்காலத்தில் குறைவாக உண்ணுதல் நாகரீகமென்று. நம்மவர்களிலேயே சிலர் நினைக்கிறார்கள்.

"பெருந்தீனிக்காரன் என்றால் அவமதிப்பு உண்டாகிறது. சிரார்த்தத்திலே சோறு தின்று முடிந்தவுடன் எழுந்திருக்க முடியா-மல் கஷ்டப்படும் சில பிராமணர்த்தக் காரர்களைப் போல்சரியான பயமில்லாமல் உடம்பைக் கொழு கொழுவென்று வைத்துக் கொண்டு. நாக்கு ருசியை மாத்திரம் கருதிப் பெருந்தீனி தின்பவனைக் கண்டால் அவமதிப்புண்டாவது இயற்கையேயாம். புலிகளைப் போல் உடல் வலிமையும் அதற்குத் தகுந்த தீனியும் உடைய-வனைக் கண்டால் யாருக்கும் அவமதிப்பு உண்டாகாது. சாதாரணமாகப் பயணம் உண்டாகும். நானாவ-தமான விலையுயர்ந்த உணவுப் பொருட்களைத் தின்றால்தான் உடம்பிலே பலம் வரும் என்று சிலர் நினைக்கிறார்கள். இது தவறு காரசாரங்களும், வாசனைகளும் உண்டாக்கி ருசியை அதிகப்படுத்தும் வஸ்துகள் தேக பலத்திற்கு அவசியமில்லை. கேப்பைக்களி, கம்பஞ்சோறு இவற்றால் பலமுண்டாவது போல் பதிர்பேணியிலும் லட்டுவிலும், வெங்காச் சாம்பாரிலும் உண்டாகாது.

" சரீரத்தை வியர்க்க வியர்க்க உழைத்தால் நல்ல பசியுண்டாகும். நல்ல பசியாயிருக்கும் போது கேப்பைக்களியை வேண்டுமளவு தின்று சுத்த ஜயலத்தைக் குடித்தால் போதும். விரைவில் பலம் வந்து சேர்ந்துவிடும்.

"பிள்ளைகளை இஷ்டப்படி நீஞ்சுதல், மரமேறுதல், பந்தாட்டம் முதலிய விளையாட்டுக்களிலே போகவொட்டாத படி தடுக்கும் பெற்றோர். தம்மையறியாமலேயே மக்களுக்குத் தீங்கு செய்கிறார்கள்.

தொடர்ச்சி அடுத்த வாரம்...

# மரணம்

## ஒரு ஐக்கிய நிகழ்வு

எம்.கேஷிகன்

ஒரு மாதத்துக்கும் மேலாக நாட்டில் நிலவிய காலநிலை மாற்றம், பல்வேறு அனர்த்தங்களை ஏற்படுத்தியிருந்தது. கிழக்கு மாகாணம் முற்றாகப் பாதிக்கப்பட்டது. அடுத்தபடியாக மத்திய மாகாணம் பாதிக்கப்பட்டது. கிழக்கு மாகாணத்தில் பத்து இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் வெள்ளப் பாதிப்புக்களால் இடம்பெயர்ந்தனர்.

இவர்களில் சுமார் 26 பேர் பலியாகியிருக்கின்றனர். நாட்டின் ஏனைய பகுதிகளில் அனர்த்தம் காரணமாக ஆங்காங்கே நடந்த சம்பவங்களில் 22 பேர் பலியாகி இருக்கின்றனர்.

இந்த மரணங்களில் கண்டி கெட்டம்பே எனும் இடத்தில் நடந்த ஏழுபேரின் மரணம் ஒரு சோகமாக அமைந்தது. ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஏழுபேரின் மரணம் அந்தக் கிராமத்து மக்களுக்கு அதிர்ச்சிச் செய்தியாக அமைந்தது. தொடர்ச்சியாக அமைந்திருந்த ஐந்து வீடுகளின் மீது சுமார் நாற்பது அடி நீளமான பாறை வீழ்ந்ததால் இந்த அனர்த்தம் நிகழ்ந்தது.

ஜனவரி ஒன்பதாம் திகதி காலை பத்துமணி. காற்றுடன் கூடிய அடைமழை பெய்துகொண்டிருந்தது. அந்த நாள் ஒரு ஞாயிற்றுக்கிழமை என்பதால் எல்லோரும் வீட்டில் இருந்தனர். பிரத்தியேக வகுப்புக்களுக்குச் செல்லும் பிள்ளைகளும், சந்தைக்குச் செல்லும் ஆண்களும் வெளியில் சென்றுவிட்டனர்.

குடைபிடித்துக்கூட வெளியில் செல்லமுடியாத மழைகாரணமாக வீட்டில் இருந்தவர்கள் வாசல், ஜன்னல்களைக் கூட அடைத்துவிட்டிருந்தனர். அந்த ஐந்து வீடுகளும், ஒரு கல்மலையின் பக்கவாட்டிலயே அமைந்திருந்தது. அந்தக் கல்மலையின் ஒரு பகுதி வீடுகளின் பக்கம் துருத்திக்கொண்டிருந்தது. இப்படியே சுமார் 46 வருடங்கள் அந்தக் குடும்பங்கள் வாழ்ந்து வந்துள்ளனர்.

அந்தக்குடும்பத்தின் நம்பிக்கையெல்லாம் மலையின் ஒரு துண்டாக துருத்திக்கொண்டு அந்தப் பாறையால் தமக்குத் தீமை ஏதும் நடக்காது என்பதுதான். 46 ஆண்டுகாலமாக அந்த நம்பிக்கை பொய்யாகவில்லை.

ஆனால் அன்று மாறியிருந்த "லாநிணா" காலநிலை அந்தக் குடும்பங்களின் நம்பிக்கையைப் பொய்ப்பித்துவிட்டது. 10.30 மணிபோல் அந்தப் பாறை அப்படியே அந்த ஐந்து வீடுகளின் மீதும் சத்தமில்லாமல் சரிந்துவிட்டது. வீழ்ந்த பாறை சொல்லிவைத்தது போல நான்கு துண்டுகளாக உடைந்துவிட்டிருந்தது. வீட்டின் பின்பகுதி, மத்திய பகுதிகளின் மீது பாறை விழுந்தது. முன்பகுதியும் சிதைந்து போயிற்று. அயல் வீடுகளிலிருந்தவர்கள் எழுப்பிய அவலக்குரல் கேட்டு கிராமமக்கள் கூடிவிட்டார்கள்.

இடிபாடுகளுக்கு நடுவே இருந்தும் ஒருவரின் அபலக்குரல் கேட்டது. என்ன செய்வது என்று தெரியாமல் கிராம மக்கள் திகைத்து நிற்கையில் செய்தியறிந்து இராணுவத்தினர் மீட்புப்பணிக்காக வந்து சேர்ந்தனர். அதற்குள் ஊர் பிரமுகர் ஒருவர் இடிபாடுகளுக்குள் நுழைந்து சிறுமி ஒருவரை மீட்டிருந்தார். இன்னொரு வயோதிப மாது ஒருவரையும் மீட்டார். அதற்கு மேல் அவரால் எதுவும் செய்ய முடியவில்லை. இராணுவத்தினர் முயற்சித்தனர். இடிபாடுகளுக்குள் இருந்து முனகல் சத்தம் கேட்ட திசையில் இடிபாடுகளை அகற்றிப் பார்த்தனர். சிறுவன் ஒருவன் அகப்பட்டிருந்தான். அவனையும் இராணுவத்தினர் மீட்டிருந்தனர். ஏற்கெனவே மீட்கப்பட்ட வயோதிபத்தாய் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்படும் வழியில் இறந்துவிட்டார் என்ற செய்தி அங்கு கூடியிருந்தவர்களுக்குக் கிடைத்தது. இராணுவத்தினர் முயற்சி செய்து இன்னுமொரு யுவதியையும் மீட்டனர். அதற்கு மேல் அவர்களாலும் எதுவும் செய்யமுடியவில்லை.

பலபேர் இந்தக் கற்பாறைக்குள் அகப்பட்டிருப்பதாகக் குடும்ப அங்கத்தவர்கள் அழுதுகொண்டு அங்கும் இங்குமாக ஓடினார்கள். கூடியிருந்த மக்களும் அழுததால் மனித ஓலம் வானுயர்ந்தது.விழுந்து கிடக்கும் பாறைகளை மனிதர்களால் உருட்ட முடியவில்லை. உடனடியாக இரண்டு 'பெக்கோ' கனரக வாகனங்கள் கொண்டுவரப்பட்டது. அவற்றாலும், அந்தப்பாறைகளை அசைக்க முடியவில்லை. பின்னர் பாறையை வெடி வைத்துப் பிளந்தனர். அதைத் தொடர்ந்து நான்குபேரின் உடல்கள் அகழ்ந்து எடுக்கப்பட்டது. சுமார் ஒரு மணியளவில் தொடங்கப்பட்ட அகழ்வுப் பணிகள் மாலை ஆறுமணிவரை தொடர்ந்தது. நான்கு சடலங்கள் மட்டுமே எடுக்க முடிந்தது.

மழை விட்டபாடில்லை. இரவுப் பொழுது காரணமாக அகழ்வுப் பணிகள் நிறைவுக்கு வந்தன. இருந்தபோதும் மேலும் மூவர் கற்பாறைகளுக்குள் அகப்பட்டிருக்கிறார்கள் என்று குடும்பத்தவர்கள் அழுதனர். மிஞ்சிய குடும்ப உறுப்பினர்கள் வீடு, மாற்று உடை, உணவு இல்லாமல் தெருவில் நின்றனர். கெட்டம்பே விகாரையில் அடைக்கலம் கொடுத்தார் அதன் விகாராதிபதி. அந்தக் கிராமத்தில் வாழ்ந்த ஐந்து தமிழ் குடும்பமும், விகாரையின் உற்சவகாலங்களில் தமது பங்களிப்புக்களையும் வழங்கியதோடு, விகாராதிபதியுடன் நெருக்கமான உறவுகளையும் பேணி வந்துள்ளனர். ஆகையால் அவர்களுக்கு உதவவேண்டிய பொறுப்பை விகாராதிபதி எடுத்துக்கொண்டார்.

விகாரை மண்டபமும், சுற்றுப்புறமும் மரணவீடாகவே காட்சி தந்தது. உறவுகளை இழந்து அழுதுபுரளும் குடும்பத்தவர்களுக்கு எவ்வாறு ஆறுதல் சொல்வதென்று தெரியாமல் கிராம மக்கள் ஆங்காங்கே நின்றனர்.

விகாரையில் அடைக்கலம் கொடுக்கப்பட்ட தமிழ் மக்களை, பிரதமர் தி.மு. ஜெயரத்தின பாராளுமன்ற உறுப்பினர்கள், மத்தியமாகாண முதலமைச்சர், கண்டி நகரபிதா, மாநகரசபை உறுப்பினர்கள், வர்த்தகப் பிரமுகர்கள் என அனைவரும் வருகை தந்து பார்வையிட்டனர். ஆறுதல் சொன்னார்கள், உதவி செய்வதற்கான வாக்குறுதிகளை வழங்கினார்கள். அந்த மக்கள் சார்பில் பேச எவரும் இல்லாதபடியால் அந்த மக்கள் சார்பில் விகாராதிபதியே பேசினார்.

பாதிக்கப்பட்ட மக்களின், நண்பர்கள், உறவினர்கள் என்று நூற்றுக்கணக்கானவர்கள் வந்து போனதால் விகாரை வளாகம் மக்கள் கூட்டத்தால் அலைமோதியது.


அடுத்த நாள் மீண்டும் அகப்பட்டிருப்பவர்களைத் தேடும் பணிகள் ஆரம்பமானது.

மழையும் தொடர்ந்து பெய்தது. பாறைகளைத் துண்டுகளாக உடைத்து அகற்றுவதில் அதிகமான படையினர் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். குடும்ப அங்கத்தவர்களின் துணையோடு வீடுகளின் அமைப்பை அடையாளம் கூறச் சொல்லி தேடிப்பார்த்தபோது, காலை ஒன்பது மணிக்கு ஆரம்பமான அகழ்வுப் பணி மாலை நான்கு மணிக்கு நிறைவடைந்து,அதற்கிடையே மிஞ்சியிருந்த மூவரின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டது. அதில் சிறுவன் ஒருவனின் உடல் தலையில் இலேசான காயங்களுடனும், கால் ஒன்று முறிந்த நிலையிலும் மீட்கப்பட்டது. வைத்தியர்களின் அறிக்கையின்படி அந்தச் சிறுவன் முதல்நாள் மீட்புப் பணிகள் நிறைவடையும் நேரம்வரை உயிருடன் இருந்திருக்கலாம். பின்னர் சுவாசத்தடை ஏற்பட்டும், இரத்தம் வெளியேறியதாலும் மரணமாகி இருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் செய்தி மீட்புப் பணியில் ஈடுபட்ட படையினருக்கு கவலையளித்தது. பாறையை அகற்றி மீட்கமுடியாமல் போனது. ஒருபக்கம், கூடியிருந்தவர்களின் அழுகைச் சத்தத்தில் அந்தச் சிறுவன் ஒருவேளை முணகி இருந்தாலும் அது கேட்கவில்லை என்பதும் வேதனையை அதிகப்படுத்தியது. ஏழுபேர் மரணமானவர்கள், மூவர் காயமடைந்தவர்கள், மிகுதியானவர்கள் விகாரையில் தஞ்சமடைந்துள்ளனர். இறுதிச்சடங்குகள் மூன்றாம் நாள் நடைபெறும். அரசு செலவுகளை பொறுப்பேற்கும் என்று உறுதி செய்யப்பட்ட தகவல்களோடு அடுத்தநாள் பொழுது விடிந்தது.

காலையில் விகாராதிபதி தலைமையில் இறுதிக் கிரியைகள் நடைபெற்றது. அதில் உரையாற்றிய விகாராதிபதி கூறிய ஒருவிடயம் முக்கியமானது. அதாவது இந்த மக்களை இங்கே தங்கவைத்தது தவறு என்றும், ஒரு நாளும் இல்லாத நடைமுறையாக விகாரையில் சடலங்களை வைத்து இறுதிக்கிரியை நடத்துவதும் கண்டிக்கப்பட வேண்டியதென்றும் ஒருவர் தொலைபேசியில் தொடர்புகொண்டு கூறியதாகவும் அதற்குத் தான் பதிலளிக்கும் போது, பௌத்தம் மனித காருண்ணியத்தைத்தான் போதிக்கின்றது என்றும், எல்லாம் இழந்து நிற்கும் மக்களுக்கு உதவுவது தனது கடமை என்றும், அவர்கள் தமிழர்களா, சிங்களவர்களா, முஸ்லிம்களா என்று பார்க்கவில்லை. எவரை வெட்டினாலும் சிவப்பு இரத்தமே வரும் என்பதால் நான் பேதம் பார்க்கவில்லை என்று பதிலளித்ததாகக் கூறினார். அவர் அப்படி கூறியதோடு பாதிக்கப்பட்ட மக்கள் வரை நன்றிப்பெருக்கோடு பார்த்தனர்.

விகாரையின் சரித்திரத்தில் மரண நிகழ்வொன்றை நடத்துவது முதல் தடவை என்றும் அதற்கான முழுப்பொறுப்பையும் தானே எடுத்துக்கொள்வதாகவும் அவர் கூறினார். கிரியைகள் முடிவடைந்தது. கண்டி மயானத்தை நோக்கி பிரதேசப் பெட்டிகள் ஏழும் ஊர்ப்பிரமுகர்களால் எடுத்துக்செல்லப்பட்டது.





(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)



உள்நாட்டுக் போர், சூறாவளி, அடைமழை, வரட்சி இதுபோன்ற செயற்கை மற்றும் இயற்கை இடர்களுக்கு ஏற்கனவே முகம் கொடுத்துள்ள கிழக்கு மாகாண மக்கள் மீண்டும் ஒரு முறை மீள்எழும்ப வேண்டியுள்ளது.

நிலபுலன்கள், தொழிற்துறைகள், கால்நடைகள், வீடுவாசல்கள் என்று எல்லாவற்றையுமே கிழக்கு மக்கள் சமீபத்தில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தினால் மீண்டுமொருமுறை இழந்திருக்கிறார்கள்.

கடந்த ஒரு மாத காலமாக கிழக்கு வானம் அடைமழையினால் இருள் கவ்வியிருந்ததால் மக்கள்

களனி விளைந்தால் நாடு செழிக்கும் என்ற எதிர்பார்ப்பு தவறிப்போயுள்ளதால் சேற்றில் கால் பதித்த இப்போது விவசாயிகள் சோற்றில் கைவைக்க முடியாமல் திண்டாடுகிறார்கள். களனி விளையாதது விவசாயி- களை மட்டுமல்ல ஒட்டுமொத்தமாக நாட்டையே ஆட்டங்காணச் செய்துள்ளது.

நாடு முழுவதுமாக சமீபத்திய இயற்கை இடர் பாதிப்புக்களை ஏற்படுத்தியிருந்த போதிலும் ஒப்பீட்டளவில் மட்டக்களப்பு



# கிழக்கில் மழை

## ஒன்பது இலட்சம் அகதிகள்

கிருபா-ஜனோ
ஹுஸைன் பின் ஹமீட்

## தொடர்பற்ற கிராமங்கள்

## மந்தகதியில் நிவாரணம்

மாவட்டமே அடைமழை மற்றும் பெரு வெள்ளத்தினால் மிக மோசமான இழப்புக்களுக்கு முகம் கொடுத்து சவால்களை எதிர்கொண்டுள்ளது.

இருட்டறைக்குள் வாழ்வது போன்று காலம் கழிக்க வேண்டியதாகிவிட்டது. டிசெம்பர் 14ஆம் திகதி தொடங்கிய அடை மழையினால் சூரிய வெளிச்சம் அற்றுப்போயிருந்த கிழக்கு வானம் ஜனவரி 13ஆம் திகதியன்றுதான் சரியாக ஒரு மாதத்தின் பின்னர் முதன்முறையாக வெளுத்தது.

ஒரு மாத காலமாக இடி மின்னல், அடைமழை, பெருங்காற்று, கடுங்குளிர், காரிருள் என்பனவற்றை அனுபவித்து வதைபட்ட மக்கள் ஜனவரி 13ஆம் திகதி சூரியனைக் கண்டதும் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. தொடர் அடைமழையினால் கடந்த ஒரு மாத காலத்தில் கிழக்கு மக்கள் மூன்று முறை சாதாரண வெள்ளத்தையும் கடைசியாக வரலாற்றில் 1957ஆம் ஆண்டில் ஏற்பட்டது மாதிரியான பெருவெள்ளத்தையும் சந்திக்க வேண்டியிருந்தது.

இதன் காரணமாக கிழக்கில் வாழும் மக்களில் பெரும்பாலானோர் இனமத பேதமின்றியும் வறியவர் வசதி படைத்தோர் என்ற வேறுபாடு இல்லாமலும் எல்லோருமே ஏதோ ஒரு வகையில் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

கடந்த 25 ஆண்டு காலமாக இடம்பெற்று வந்த உள்நாட்டு யுத்தத்தினாலும் சுனாமி கடற்பேரலைத் தாக்கத்தினாலும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்த கிழக்கு மக்கள் சமீப காலங்களுக் குள்ளாகத்தான் அந்த பாதிப்பு களில் இருந்து ஓரளவாவது மெல்ல மெல்ல மீண்டெள முடிந்தது.

25 வருடங்களுக்கு மேலாக தமது நிலபுலன்களுக்குச் சென்று விவசாயம் செய்ய முடியாதிருந்த தமிழ் முஸ்லிம் சிங்கள விவ சாயிகள் இம்முறைதான் இன மத பேதமின்றி கூட்டாகவும் தனி யாகவும் பரந்தளவில் விவசாயச் செய்கையில் ஈடுபட்டார்கள். காடு மேடு மூலைமுடுக்கென்று எங்குமே விவசாயிகளின் கால் பட்டதால் பச்சைப் பசேல் என்று பயிர்ச்செய்கை கண்ணுக்குக் குளிர்ச்சியாய் வளர்ந்திருந்தது.

இந்த முறை பெரும்போகச் செய்கைக்காக விவசாயிகள் பல பிரயத்தனங்களை மேற்கொண்டு சிரமங்களையும் பொருட்படுத்தாது கமச் செய்கையில் ஈடுபட்டார்கள். வங்கிகளிலும் வசதி படைத்தோரிடமும் கூட வறிய விவ சாயிகள் கடன்பட்டுத்தான் பயிர்ச் செய்கை மேற்கொண்டிருந்தார்கள்.

விதைப்பு வேலையும் சேனைப் பயிர்ச்செய்கையும் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப நாட்களில் விவசாயிகள் வான்மழையை எதிர்பார்த்து தவம் கிடந்தார்கள். வாடிப் போகும் பயிருக்கு ஒரு துளி வான்மழை பெய்யாதா என வானத்தைப் பார்த்து ஏங்கினார்கள். ஓடும் மேகங்கள் இந்தப் பக்கம் வரக்கூடாதா என அங்கலாய்த்தார்கள், பிராத்தனையிலும் ஈடுபட்டார்கள். முந்திக் கொண்டு விவசாயத்தில் ஈடுபட்டவர்களுக்கு கடைசியில் ஏக்கப் பெருமூச்சுதான் மிஞ்சியது. மழை இல்லாது பலரது சேனைப் பயிர்ச்செய்கையும் நெல் வயல்களும் பிஞ்சுப் பருவத்தில் கருகிப் போன- தால் தமது விவசாயத்தை கைவிட வேண்டியதாயிற்று.

எனினும் நாளடைவில், அதாவது ஒக்டோபர் மாத கடைசியில் வாக்கில் மழை பெய்ய ஆரம்பித்ததால் எஞ்சி இருந்த விவசாயம் தளிர்விடத் தொடங்கியது. மெல்ல மெல்ல தூறத் துவங்கிய மழை டிசெம்பர் நடுப்பகுதியிலிருந்து அடை மழையாகி, வலுவடைந்து தன் உக்கிரத்தைக் காட்டத் தொடங்கியது. அதன் வெளிப்பாடாக வரலாற்றில் பதியப்பட வேண்டியதாக இத்தகைய பேரழிவையும் துயரமான வாழ்க்கையையும் இந்த இயற்கை இடர் விட்டுச்சென்றுள்ளது.

கால்நூற்றாண்டு காலமாக இடம்பெற்ற போரினால் எல்லாவற்றையும் இழந்து ஓட்டாண்டியாகிப் போன மக்கள் இப்போது பயங்கரவாதம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதால் இம்முறை பெருத்த உற்சாகத்தோடு கடன் பட்டும், எஞ்சியிருந்ததை முதலீடு செய்தும் விவசாயத்தில் ஈடுபட்டார்கள்.


பட்டி தொட்டி எங்கும் மகிழ்ச்சிப் பிரவாகம் களைகட்டியிருந்தது. ஆனால் அந்த மகிழ்ச்சி நீண்ட நாள் நிலைக்கவில்லை. அறுவடை வீட்டுக்கு வந்து சேர்வதற்கும் ஊர் கலகலப்பாக இருப்பதற்கும் நாடு செழிப்பதற்கும் தோதாக இயற்கை இடம் தரவில்லை. பாதியிலேயே பயிர்ச் செய்கை பாழாகிப் போனது. காடு கரையெல்லாம் கரை புரண்டோடிய வெள்ளம் களனிக ளையும் தோட்டம் துரவுகளையும், தொழிற்துறைகளையும் ஊர்களையும் புரட்டிப் போட்டுள்ளது.

அறுவடைக்குத் தயாராகி இருந்த நெல் வயல்களெல்லாம் பெரும் வற்றாத நதிகளைப் போன்று காட்சியளித்தன. வாரக்கணக்கில் இந்நிலைமை தொடர்ந்தது. இதனால் வயல் நிலங்கள் சேறும் சகதியு மாகி அமிழ்ந்து போயுள்ளதைக் காணமுடிகிறது. கடன் பட்டும் கையிலிருந்ததை முதலீடு செய்தும் விவசாயத்தில் ஈடுபட்டவர்களைப் பெருவெள்ளப் பாதிப்பு மீள முடியாத பாதாளத்தில் தள்ளியுள்ளது.

உயிரிழப்புகளும் உடமை அழிவுகளுமே ஏராளம். இதுவரை யில் அறிவிக்கப்பட்டதின் படி நாடு பூராகவும் வெள்ளத்திற்குப் பலியான 38 மரணங்களில் 18 மரணங்கள் மட்டக்களப்பில் இடம் நிகழ்ந்திருக்கின்றன. இதனை விட பாதிப்புக்களாக விவசாயம், வியாபாரம், மீன்பிடி, உற்பத்தி, தொழிற்துறை, மின்சாரம், போக்கு வரத்து, நீர்ப்பாசனம் என்று ஒட்டு மொத்தத்தில் எல்லாமே அழிவடைந்திருக்கிறது.

நாட்டில் பாதிக்கப்பட்ட நாலு இலட்சம் ஏக்கர் வயல் நிலங்களில் மட்டக்களப்பில் மாத்திரம் சுமார் ஒரு இலட்சம் ஏக்கர் செய்கை பண்ணப்பட்ட வயல் நிலங்கள் வெள்ள நீரில் அமிழ்ந்து நாசமாகியுள்ளன. தை பிறந்தால் வழி பிறக்கும் என்று எதிர்பார்த்திருந்த விவசாயிகள் தை பிறந்துள்ள போதிலும் அவர்களது வாழ்வாதாரமும் வருமானம் ஈட்டும் வழிகளும் மூடப்பட்டுள்ளதால் இப்பொழுது அவர்கள் தலையில் கை வைத்துத் திண்டாடுகிறார்கள்.

கடன்பட்டும்,தமது நகை நட்டுக்களை அடகு வைத்தும் விவசாயம் செய்தவர்களின் கதி அதோ கதியாகியுள்ளது. வீடு வாசல்களில் வெள்ளம் விட்டுச் சென்ற சேறு சகதிகளையும் குப்பை கூழங்களையும் ஓரிரு நாட்களுக்குள் அல்லது ஓரிரு வாரங்களுக்குள் அகற்ற முடிந்தாலும் மக்களின் பொருளாதாரத்திற்கு,குறிப்பாக விவசாயிகளுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களிலிருந்து அவர்களை மீட்டெடுப்பதுதான் சிரமமான விடயமாக இருக்கப் போகிறது. ■



# அவலம் சுமந்த அகதிகள்

அத்திமுகத்தோன்

அவலம் 14

"எங்கை மச்சாள் அண்ணையை வழியனுப்பிப்போட்டு வாறியள்.. போராட்டத்துக்கே?" சகலன் சிரித்தபடி கேட்டான்.

மச்சாள் அவனை முறைத்துப் பார்த்துவிட்டுக் கூறினாள்.

"மாத்தளன் பக்கம் அம்மாவீட்டுப் பக்கம் போட்டு வாறன் எண்டிட்டுப் போறார்."

"அது சரி... என்ர சம்சாரம் இண்டைக்கு என்ன கறி வைச்சனிங்கள்...?"

"ச்சா...! அந்த மாதிரிக் கறியள். கள்ளிவாய்க்கு நாலு கருவாட்டுத்துண்டு சுட்டுவைச்சிருக்கிறன். ஒரு பிடிபிடியுங்கோ. நல்லாப் போட்டுத்தாறன்..."

மைத்துனி கூறிவிட்டுச் சிரிக்க, அவளோடு சேர்ந்து மைத்துனியும் சிரித்தாள்.

"என்ன காணும்... ரண்டு பேருக்கும் சிரிப்பு வேண்டிக்கிடக்குது...?" சகலன் சற்றுக் கோபத்தோடு கேட்டான்.

"பின்ன என்ன? சனங்கள் இடம்பெயர்ந்த நிலையில இருக்க இடமில்லாம சாப்பாட்டுக்கும் வழியில்லாமல் நிற்குதுகள், திரியுதுகள். நீங்கள் எந்த உலகத்தில இப்ப இருக்கிறயள்...?" சகலனை மச்சாள் கேட்டாள்.

"ஆர்.. நானோ...! ஹி...ஹி...ஹி...ஹி நான் இப்ப தமிழ் ஈழத்தில நிற்கிறன். ஏன்டி பெண்டுகளே! முட்டையெண்டாலும் பொரிச்சு வையாதையுங்கோவன்" சகலன் அழாத குறையாகக் கேட்டான்.

"முட்டையிடுகிற கோழி ரண்டும் அடைகிடக்குது. மற்றது மூண்டும் கன்னிக் கோழியள். முட்டையிட இன்னும் இரண்டுமாசம் போகவேணும்..."

"என்ன கரைச்சலடா இது...? சரி... சரி, கருவாட்டுத் துண்டோடையாவது சோத்தைத் தா..." சகலன் கூறிவிட்டு, குசினி வாசலில் அமர்ந்துகொள்ள சகலனின் மனைவி சாப்பாட்டைக் கோப்பையில் போட்டுக்கொண்டு வந்து கொடுத்துவிட்டு, குசினிக்குள் சென்றாள்.

சகலன் சாப்பிடுவதற்காய் சோற்றுக்குள் கை வைத்த போது.... பக்கத்தில்... மிகமிக அருகில், கண் இமைக்கும் நேரத்திற்குள் ஒரு பாரிய அதிர்வெடி எழுந்த நேரத்திற்குள் அதே கணத்தில்... மிகையொலியும் எழுந்து மறுவிநாடி அடங்கிக்கொண்டது.

"என்ர ஐயோ..." என்று சகலன் குளறியபடி.. சோற்றுக் கோப்பையை குசினி முகட்டை நோக்கி மேலே எறிந்துவிட்டு, முற்றத்துக்குப் பாய்கையில்.... முற்றத்தில் குழந்தைகள் விளையாடிய பின் எறிந்துவிட்டிருந்த சிறிய கிரிக்கெட் பந்தின் மீது கால் வைத்ததில் சறுக்குப்பட்டு நிலத்தில் விழ, குசினிக்குள் இருந்து அவனுக்குப் பின்பக்கமாக ஓடிவந்த அக்காளும்-தங்கையும் அவனில் தட்டுப்பட்டு, அவனோடு சேர்ந்து மூவருமாய் விழ... எடி நாசமறுப்பாளவையே... என்று திட்டடியபடி சகலன் மீண்டும் எழுந்து, இடுப்புப்பிடி விலகின சாரத்தைத் தூக்கியபடி... மூவருமாக ஓடினார்கள் பங்கர் வாசலை நோக்கி.

எதிர்பாராத நிலையில் நிகழ்ந்துவிட்ட குண்டுத்தாக்குதலினால் எல்லோரும் நிலைகுலைந்து போனார்கள். பங்கருக்குள் சகலனின் பிள்ளைகளோடு அவனது குழந்தையும் இருந்தது. அக்காமார் குறுணிக் கற்களில் 'கொக்கான் விளையாட்டு' விளையாடுவதைப் பக்கத்தில் இருந்தவாறு வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த அவனது குழந்தை வெடியதிர்வின் நிமித்தம் வீறிட்டுக் கத்தத் தொடங்கியது. பங்கருக்குள் ஓடிவந்த அவள், அதிர்ச்சியில் அழும் தனது குழந்தையை வாரி அணைத்துக் கொண்டாள்.

சகலனுக்கு நெஞ்சடைப்பு ஏற்பட்டுவிட்டது. உயரம் குறைந்த அந்தப் பங்கருக்குள், நிமிரமுடியாத நிலையில் சகலன் நிமிர்ந்து படுத்திருந்தபடி... மூச்சு இழுந்து விடுவதற்கு மிகவும் சிரமப்பட்டுக்கொண்டிருந்தான். சகலனின் மனைவி அவனது நெஞ்சுப் பகுதியை இரு கைகளாலும் சூடு உண்டாகும்படி மேலும் கீழுமாகத் தேய்த்துக்கொண்டிருந்தாள்.

"என்னடி தங்கச்சி.... ஆளுக்கு ஒரு மாதிரிக் கிடக்குது...." அக்காள் ஒரு வித கலவரத்துடன் தங்கையைக் கேட்டாள்.

"உந்தாளுக்கு உப்பிடித்தான். பிறசர்க்காரன். ஏதும் அதிர்ச்சியெண்டா இரத்தம் எக்கச்சக்கமாய் ஓடத்தொடங்கிடும்..." தங்கை சாதாரணமாகவே கூறியபடி, சகலனின் மார்பை தேய்த்துக்கொண்டிருந்தாள்.

"எப்பன் சுடுதண்ணி எடுத்துக்கொண்டு வரட்டே...?" அக்கா கேட்டாள்.

"சீச்சி... கிபிர்க்காரன் திரும்பவும் வந்து குத்தினாலும்... நீ சும்மாயிரு அக்கா. அந்தாள் எப்பன் செல்ல எழும்பியிடும்."

அவள் எதுவும் கூறவில்லை. சகலனின் பலமும்-பலவீனமும் தெரிந்த நிலையில், அதற்கேற்றவாறு அனுசரித்துப்போகும் தன் தங்கையை அனுதாபத்தோடு பார்த்தாள். தான் விரும்பினவனையே உரித்தாக்கிக்கொண்டதில் ஏற்பட்ட மகிழ்ச்சியும் பெருமையும், சகலன் குடிக்க ஆரம்பித்துவிட்ட நாட்களில் இருந்து தொலைந்து போய்விட்டதை அக்காவால் உணர முடிந்தது.

சகலனின் பிள்ளைகளும் அலட்டிக் கொள்ளாமல் மீண்டும் "கொக்கான்" விளையாட்டில் ஈடுபட்டிருப்பதைப் பார்த்து. சகலனின் நெஞ்சடைப்பு வருத்தம் அவர்களுக்கு ஒரு சர்வசாதாரணமாகி விட்டிருக்கிறது என்பதை அவள் விளங்கிக்கொண்டாள்.

குண்டு வெடித்த இடத்திலிருந்து ஒலித்த கூக்குரல்கள் இப்போது ஓய்ந்துவிட்டிருந்தன. வாகனங்கள் சில போவதும்; வருவதுமான ஒலிமட்டும் அவர்களுக்குக் கேட்டுக்கொண்டிருந்தது.



சகலனுக்கு இப்போது மூச்சு சீராக இயங்கத் தொடங்கியதும், சகலனின் மனைவி பங்கரை விட்டு வெளியே வந்தாள். தங்கை வெளியே செல்வதைக் கண்டதும், அவளும் தன் குழந்தையை சகலனின் பிள்ளைகளோடு இருத்திவிட்டு வெளியே வந்தாள். குழந்தை விளையாட்டை வேடிக்கை பார்க்கத் தொடங்கியது.



"எடி அக்கா! கடற்புலிகளின்ர பேசுக்கு அடிச்சிருக்கிறாங்களடி..." தங்கை கூறிக்கொண்டே முன்னால் நடந்துபோய் குசினி அருகோரம் நின்றபடி.... தாக்குதல் நடந்த இடத்தைப் பார்த்தாள்.

மக்களின் குடியிருப்புகளுக்கு நடுவில் அமைக்கப்பட்டிருந்த அந்தக் கடற்புலிகளின் முகாம், இலக்குத் தவறாத துல்லியமான தாக்குதலில் சின்னாபின்னமாகிப் போயிருந்தது. களத்தில் காயப்பட்டவர்களைப் பராமரிக்கும் இடமாகவும் சாவடைந்தவர்களை உரிய இடத்துக்கு அனுப்பும் செயற்தளமாகவும் இயங்கிய அந்த இடம் இப்போது கருகிப் புகைந்துகொண்டிருந்தது. குண்டின் சிதறல்கள் அங்கு வளர்ந்து நின்ற தென்னை மரங்களைத் துளைபோட்டுச் சென்றதில், பலமரங்கள் முறிந்து முகாம் கொட்டில்களுக்கும் மேல் விழுந்ததில் சிலர் உயிரிழந்திருந்தனர். பலரது உடல்கள் மிகவும் சிதைந்து போன நிலையில், உரப்பை ஒன்றை விரித்துவிட்டு அதில் கை, கால்கள், தொடைச் சதை, குடல்கள், தலையென ஒவ்வொன்றாகப் பொறுக்கிப் போட்டுக் கொண்டிருந்தான் புலிச்சீருடை அணிந்த ஒருவன்.

"எடி தங்கச்சி... அங்கை பாரடி..." தங்கையின் பினனால் நின்றவாறு அக்கா காட்டிய திசையைப் பார்த்தாள் தங்கை.

"என்ன அக்கா...?" அவளின் கண்களுக்கு எதுவும் புலப்படவில்லை.

"அந்த வேலியில உந்த முறிஞ்ச தென்னை மரத்துக்கு நேர மேலை பார் ஒரு கைத்துண்டொண்டு ரத்தம் வழிஞ்சபடி தூங்குதல்லோ"

அக்கா தன் சுட்டுவிரல்காட்டி விளக்கமாய் சொன்ன பின்புதான் தங்கையால் அதைக் கண்டுகொள்ள முடிந்தது.

"எடி ஓமடி அக்கா...! அதில ஏதோ சூரியன்ர வெளிச்சத்துக்கு மினுங்குது. இலக்கத்தகடோ தெரியாது..."

"ஆர் ஆள் எண்டதைத் தகட்டு நம்பரை வைச்சுப் பிடிச்சிடுவாங்கள்..." அக்கா கூறினாள்.

"பாழ்படுவார்... நாசமாப்போவார்... எங்கையெண்டாலும் காடுகரம்பையளுக்கு நடுவில போய் முகாம் அடிச்சு இருக்கிறதுக்கு, சனங்களுக்குள்ள நடுவில வந்து இருந்துகொண்டு எல்லாரையும் பலி குடுக்கத் திரியுறாங்கள்"

தங்கையின் குரலில் எரிச்சல் மிகுந்து ஒலித்தது.


"கிபிர்க்காரனும் நல்ல அனுபவசாலி போலக் கிடக்குது. எடுத்த எடுப்பில வந்து ஆரோ காட்டிக்கொடுத்த தகவலின்படி 'ஸ்பொட்டாக' அடிச்சிருக்கிறான்"

"ஓமக்கா... ஆனா இது இலக்குத் தவறியிருந்தா எங்கட வீடு அல்லது முன்னால இருக்கிறது முத்தப்புவின்ர கோழிக் கொட்டிலும் குசினி அறையுமாத்தான் இருந்திருக்கும்..."

"இனி உதுகளைக் கதைச்சு என்னத்தைக் காணப்போறம். வழக்கமா நடக்கிறதுதானே... வா சாப்பிடுவம். பசிக்குது..." என்று அக்கா கூறியபடி தங்கையை அழைத்துக்கொண்டு திரும்புகையில்... மாலுக்குப் பக்கத்தில் தாழ்வாரத்தோடு தென்பட்ட அந்தக் கோரக்காட்சி தங்கயின் கண்களில் புலப்பட்டது.



**அவலம் தொடரும்....**



**வனப்பகுதியில்** மழை பெய்து கொண்டிருந்தது. அங்கு வசித்த எல்லா விலங்குகளும் மழையில் நனைந்திருந்தன. குளிரில் அவற்றின் தேகம் நடுங்கிக் கொண்டிருந்தது. தங்குவதற்கு புகலிடம் ஏதாவது கிடைக்குமா என்று கலந்தாலோசித்துக் கொண்டிருந்தன.

"தங்குவதற்கு குகைதான் தோதான இடம்" என்றது ஒரு காட்டெருமை. "அது சிங்கங்களின் இருப்பிடமாயிற்றே... நாம் எப்படி அங்குபோய் தங்குவது? என்று விலங்குகள் யோசித்தன. விலங்குகளின் நிலைமை தலைமைச் சிங்கத்திற்கு கூறப்பட்டது. தலைமைச் சிங்கத்திடமிருந்து வருமாறு அழைப்பு வந்தது. அரை

# மழைத் திருவிழா



குறை மனதுடன் மிருகங்கள் தயங்கியபடியே கிளம்பின. குகையின் வாசலருகே நான்கைந்து சிங்கங்கள் விலங்குகளின் வருகையை எதிர்பார்த்து காத்திருந்தன.

"வாருங்கள் தோழர்களே" சந்தோசமாய் வரவேற்றது சிங்கம். மொத்த விலங்குகளின் கூட்டமும் மிரண்டு போய் நின்றது. விலங்குகளின் மன ஓட்டத்தைப் புரிந்துகொண்ட தலைமைச் சிங்கம், புகலிடம் நாடி வந்தவர்களை பலி கொள்வது பண்பல்ல. அந்தப் பண்பிலிருந்து எப்பொழுதுமே நாங்கள் மாறமாட்டோம். நான் இந்தக் காட்டின் ராஜா. அதனால் உங்களைக் காக்கும் கடமையும் எனக்கு இருக்கிறது. மனதிலுள்ள பயத்தையெல்லாம் தூக்கி எறிந்துவிட்டு, சந்தோசமாக உள்ளே வாருங்கள்" என்றது.

தலைமைச் சிங்கத்தின் நம்பிக்கையான இந்தப்பேச்சு, மற்ற விலங்குகளின் முகத்தில் மகிழ்ச்சியை வரவழைத்தது. எல்லா விலங்குகளும் குகைக்குள் செல்லத் தொடங்கின.

விலங்குகளுக்குத் தேவையான உணவுகள் கொடுக்கப்பட்டன. உணவை சிங்கங்கள் சந்தோசமாய் பரிமாற, அந்த உபசரணையில் உச்சி குளிர்ந்து போயின விலங்குகள். விடிய விடிய பேச்சு, சிரிப்பு என்று குகை களைகட்டியிருந்தது. உறக்கம் என்பதை அவை மறந்துவிட்டன.


மறுநாள் காலை, மழை விட்டிருந்தது. இருள் சூழ்ந்திருந்த காட்டில், வெளிச்சம் ஊடுருவத் தொடங்கியிருந்தது. மழை நின்று விட்டதை உணர்ந்ததும், விலங்குகள் முகத்திலிருந்த மகிழ்ச்சி காணாமல் போய்விட்டது. அவற்றுக்கு சிங்கங்களைப் பிரிய மனம் வரவில்லை. சிங்கங்களின் மனமும் பாரமானது.சிங்கங்களிடம் விடைபெற்று அனைத்து விலங்குகளும் குகையின் வாசலுக்கு வந்தன. அங்கே சோக அலையடித்தது.

"கடவுள் உங்களை எங்களுக்கு உணவாகப் படைக்காமல் இருந்திருந்தால், நாம் இதே குதூகலத்துடன் எப்போதும் சந்தோசமாய் கூடி வாழ்ந்திருக்கலாம்" என்று வேதனையுடன் பேசியது ஒரு சிங்கம். "கவலைப்படாதீர்கள்... அடுத்த மழைநாளில் நாம் மீண்டும் இதேபோல் ஒன்றாகக் கூடி, சந்தோசமாய் குதூகலிக்கலாம்" என்று சிரித்தபடி தெரிவித்தது தலைமைச் சிங்கம். மற்ற விலங்குகள் கைதட்டி தங்களுடைய சந்தோசத்தை தெரிவித்தன.

பிறரது பாராட்டுக்கும் பழிக்கும் செவிசாய்த்தால் மகத்தான காரியம் எதையும் செய்ய முடியாது.

விவேகானந்தர்

## தகவல் துணுக்குகள்...




'இந்தியாவின் கேப் கென்னடி' என்று அழைக்கப்படும் ஏவுகணை ஏவுதளம், ஸ்ரீஹரிகோட்டா.



அமெரிக்காவில் உள்ள ஜன நாயகக் கட்சியின் சின்னம் கழுதை



ராஜகாளி என்று அழைக்கப்படும் பழம் எலுமிச்சை



வெள்ளை மாளிகையில் முதல் குடியேறிய முதல் அமெரிக்க ஜனாதிபதி ஜான் ஆடெம்ஸ்

## சேமிப்பு

வாழ்க்கை சிறந்திட சேமிக்க வேண்டும்
வறுமை நீங்கிட சேமிக்க வேண்டும்
இளமையில் சேமிக்க கற்றிட வேண்டும்
முதுமையில் வளமாய் வாழ்ந்திட வேண்டும்!


காற்றுள்ள போதே தூற்றிட வேண்டும்
காலத்தே பொருளை ஈட்டிட வேண்டும்
சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்
சேமிப்பே முதல்செலவாய் இருந்திட வேண்டும்!

கரும்பு போல நம்வாழ்வு இனித்திட வேண்டும்
கடுகளவேனும் தினமும் சேர்த்திட வேண்டும்
அல்லல்படும் வாழ்க்கை மாறிட வேண்டும்
அன்றாடம் சேமிக்கப் பழகிட வேண்டும்!

## பொது அறிவு

*1642ஆம் ஆண்டு கல்குலோட்டர் கண்டுபிடிக்கப்பட்டது.
* வெட்டுக்கிளியின் காது, அதனுடைய காலில் இருக்கிறது.
*கொம்பில் கண் உள்ள உயிரினம், நத்தை.
இரத்ததானத்தின்போது எடுக்கப்படும் இரத்தத்தின் அளவு 300 மில்லிலீற்றர்.
*கைக்கடிகாரத்தை, 1791ஆம் ஆண்டு ஏ.எல்பிராகெட் என்ற பிரான்ஸ் நாட்டு அறிஞர் கண்டுபிடித்தார்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு புத்தகமொன்று பரிசாகக் காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 02.01.2011

வர்ணம் தீட்டும் போட்டி இல.875
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:1772, கொழும்பு. த.பெ.இல:167, யாழ்ப்பாணம்.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 873


**பரிசுக்குரியவர்:** G.வித்தியாகரன், கம்பளை இந்துக்கல்லூரி,கம்பளை.

**பாராட்டுக்குரியவர்கள்**

01. உமர் ஷுக்ரி. கோல்டன் றூட் பாடசாலை, கலகெதரமடிகே.
02. அ.சோபிகன், நுணாவில்மேற்கு, சாவகச்சேரி.
03.இ.ரிசிவரன்,வண்ணாங்கேணி, பளை.
04.சிந்துஜன்,ஆத்தியடி வீதி, கொடிகாமம்.
05.வா.ஜெனனி, 70/20 அரசடி வீதி, யாழ்பபாணம்.
06.அ.ஜான்சலீன்,கந்தசாமி வீதி கந்தரோடை, சுன்னாகம்.
07.செ.துவாரகன், பேசாலை,மன்னார்.
08.எஸ்,அருணோதயா, காளிகோவிலடி, திருகோணமலை

## விசித்திரத் தூக்கம்

பொதுவாகப் பறவைகள் தூங்கும்போது, தங்களின் இறகுகளை சிலிர்த்துக்கொண்டு வைத்துக் கொண்டு தான் தூங் கும். இப்படித் தூங்குவதால் இறகுகளுக்குள் காற்று புகுந்து, அவற்றின் உடல் வெப்பம் வெளியேறி விடாமல் தடுக்கிறது. இதே



காரணத்துக்காக சில பாலூட்டி விலங்குகளும் உடலை பந்து போல சுருட்டி வைத்துக் கொண்டு தூங்குகின்றன.

மரக்கிளைகளில் பறவைகள் உட்கார்ந்து காலை மடக்கும்போது, அவற்றின் விரல்கள் இறுக மடங்கி கிளைகளைப் பிடித்துக் கொள்ளுது. இதனால் தான் பறவை தூங்கும்போது கீழே விழுவது கிடையாது. கடல் புறாக்கள், கடல் தண்ணீரில் மிதந்துகொண்டே தூங்குமாம். அதேமாதிரி வாத்துகளும், அன்னப்பறவைகளும் தண்ணீரில் மிதந்துகொண்டே தூங்குகின்றனவாம். முயல்கள், ஒரு மணி நேரத்துக்கு ஒரு முறை 10 நிமிடங்களுக்கு குட்டித்தூக்கம் போடும். நீர்யானை, மூக்கு மட்டும் வெளியில் தெரியும்படி தண்ணீரில் மூழ்கியவாறே தூங்கும்.

## முழுமைப்படுத்துங்கள்

எண் வரிசைப்படி புள்ளிகளை இணைத்து, மறைந்திருக்கும் உருவத்தைக் கண்டுபிடியுங்கள்.



# பல்லி கொல்லும் நோய்



**ப**ல் வலி வந்தால் உயிரே போவது போன்ற ஒரு உணர்வு இருக்கும். படுக்கப் போகும்போது கூட வலி பின்னி எடுக்கும். பல் கூச்சம், இரத்தம் வழிவது போன்றவை இருந்தால் அது பல்ஈறு நோய்தான். இதற்கு உரிய சிகிச்சை எடுக்காவிட்டால் பேராபத்துதான் என்கின்றனர் வைத்தியர்கள். நம் கடைவாய்ப் பற்களில் உள்ள பள்ளங்களில் உணவுப் பொருட்கள் மாட்டிக் கொள்வதாலும் அதைச் சரியாக சுத்தம் செய்யாததாலும் பிளாக் எனப்படும் பல்பாசை உண்டாகிறது. இந்தப் பல்பாசை ஒருவகை நுண்ணுயிரிகளுக்கு இடமளிக்கிறது.

இந்தப் பல்பாசை பசைத் தன்மையுடன் விளங்குவதால் நாம் உண்ணும் உணவில் சிறுபகுதி அதில் ஒட்டிக் கொள்கிறது. இந்த நுண்ணுயிரிகள் ஒட்டிக் கொள்ளும் இனிப்பு வகை உணவு துணுக்குகளை உண்டு. இனப்பெருக்கம் செய்து வளர்ந்து, லேக்டிக் ஆசிட் எனப்படும் ஒருவகை அமிலத்தைச் சுரக்கிறது. இந்த அமிலங்கள் பல்லின் எனாமலில் குழியை ஏற்படுத்தி பிறகு அது மெதுவாக உள்ளே பரவுகிறது.

சாப்பாட்டுத்துகள்கள் குழிக்குள் சிக்கிக் கொண்டால் குண்டுசி, குச்சி, நாக்கு போன்றவற்றைப் பயன்படுத்தி எடுக்கக்கூடாது. பற்களில் குழி (சொத்தை) இருந்தால் சூடாகவோ, குளிர்ச்சியாகவோ, இனிப்பானதையோ சாப்பிடும் போது பல்வலி உயிரை எடுக்கும். இளஞ்சூடான நீரில் வாயைக் கொப்பளிக்கலாம். வலி நிவாரணி மருந்துகள் எடுத்துக்கொள்ளலாம். இவை யாவும் முதலுதவி மட்டுமே.

உடனே நீங்கள் செய்ய வேண்டியது மருத்துவரைப் சந்தித்து உரிய சிகிச்சையைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

பல் துலக்குவோம்

பல் துலக்குதல் என்பது நம் வாயிலும் பற்களிலும் உள்ள அழுக்கை நீக்கத்தான். இந்த அழுக்கை ஆங்கிலத்தில் பிளேக் என்று கூறுவர். இந்த அழுக்கானது, பல் ஈறுகளிலிருந்து நீக்கப்படாத உணவுத்துகளும், கிருமிக் கூட்டங்களும் கலந்த ஓர் கலவையே. பல் துலக்கிய இரண்டு அல்லது மூன்று மணிகளுக்குள்ளே இந்த அழுக்கு பல் ஈறுகளில் படியத் துவங்கும். இவைகள் பல்லை மட்டுமல்லாமல் பல் ஈறுகளுக்கும் பாதிப்புகளை அதிகமாக்குவதோடு, பற்களை இழப்பதற்கும் காரணமாகிவிடுகிறது.

எனவே பற்களை இரு முறை துலக்குதலும், உணவு உண்டபின் ஒவ்வொரு முறையும் மிக நன்றாக வாய் கொப்பளித்தலும் மிகமிக இன்றியமையாத ஒன்றாகும்.

குழந்தைகள்

குழந்தைகளை பல் முற்றும் ஈறுகளில் பிரஷ்ஷின் குச்சுகளால் வட்ட வடிவில் சுழற்சி முறையில் தேய்க்க அறிவுறுத்த வேண்டும். பல் முளைக்காத பாலகர்களுக்கும் பக்குவமாக ஈறுகளை விரல்களால் தேய்த்து விடுதல் சிறந்த முறை. குழந்தைகளை பாசப் பிரிவுடன் ஒரு கையில் ஏந்திக்கொண்டு மறு கையில், ஆள்காட்டி விரலில் ஈரத் துணி சுற்றி ஈறுகளில் இதமாக முழுதாக தடவி துடைத்து விட வேண்டும்.

மிருதுவான, கூர்முனை இல்லாத, வட்ட வழுவழுப்பான முனைகள் கொண்ட நைலோன் குச்சுகளுடன் கூடிய பிரஷால் பல் துலக்குவது நல்லது. கூர்முனை குச்சுகளை தவிர்க்க வேண்டும். கடினமான மற்றும் விறைப்பான குச்சுகள் கொண்ட பிரஷ் பல்லின் எனாமல் மற்றும் ஈறுகளை சேதப்படுத்தி விடக்கூடும். அவைகளை தவிர்த்தல் நலமே.

உடலிலேயே மிகமிக கடினமானது கெட்டியானது எதுவென்றால் அது பல்லின் வெளிப்புறமுள்ள எனாமல் தான். இது எலும்பைவிட உறுதியானது. தவறான, முறையற்ற வகையில் பல் துலக்கும் பழக்கமானது உறுதியான எனாமலையும் பாதித்து, செயலிழக்கச் செய்து, பற்சிதைவை உருவாக்கி விடக்கூடும். அத்தோடு ஈறுகளை சிதைத்து, இரத்தம் வழியவிட்டு, புண்ணாக்கி பல பாதிப்புகளை ஏற்படுத்தி விடும். எப்பொழுதும் பதமாக, மெதுவாக பிரஷ்ஷை பயன்படுத்தலாம். 3 மாதத்திற்கு ஒருமுறை பிரஷ்ஷை மாற்றி விடுவது அவசியம்.

பற்சிதைவை தடுக்கும் தன்மை வாய்ந்த புளோரைட் கொண்ட பற்பசைகளை உபயோகித்தல் நல்லது. சிறுவர்களுக்கு ஒரு பட்டாணியின் அளவிலான பற்பசையினை உபயோகித்தலே போதுமானது. ஏனெனில் சில சிறுவர்கள் அதிக பற்பசை வைத்தால் துலக்கும்போது விழுங்கிவிட வாய்ப்புண்டு. இது அவர்களுக்கு உடலில் அதிக அளவிலான புளோரைட் நிறைந்து பாதிப்பை ஏற்படுத்த வாய்ப்பளிக்கும்.

பற்களில் சிறு புள்ளியாக சொத்தை ஏற்படும் போதே பல் மருத்துவரை அணுகி பல் அடைத்துக் கொள்வது நல்லது. பல் சொத்தையால் வலி ஏற்படும் போது பொடி, புகையிலை, கற்பூரம் போன்றவைகளை வைப்பது நாளடைவில் புற்றுநோய் வருவதற்கு ஏதுவாகிறது. எனவே, இதைத் தவிர்க்க வேண்டும். வாயில் ஏற்படும் கட்டி, புண் முதலியவற்றைப் பல் மருத்துவரிடம் காண்பித்து சிகிச்சை செய்து கொள்ள வேண்டும். ஆறு வயதுக்கு மேல் பாற்பல் விழுந்து முளைக்கும் சமயம் ஒவ்வொரு ஆறு மாதத்திற்கு ஒருமுறை பல் மருத்துவரை அணுகி ஆலோசனை பெறுவது நல்லது.






# திருப்பங்கள் நிறைந்த பூலான்தேவியின் வாழ்க்கை வரலாறு

எல்லோருக்கும் – அவள் பயங்கரக் கொள்ளைக்காரி, படு பயங்கரக் கொலை காரி என்று தான் தெரியும். அவள் அதுவும் ஒரு பெண் – ஏன் அப்படி மாறினாள் என்று எத்தனை பேருக்குத் தெரியும்? பூ ஒன்று புயலான கதை. ஏற்கனவே முரசில் பிரசுரிக்கப்பட்ட இப்பக்கங்கள், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் பிரசுரிக்கப்படுகிறது.

**கி**ராமத்தின் ஒழுக்கத்தைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்கி வருகிறாய். பூல்சிங் என்னும் நிலாச்சுவாந்தாருக்கு நீ ஆசை நாயகியாக இருப்பது எங்களுக்குத் தெரியும்" தொடர்ந்து படிக்காமல் நிறுத்திவிட்டு என் முகத்தைப் பார்த்தான் தம்பி சிவநாராயணன்.

என் உணர்ச்சிகளை வெளிக்காட்டாமல் "ம்.. மேலே படி" என்றேன்.

"பூல்சிங் ஒரு கிழவன். அவனால் மட்டும் உன்னைக் கவனிக்க முடியுமா கண்ணு? நீ அமோக விளைச்சல் கண்ட தோட்டம். ஒரு தோட்டக்காரன் போதுமா? போதாது.

கிராமத்து நிலாச்சுவாந்தார்கள் பலர் உன் தோட்டத்தைக் குத்தகை எடுத்திருக்கிறார்கள். நீயும் கூசாமல் கொடுத்திருக்கிறாய். இப்படியே விட்டால் இந்தக் கிராமத்தை நீ மேய்ந்துவிடுவாய்.

அதனால் நங்கள் உனக்கும் வழக்கம்போல வழக்கமான தண்டனையைத் தரப்போகிறோம். தயாராக இரு. இது நம் தலைவர் பாபு சிங் குஜாரின் உத்தரவுப்படி எழுதப்பட்டது.

"அக்கா! என்னக்கா இது?" என்று அழத் தொடங்கிவிட்டான்.

'அவர்கள் கூறும் தண்டனை எப்படிப்பட்டது என்று கிராமத்தில் அனைவருக்குமே தெரியும்.

மூக்கையும், காதையும் வெட்டிவிடுவார்கள். கிராமத்தில் சில பெண்களுக்கு அந்தத் தண்டனை வழங்கப்பட்டதுண்டு.

மூக்கை வெட்டிவிட்டுக் காயத்திற்குக் கட்டும் போடாமல் போய்விடுவார்கள். இரத்தப் பெருக்கால் சில பெண்கள் செத்தே போய்விட்டனர்.

இதையெல்லாம் கேள்விப்பட்டிருந்ததால்தான் சிவநாராயணன் பயந்து நடுங்கினான்.

மூக்கும் காதும் இல்லாத தோற்றத்தில் என்னைக் கற்பனை செய்து பார்த்திருப்பான். போலும், அவன் உடம்பு நடுங்கிக்கொண்டிருந்தது.

குடும்பத்திலேயே எனக்கும், தம்பி



சிவநாராயணனுக்கும்தான் ஒட்டுதல், அதிகம்.

"அ...அக்... அக்கா.. அம்மாவிடம் சொல்லலாம் அக்கா. பொலிஸ், பொலிஸில் சொல்லலாம் அக்கா...."

"பொலிசா...? எனக்குச் சிரிப்பாக இருந்தது. அடுப்பில் இருந்து நெருப்பில் விழுந்த மாதிரித்தான் பொலிஸில் சொல்வதும்.

பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன் என்றிருப்பவர்களிடம் எப்படிப் போய் முறையிடுவது?

"அழாதே, நானே அழ்வில்லை. நீ ஆண்பிள்ளை அழுகிறாயே! தைரியமாக இருக்க வேண்டும். என்ன தெரிகிறதா?

அவன் கண்களைத் துடைத்துவிட்டேன். "வாடா போகலாம்"

வீட்டில் சொன்னதும் அம்மா ஒப்பாரி வைக்கத் தொடங்கிவிட்டாள். அப்பா பயத்தில் உறைந்து போய், எதுவும் பேசாமல் அம்மாவையே பார்த்துக் கொண்டிருந்தார்.

பாபுசிங் குஜார் என்ற பெயரைக் கேட்டாலே எங்கள் கிராமம் பயத்தில் ஆடிப்போகும். விக்ரம்சிங் மல்லாவின் கொள்ளைக் கோஷ்டித் தளபதிகளில் ஒருவன்தான் பாபுசிங் குஜார்.

ரொம்பப் பொல்லாதவன். கொலை, பாதகச் செயல்களுக்கு அஞ்சாதவன் என்று பெயரெடுத்தவன்.

அவன்தான் கடிதம் அனுப்பியிருக்கிறான் என்றதும் அம்மாவுக்கும், அப்பாவுக்கும் பாதி உயிர் போய்விட்டது.

எனக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை.

"அவனது பெயரில் மையாதீன் கடிதம் எழுதி மிரட்டியிருக்கலாம். கொள்ளைக் கோஷ்டிக் காரர்களுக்கு என்மேல் ஒரு கோபமும் கிடையாது. நீங்கள் ஏன் பயந்து சாகிறீர்கள்?" என்று சொன்னேன்.

அப்படியும் இருக்கலாமே என்பது போல அம்மா என்னை ஒரு பார்வை பார்த்தாள். அப்படித்தான் இருக்கவேண்டும் என்று அவள் விரும்பினாள்.

அந்த கொஞ்ச நஞ்ச நம்பிக்கையும் நீடிக்கவில்லை.

கிராம அதிகாரியின் வேலையாளான ராதேஷ்யாம் என்பவன் எங்கள் வீடு தேடி வந்தான்.

அவனும் ஒரு கழுதை தான். அவனைக் கண்டாலே எனக்குப் பிடிப்பதில்லை. அவன் பார்வையே சரியில்லை. 'பொறுக்கி' என்று நெற்றியில் பச்சை குத்த வேண்டும்.

சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டு வீட்டுக்குள் வந்தவன், அப்பாவிடம் இரகசியம் பேசுவது போல, "பூலானை கடத்தப் போகிறார்கள். நம்ம சாதிப் பெண்ணாச்சே. அதனால் மனம்கேட்கவில்லை. அறிந்ததைச் சொல்லலாம் என்று யாருக்கும் தெரியாமல்தான் வந்தேன். என்னதான் கிராம அதிகாரிக்கு விசுவாசமாக இருந்தாலும் சாதி உணர்ச்சி இல்லாமல் போகுமா? நான் வரட்டுமா?"

போகும்போது என்னைக் கடைக்கண்ணால் பார்த்துக்கொண்டுதான் போனான் மூதேவி.

அவன் வந்து போனதும் மறுபடியும் அம்மா அழத்தொடங்கிவிட்டாள்.

நடு இரவாகிக் கொண்டிருந்தபோது தான் எல்லோரும் தூங்கப் போனோம்.

என் ஒரு புறம் தம்பி சிவநாராயணன் படுத்திருந்தான். மறு பக்கத்தில் தங்கை முன்னி படுத்திருந்தாள். கொஞ்ச நேரத்தில் அவர்கள் ஆழ்ந்து தூங்கிப் போனார்கள்.

நான் மட்டும் தூங்கவில்லை. ஏதோ ஒன்று நடக்கப் போகிறது என்பது என் உள்ளுணர்வுக்குத் தெரிந்துவிட்டது.

திடீரென்று நாய்கள் குரைக்கும் சத்தம் கேட்கத் தொடங்கியது.

(திருப்பங்கள் தொடரும்...)



# மங்காத்தாவில் அஞ்சலி

அஜித்தின் 50வது படமான மங்காத்தாவில் ஏகப்பட்ட நட்சத்திர கூட்டம். அஜீத், திரிஷாவை தவிர, அர்ஜுன், லட்சுமிராய், பிரேம்ஜி, வைபவ் உட்பட புதுமுகங்கள் என ஒரே கலைவிழாபோலதான் இருக்கிறது படப்பிடிப்புத்தளம்

இந்த நட்சத்திர கூட்டணியில் இப்போது புதிதாக சேர்ந்திருக்கிறார் அஞ்சலி. 'அங்காடித் தெரு' படத்திற்குப் பிறகு அஞ்சலின் திறமை பேசப்பட்ட அளவிற்கு அவரின் அடுத்தப் படங்கள் எதுவும் அந்த அளவிற்கு பெரிதாக அமையவில்லை.

இனி புதுமுகங்கள் படத்தில் நடிக்கப்போவதில்லை என்று ஒரு தீர்மானத்தை கூட நிறைவேற்றிவிட்ட அஞ்சலிக்கு தற்போது அதிர்ஸ்டம் அடித்திருக்கிறது என்று கூட சொல்லலாம். அஜீத்தின் 'மங்காத்தா' ஆட்டத்தில் அஞ்சலியையும் சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள். சிறிய வேடமாக இருந்தாலும் பெரிய படமாச்சே என்று சந்தோஷத்துடன் சம்மதம் தெரிவித்த அஞ்சலிக்கு இந்த வாய்ப்பு எப்படி கிடைத்திருக்கும் என்று யோசித்தால், 'தூங்காநகரம்' படத்தில் இவர்தான் நாயகி. அந்த படத்தை தயாரித்த கிளவுட் நைன் மூவிஸ் தான் அஜீத்தின் படத்தையும் தயாரிக்கிறது. அந்த ரூட்டில் அஞ்சலிக்கு இந்த வாய்ப்பு கிடைத்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன

# ரஜினியின் அடுத்த ஜோடி த்ரிஷா?

எந்திரன் படத்திற்கு பின்னர் சூப்பர் ஸ்டார் ரஜினியின் அடுத்த படமான சுல்தான் தி வாரியர் தலைப்பு ஹரா என்று மாற்றப்பட்டுள்ளது. தன் மகளின் படத்தை முடிப்பதற்காக 20 நாட்கள் கால்ஷீட் கொடுத்துள்ளார் ரஜினி.

இதனால், சுல்தான் என்கிற ஹராவின் பணிகள் மீண்டும் சூடுபிடித்துள்ளன. சௌந்தர்யா ரஜினியின் இயக்கத்தில், எந்திரனுக்கு முன்பே துவங்கிய இந்த அனிமேஷன் படத்தின் வேலைகள், எந்திரன் வெளியீட்டுக்காக தள்ளி வைக்கப்பட்டன.

சௌந்தர்யா ரஜினி தயாரிக்கும் அனிமேஷன் படத்தில் ரஜினி நடிக்கும் நேரடி காட்சிகளை கே.எஸ்.ரவிகுமார் இயக்க உள்ளார். மீதி அனிமேஷன் வடிவில் வரும் காட்சிகளை சௌந்தர்யா கவனிக்கிறார். ஏ ஆர் ரஹ்மான் இசையில் 5 பாடல்கள் இடம்பெறுகின்றன. இந்தப் பாடல்களையும் ரவிக்குமாரே படமாக்குவார் என்று தெரிகிறது. சில காட்சிகளில் நடிகை நடிக்க த்ரிஷாவை கேட்டுள்ளனர்.

# "ரோபோ"வுக்கு இரண்டு விருதுகள்

இந்தியன் எக்ஸ்பிரஸ் குழுமத்தின் ஸ்கிரீன் பத்திரிகை சார்பில் ஆண்டுதோறும் திரைப்பட விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டுக்கான ஸ்கிரீன் விருதுகள் வழங்கும் விழா மும்பை அந்தேரியில் மிகப் பிரமாண்டமாக நடைபெற்றுள்ளது. இதில் ரஜினியின் ரோபோ படத்துக்கு ஸ்பெஷல் எஃபெக்ட்ஸுக்காக ஒரு விருதும், படத்தின் தொழில்நுட்ப உத்திக்காக நடுவர்களின் சிறப்பு விருதும் வழங்கப்பட்டது.

இந்த விழாவில் சிறந்த நடிகருக்கான விருதினை தபாங் படத்துக்காக சல்மான்கான் பெற்றார். சிறந்த நடிகை விருது வித்யா பாலனுக்கு வழங்கப்பட்டது. ஷாருக்கானின் மை நேம் ஈஸ் கான் படத்துக்கு ராம்நாத் கோயங்கா நினைவு சிறப்பு விருது வழங்கப்பட்டது.

# கவுண்டமணி சம்பளத்தை தொட்டார் சந்தானம்!

தமிழ் சினிமாவில் அண்மைக்காலமாக நகைச்சுவையில் வெற்றிக் கொடி கட்டி கவுண்டமணியின் காமெடியைப் போலவே ரைமிங் டைமிங் என்று சகலத்தையும் கலந்து கட்டி ஜெயித்தவர் காமெடி நடிகர் சந்தானம்.

இளம் நாயகர்களின் விருப்ப காமெடியனாக உயர்ந்து வந்திருக்கும் சந்தானத்தின் நகைச்சுவை வசனங்கள் மிகவும் பிரபலமடைந்து வருகின்றது அடுத்தடுத்து சந்தானம் நடித்த படங்கள் வெற்றிப் படங்கள் பட்டியலில் இணைந்தாலும் பட்ஜெட்டுக்கு ஏற்ற சம்பளத்தை மட்டுமே பெற்றுக் கொண்டிருந்த சந்தானம் இப்போது திடீரென தனது சம்பளத்தை உயர்த்தி விட்டார்.

தற்போது சந்தானம் ஒரு படத்துக்கு ரூ.30 லட்சம் சம்பளம் கேட்கிறார். இந்த தொகை காமெடி நடிகர் கவுண்டமணி வாங்கிய சம்பளம் என்பது புதிய தகவல்.



# வாகை சூட வா

## மீண்டும் திரும்புகிறது அறுபது

களவாணி படத்திற்குப் பின்னர் தமிழ் சினிமாவில் தனக்கு கிடைத்த முதல் வாய்ப்பை வெற்றி பாதையாக மாற்றிய இயக்குநர் சற்குணம், தற்போது மீண்டும் புதிய படம் ஒன்றை விமலை வைத்து இயக்க முடிவு செய்திருக்கின்றார் இந்தப் படத்திற்கு "வாகை சூட வா" எனப் பெயரிட்டுள்ளனர்.

தன்னுடைய முதல் படத்தை போல இந்த படத் திலும் கிராமம் வாசம் கலந்த காமெடிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என சற்குணம் தெரிவித் துள்ளார். மேலும் சமீப கால மாக தமிழ் சினிமாவில் 1960 முதல் 1985 வரை ஏற்படும் கதை சூழல்களை மையமாக கொண்டு படங்கள்எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த படமும் 1960களில் நடக்கும் கதையாம், படத்தில் 60களில் வாழ்ந்த இளைஞன் போல் நடிக்கிறார் விமல்.



# வானம் படத்தின் புதுமை

## பட்டை கிளப்பும் சிம்பு

'வானம்' படத்துக்காக, ஒரே ஒரு பாடலை வெளியிட்டு புதுமை படைத்திருக்கிறார்கள். யுவன் சங்கர் ராஜாவின் பாஸ்ட் பீட்டில், 'எவன் உன்னை பெத்தான்... பெத்தான்...' என்று ஆரம்பிக்கும் இந்த பாடலுக்கு சிம்பு - அனுஷ்கா இணைந்து நடனம் ஆடியிருக்கின்றார்கள்

தெலுங்கு 'வேதம்' படத்தில் இப்படியொரு காட்சி கிடையாதாம். ரீமேக் என்பதால் மேலதிகமாக இதை சேர்த்திருக்கிறார்கள். பாடல் ஏற்கெனவே வானொலிகளில் வலம் வந்து கொண்டிருக்கின்றது. பாடலை எழுதியிருக்கும் சிம்பு, 'தமிழ் ரசிகர்களுக்கு 'வானம' புதிய அனுபவமாக இருக்கும். மேலும் இனி வரும் படங்களில் நடன அமைப்புகளில் புதுமைகளை செய்ய விரும்புகிறேன்' என்கிறார்.

# இளைஞன் தெலுங்கில் மொழிமாற்றம்

முதல்வர் கருணாநிதி கதை, திரைக்கதை, வசனத்தில் சுரேஷ் கிருஷ்ணா இயக்கிய "இளைஞன்" படம் தெலுங்கில் மொழி மாற்றப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது

இது பற்றி படத்தின் நாயகனும் பாடலாசிரிய ருமான பா.விஜய் கூறும் போது "இளைஞன்" எல்லா மொழிக்கும், எல்லா மக்களுக்கும் பொருந்தும் கதை. தாய்ப்பாசம் பேணாத மொழியும் இல்லை, தேசமும் இல்லை. "இளைஞன்" படத்தை பல்வேறு மொழிகளுக்கு மாற்றும் திட்டம் உள்ளது.

முதல் கட்டமாக தமிழ் மலையாளத்தில் பொங்கல் தினத்தில் வெளியாகியிருக்கின்றது அதிலிருந்து இரண்டு வாரத்திற்கு பிறகு தெலுங்கில் வெளியாகிறது. படம் வெளிவந்த பிறகு இரண்டாவது வாரத்திலிருந்து படத்தில் நடித்த அனைத்து கலைஞர்களும் தமிழ்நாடு முழுவதும் ஒரு வாரம் சுற்றுப் பயணம் செய்கிறார்கள். தியேட்டர்களுக்கு சென்று ரசிகர்களை நேரில் சந்திக்க இருக்கிறார்கள். பெப்ரவரி மாதத்தில் இதே குழுவினர் தயாரிக்கும் அடுத்த படம் பற்றி அறிவிக்க இருக்கிறோம் என்றார் பா.விஜய்



# முதல் படத்திலேயே வெற்றி பெறவில்லை

மைனா' படத்தின் வெற்றிக்குப் பின்னர் வெற்றியின் உச்சியில் இருக்கும் அமலா பால் பிறகு வந்த பல வாய்ப்புகளை ஒரே நேரத்தில் ஒப்புக் கொண்டதால் கால்ஷீட் பிரச்னையில் தவிப்பதாகக் கூறப்படுகிறது.

இது பற்றி அமலா பால் கூறும் போது 'மைனா' படத்துக்கு பிறகு நிறைய வாய்ப்புகள் வந்துள்ளது. விஜய் இயக்கத்தில் விக்ரமுடன் நடிக்கிறேன், கணேஸ் விநாயக் இயக்கத்தில் 'முப்பொழுதும் உன் கற்பனைகள்', லிங்குசாமி இயக்கத்தில் 'வேட்டை ஆரம்பம்', இதுதவிர பாண்டிராஜ் இயக்கும் படத்தில் நடிக்கிறேன்.

ஒரே நேரத்தில் பல வாய்ப்புகள் வந்ததால் சிறிது தடுமாற்றம் அடைந்தது உண்மைதான். ஆனால் கால்ஷீட்டில் எந்த பிரச்னையும் இல்லை.

முதல் படத்திலேயே நான் வெற்றி பெற்றுவிடவில்லை. முதல் இரு படங்களில் கசப்பான அனுபங்களை கடந்து வந்திருக்கிறேன். 'மைனா'வுக்காக இரண்டு வருடங்கள் கடுமையாக உழைத்திருக்கிறேன். அதன் பலனை இப்போது அனுபவிக்கிறேன். தமிழ் மக்கள் கொடுத்த இடத்தை தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்பதே எனது இப்போதைய குறிக்கோள். அதற்காக கதைகளை தேர்ந்தெடுத்து நடிப்பேன்.



# செல்வராகவனுக்கு ஜூனில் திருமணம்

தனுஷ் நாயகனாக நடித்த காதல் கொண்டேன் படத்தை இயக்கிய செல்வராகவன். அந்த படத்தில் நாயகியாக அறிமுகமான நடிகை சோனியா அகர்வாலை காதலித்து திருமணம் செய்து பின்னர் கருத்து வேறுபாடு காரணமாக இருவரும் பரஸ்பர விவாகரத்து செய்து கொண்டனர். இந்த பிரிதலுக்கு காரணம் நடிகை ஆண்ட்ரியா என்று கூறப்பட்டது.

தற்போது இரண்டாம் உலகம் என்ற படத்தை தனுஷ் மற்றும் ஆண்ட்ரியாவை வைத்து இயக்கி வரும் செல்வராகவன் மீண்டும் காதலில் விழுந்து விட்டாராம். அந்த படத்தில் செல்வாவுக்கு உதவி யாளராக பணிபுரியும் கீதாஞ்சலி என்பவரை காதலித்து வருவதாக தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

இதனை வெளிப்படையாகவே தெரிவித்திருக்கும் செல்வராகவன், கீதாஞ்சலி மிகவும் அன்பானவர் என்றும், எனது உணர்வுகளை புரிந்து கொண்ட உண்மையான காதலி என்றும் கூறியிருக்கிறார். செல்வராகவன் தனது புதுக் காதலியை வருகிற ஜூன் மாதம் திருமணம் செய்து கொள்ள திட்டமிட்டிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# சினேகா சரியான தெரிவு
## விஜயசாந்தி

புன்னகை அரசியாக நடித்த சினேகா புரட்சி அரசியாக மாற்றிய படம் பவானி காக்கி சட்டை போட்டு ஐபிஎஸ் அதி-காரியாக சமூக விரோதிகளை பந்தாடியிருக்கிறார் சினேகா. ஜி.கிச்சா இயக்கும் இந்தப் பவானி விஜயசாந்தி நடித்த வைஜெயந்தி ஐ.பி.எஸ் படத்தின் மீள் பதிவாகும் இதனால் சினேகா பவானியில் நடித்திருப்பது பற்றி விஜயசாந்தியிடமும் கேட்டிருக்கிறார்கள். அதற்கு லேடி சூப்பர் ஸ்டாரின் பதில், சினேகா ரொம்ப சரியான தெரிவு. இதை கேட்டது முதல் சந்தோஷத்தில் திளைத்துக் கொண்டிருக்கிறார் சினேகா. பவானி படத்தை விஜயசாந்திக்கு ஸ்பெஷலாக போட்டுக் காண்பிக்க வேண்டும் என்று தனது விருப்பத்தையும் சினேகா தெரிவித்துள்ளார்.

# பயணம் மூலம் தமிழுக்கு வரும் நாகார்ஜுன்

விமானக்கடத்தலை மையமாக வைத்து எடுக்கப்பட்ட 'பயணம்' படத்தைக் கொண்டு தமிழ்-தெலுங்கு சினிமா உலகில் வியா-பாரம் பண்ண திட்டமிட்டுள்ளாராம் பிரகாஷ்ராஜ். இந்தப் படத்தில் கமாண்டோவாக தெலுங்கு சூப்பர் ஹீரோ நாகார்ஜுன் நடித்துள்ளார். இந்தப் படத்தில் பிரகாஷ்ராஜ், சனா கான் மற்றும் பலர் நடித்துள்ளனர். தெலுங்கில் இயக்குனர் ராதா மோகனின் 'அபியும் நானும்' படத்தை பார்த்து நாகார்ஜுன் அப்படியே உருகிப்போனாராம். ரட்சகன் படத்துக்கு பிறகு, பதிமூன்று வருடங்கழித்து தற்போது நாகார்ஜுன் 'பயணம்' என்ற நேரடி தமிழ் படத்தில் நடித்துள்ளார். பிரகாஷ் ராஜுக்கும் அவருக்கும் இடையே உள்ள நெருக்கமான நட்பை பேசியுள்ளார். வழக்கமான படங்களில் உள்ளதைப்போல 'பாடல்களை' படமாக்காமலும், பாடல் வெளியீடு என இறங்காமல் 'பயண' படத்திற்கான செல-வை குறைத்துள்ளார்கள்.



# வாழ்க்கை என்பது என்ன?

**வாழ்க்கை** என்பது வாழ்வதற்குத்தான். அதற்குத் தேவையான விஷயங்களை விட்டுவிட்டு, நம் பிரச்சினை முழுக்க என்ன, எப்படி வாழப் போகிறோம் என்ற கவலையிலேதான் போகும். என் சுதந்திரம், என் வாழ்க்கை, என் குடும்பம் என்று என்றைக்கு வாழ ஆரம்பிக்கிறோமோ அப்போது மனது சுதந்திரப்படும். சுதந்திரமான மனது சிந்திக்க ஆரம்பிக்கும். சுதந்திரமான மனதுதான் தீவிரமாக சிந்திக்கும். அடிப்படையில் இருந்து உங்கள் பிரச்சினைகளைப் பாருங்கள்.


முதல் பிரச்சினை. என்ன செய்வதென்றே தெரியவில்லை. எனக்கு ஒரு நல்ல வேலை வேண்டும். இப்படி குறுக்கிக் கொள்ளுங்கள். நல்ல வேலை என்பது என்ன? இதையும் சுருக்குங்கள். என்னுடைய அடிப்படை திறமை-யோடு பொருந்துகிற ஒன்று. இல்லை என் குடும்பச் சூழலின் பிரச்சினையை தீர்ப்பதற்கு நல்ல சம்பளம் தருகிற வேலை.

பிரச்சினை என்பது நீங்கள் வடிவமைத்த பிம்பம்தான். பெரிது என்றால் பெரிது. சிறிது என்றால் சிறிது தான். பிரச்சினையை குறுக்கிக் கொள்கிற போது நான் என்ன செய்ய வேண்டுமென்கிற வடிகால் கிடைக்கிறது. மனது, மூளை எல்லாம் சிந்திக்கும்.

என்ன செய்வதென்றே தெரியாமலிருந்த இடத்திலிருந்து உங்களுடைய குறிக்கோளை எட்டுவதற்கான இடத்தை உங்கள் மூளை உங்களுக்குத் தரத் தயாராக இருக்கிறது. நாம் அதிலே கவலைகளை இட்டு நிரப்பி வைத்திருப்போமென்றால், நாளை எப்படி வசமாகும்.

வாழ்க்கை இப்படித்தான் இருக்க வேண்டுமென்று எப்போது நம்முடைய உள் மனது தீவிரமாகத் தீர்மானிக்கிறதோ அன்று ஆரம்பிக்கிறது வெற்றி வாசல்.

எல்லோரும் வெற்றியின் பிம்பத்தைப் பார்க்கிறீர்களே ஒழிய, அவன் வெற்றி பெற என்ன செய்தான் என்று எப்போதாவது பார்த்திருக்கிறோமா?



என்னைவிட ஒருவனுக்கு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அதைக்கொண்டு மேலே வந்துவிட்டான். அதுதிறமை தானே.

அவன் ஐந்தாயிரம் ரூபாய் கூட சம்பாதிக்கிறானே என்று மட்டும் கவலைப்படுகிறோமே. நான் அப்படி சம்பாதிக்க நான் என்ன செய்ய வேண்டுமென்று சிந்திக்க வேண்டும். திறமை, சக்தி அனைத்தையும் அடுத்தவன் வெற்றிமீதும்,தோல்விமீதும் செலவழிப்பீர்களென்றால் உங்களுடைய வெற்றியைக் கவனிப்பதற்கு எங்கிருந்து சக்தியை கொண்டு வரப்போகிறீர்கள்?

உங்கள் வாழ்வில் நீங்கள் தோற்பதற்காக எடுத்துக் கொள்கிற முயற்சிகளில் 50% எடுத்துக் கொண்டால்கூட ஜெயித்துவிடலாம் என்று சொல்கிறார்கள்.

வாழ்வை நேர்மறையாகப் பாருங்கள். வாழ்க்கையை நேர்மறையாகப் பார்த்தால் வாழ்க்கை உங்களை நேர்மறையாகப் பார்க்கும். நீங்கள் என்ன நினைக்கிறீர்களோ அதுதான் திரும்ப நடைபெறும்.

உங்களுக்கே உங்கள் மீது நம்பிக்கை இல்லையென்றால், அடுத்தவன் எப்படி உங்கள் மேல் நம்பிக்கை வைப்பான். நம்பிக்கை தெளிவைக் கொடுக்கும். வாழ்வில் ஜெயித்துவிடுவேன் என்கிற துடிப்பு இருக்கும்.

## அவள் வருவாளா?

தொலைந்த என் காதல்த்
தேவதையைத்
தேடித் தேடியே என் உள்ளம்
குமுறுகின்றது.
அவள் வருவாளா?
ஏக்கத்தோடு என் இதயம்
துடியாகத் துடிக்கின்றது!
அன்பே! நான்
அடிக்கடி சொல்லும் வார்த்தை
என்னைத்
தனிமையில்
'தத்தளிக்க விடாதே' என்று
ஆனால் இன்று நானே
என் உயிர்த் தேவதையை
பறிகொடுத்த
பாதகனாய் விட்டேனே
கண்மணியே!
அவள் வருவாளா என்று
என் மனம் என்னைக்
கேட்கின்றது-நான்
என்ன பதில் சொல்ல?!
உயிரே என்னை ஏன்
தவிக்கவிட்டு மறைந்தாய்
நான் தூங்கும் போது கூட...
என் மனம் தூங்காது
அவள் வருவாளா?
அவள் வருவாளா?- என்று
மௌனமாக இரத்தக்
கண்ணீர் வடித்து காத்திருக்கின்றது.

எஸ்.றெசிந்தா
பருத்தித்துறை

# தேன் கிண்ணம்

## மணமகள் வேண்டுமாம்...

நீண்ட கூந்தலாள்
மெல்லிடை மேனியாள்
சிவந்தமேனி கொண்டாள்
வேண்டும் என்றனர்
மணமகன் வீட்டினர்!
பெண் உருவை சித்தரிக்க
அந்தப் பெண் வீட்டினர்
மணமகனைச் சந்திக்க
போனபோது
பொழுது சாய்ந்த வேளையிலே
பொறுமையோடு மணமகளும்
மனமாக வந்து நின்றாள்
மணமகனைக் காணவில்லை
கருநீல நிறமவனை
"காமாட்சி" மாடென்று
விடுக்கென்று சென்றுவிட்டாள்
விளங்காத மணப்பொண்ணு.

சுபா
மானிப்பாய்

## எதிர காலம்...

சிறுவர் செல்வங்கள்
தரிசு நிலங்கள்!
நல்வழிக்கலப்பையால்
பண்படுத்தி
மனிதநேய விதையிட்டு
பாச நீரூற்றி
நன்னெறி உரமிட்டு
போஷிப்பதன் மூலம்தான்
வனப்பான நாளையை
வளமானதாக்க
அமோக விளைச்சலை
தந்து நிற்பார்கள்.

ஏ.அஹமது ஜுனைது
ஏறாவூர்-06

## சிறப்பு மதிப்பு ஊக்குவிப்பு

காதல் என்பது
விடுகதை
கல்யாணமோ
தொடர் கதை!

வாழ்தல் என்பது
புனை கதை
சாதல் என்பது
முடிவுரை!

கவிதை என்பது
தேன் கூடு
அதனைக் கட்டுவதோ
பெரும்பாடு!

தேர்தல் என்பது
சடுகுடு
தீர்வுக்கு தேவை
உடன்பாடு!

பாரதி கவிதைகள்
தனிச் சிறப்பு
படித்தால் புரியும்
அதன் மதிப்பு!

அறிவைத் தருவது
வாசிப்பு யோகிக்கும்
ஆற்றலை வளர்க்கும்
ஊக்குவிப்பு!

உண்மைவிளம்பி,
கட்டை பறிச்சான்

## மன்னிப்பாயா?

ஆயிரம் கனவுகளுக்கு
அடித்தளம் இட்டபோது
தோள் கொடுக்க உனக்கு
தோன்றவில்லை

ஆசைகளின் விடியல்களை
ஆக்கிரமிக்க விரும்பியபோது
அறியாமல் அல்ல அறிந்தே
அஸ்தமனமாக்கிவிட்டாய்

உன்னுடனான வாழ்வை
உரிமையாக்க முயன்றபோது
ஊமையாய் இருந்து என்
உள்ளத்தை உடைத்துவிட்டாய்

மொத்தத் தவறும் உனதே..!
உணரும் மனமிருந்தால்
தவறாமல் மன்னிப்பாயா?
என்னை அல்ல உன்னை நீயே

பல்லவி,
பல்லவராயன்கட்டு

## என்(னை) காதலி

காதல் சொல்லி
கடந்த நாட்கள் தொண்ணூறு!
ஒவ்வொரு நாழிகையும்
என்னுடலில் வெந்நீரு!

கதைத்துப் பேசி மன்றாடினேன்
கண்மணியவள் கண்ணீரால்
பதில் சொன்னாள்!
புரிந்து கொண்டது–புதிர்தான்,
புண்பட்டது நெஞ்சம்தான்!

போகப் போக – நீண்டது
சோகத்தின் முட்பதித்த
செறிக்கும் சாலை!
மௌனக்கடலில் மூழ்கிக் கொண்டு
கொஞ்சம் கொஞ்சமாய்க்
கொல்லுகிறாள்?

அவள் மனதில் அரங்கேறும்
உணர்வுகளின் தோரணைகள்
மல்யுத்த
மன்றாட்டத்தின் ஏற்பாடா???

சொல்லவரும் –அவள்
எண்ணங்களின்
வார்த்தை வழவங்களை–வாட்கள்
கொண்டு வதைக்கும்
வழவமற்ற மர்மம்தான் – என்ன...?
துழக்கிறது உயிர்....!
தெரிந்து கொண்டு தெளிவு பெற!
எழில் ஒளிரும் –நெஞ்சத்தில்
எண்ணற்ற கவலைகளோ?!
என்மேலுள்ள வஞ்சத்தில்
ஏற்படும் சிந்தனைகளோ?!
இல்லை!
இவையெல்லாம் வெந்தழல்
மனதின் நிந்தனைகளோ?!

உருவமற்ற உயிரொன்று
உள்ளமதை ஊசியின்றிக்
குத்துகிறது!!
குடைகிறது!!

அவள்
வண்ண வதனம்
என் உயிர் நாழயின் உட்புற வாசலில்
மரணம் ஜனனம் வரை மறைவின்றி–
ஜொலிக்கும்!
உன்னதமான உறவுடன்!

என்றென்றும் நீ–மட்டுமே
என்(னை)காதலி.

எஸ்.சிபானி முஹம்மட்
(கலை விழுது)
ஒலுவில்



**பெண்கள் உரிமைகள் சமவாயம் - உறுப்புரிமை 14:02:04**

**பெண்கள் தொழில்நுட்பத் தேர்ச்சியை விருத்தி செய்வதற்காக தொழிற்பாட்டு எழுத்தறிவுடமை, அத்துடன் சமுதாய விவரிவாக்கச் சேவைகளினதும் பயன் என்பவற்றுடன் தொடர்புபட்டவை உட்பட அனைத்து வகையான பயிற்சியையும் கல்வியையும் பெற்றுக்கொள்வதற்கான உரிமை உண்டு**



# பெண்களுக்கு அதிகரிக்கும் மார்பகப் புற்றுநோய்

அமெரிக்க புற்றுநோய் கழகத்தின் அறிக்கைப்படி, ஆண்டு தோறும் 1.3 மில்லியன் மார்பு புற்றுநோய்கள் கண்டறியப்படுகிறது. இவற்றில் இறப்பு 465,000. இந்நோய் தொடர்ந்து அதிகரித்து கவலை தரும் ஒன்றாக மாறி வருவதை தொடர்புள்ள துறையினர் சுட்டுகிறார்கள். ஆரம்ப காலத்தில் கண்டறிவது இழப்பைத்தடுக்கும். அதிகம் பெண்களையே தாக்கும் இந்நோய் குறித்து விழிப்புணர்வு அவசியம்.

மார்புப் புற்றுநோய்க்கான அறிகுறிகளாவன: மார்பு இயல்புக்கு மாறாக வீங்கியிருத்தல், வலி ஆகியன தெளிவான முதல் அறிகுறி. சிவப்பு கலராக மாறியிருப்பது, காம்பில் நமைச்சல், எரிச்சல், புண் போன்றவை உடனே மருத்துவரை அணுகத்தக்கவை.

இதற்கான காரணிகளாக இவை குறிப்பிடப்படுகிறது. பெண்களின் மார்பகப் புற்றுநோய் ஏற்படும் அபாயத்தை வயது (வயது அதிகரிக்க அதிகரிக்க வாய்ப்புகள் அதிகரிக்கிறது) குடும்பத்தில் ஏற்கனவே வரலாறு இருப்பது, பருவமடையும் வயது, மரபுக்கூறுகள் போன்றவை தீர்மானிக்கின்றன.

மேற்கத்திய வாழ்க்கை முறையை பின்பற்றி குழந்தை பெறுவது, பாலூட்டுவதில் உள்ள நடத்தைகள் ஈஸ்ட்ராஜன் ஹோரமோனை அதிகரிக்கா செய்து மார்பகப்புற்றை ஏற்படுத்தலாம் எனவும் நிபுணர்கள் தெரிவிக்கிறார்கள்.

ஹோர்மோன் மாத்திரைகளை எடுத்துக் கொள்வது, அதிக எடை, சுற்றுச்சூழல் (பூச்சிக்கொல்லி மருந்துகள் ஹோர்மோன்களில் மாற்றம் ஏற்படுத்தலாம்). மது அருந்துவதால் இரத்தத்தில் ஈஸ்ட்ரோசன் அளவை கல்லீரல் ஒழுங்குபடுத்த முடியாமல் போவது போன்றவை குறிப்பிடத்தக்க காரணங்கள். மேலும், இளம் வயதில் கதிர்வீச்சு சிகிச்சை இந்நோய் வரும் வாய்ப்பை அதிகரிக்கும்.

வருமுன் காப்பதற்கு முன்னெச்சரிக்கையாக நமது கடமை, சுய பரிசோதனை செய்து கொள்ளுங்கள். கண்ணாடி முன் நின்று மார்பில் கைவைத்து கட்டிகள் இருக்கிறதா என்றும், வீக்கம், சிவப்பு கலரில் இருத்தல் போன்ற அறிகுறிகளையும் பரிசோதித்து கொள்ளலாம். ஏதேனும் மாற்றங்கள் காணப்பட்டால் மருத்துவரை அணுகலாம். உடலில் கொழுப்பு மிகுதியான உணவுகளை குறைத்துக் கொள்ள வேண்டும். வயது ஏற ஏற கொழுப்பு உணவுகளை குறைத்துக் கொண்டே போவது பல வகையில் நல்லது.

தேசிய புற்றுநோய் நிறுவனத்தின் அறிக்கைப்படி, அதிக எடை மார்பு புற்றுநோய் தாக்கும் வாய்ப்பை அதிகரிக்கும் என்கிறது. உடற்பயிற்சியுடன், ஹோர்மோன் சிகிச்சைகளை தவிர்த்து மாற்று வழிகளை கண்டறிவது நல்லது. வருமுன் காப்பது நல்லது இரண்டாவது,ஆரம்ப நிலையில் கண்டறிவது இழப்பை தடுக்கும். இதற்கு சுயபரிசோதனையே சிறந்த வழி.

# அழுவதை நிறுத்துங்கள்



எப்போதும் கண்ணீர் விட்டு மனவெழுச்சி கொண்ட பெண்ணா நீங்கள்? இனி மேல் அழுவதை கொஞ்சம் குறையுங்கள். இதைப் படிங்க உங்களுக்கே புரியும் உங்களைப் பற்றி... பெண்ணின் கண்ணீருக்கு அதிக சக்தி இருப்பதாக புராணங்களில் படித்திருக்கிறோம். ஆனால் இப்போது நிலவரம் என்று அறிய இஸ்ரேலின் ஒரு அறிவியல் கல்வி நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்கள் விரிவான ஆய்வில் இறங்கினர். அவர்களை வடிவேலு பாணியில் கதறிக் கதறி அழக்கூடிய அழுகைப் படங்களை பார்க்க வைத்தனர். அப்போது பெண்கள் வடித்த கண்ணீரை சோதனைக்குழாயில் சேகரித்தனர். இன்னொரு குழாயில் உப்பு கலந்த நீரை தயார் செய்தனர்.

உண்மையான கண்ணீரை சிலபேரின் முகத்திலும், உப்பு நீரை மற்ற பெண்கள் முகத்திலும் தடவிவிட்டனர். யாருக்கு கண்ணீர், யாருக்கு உப்பு நீர் எனத் தெரியாத நிலையில், ஆண்களை பெண்களின் முகத்தருகே நின்று பேசச் செய்துவிட்டு, ஆண்களை அழைத்துச் சென்று அவர்களது டெஸ்ட்ரோட்ரான் அளவை சோதித்தனர். உண்மையான கண்ணீரை முகர்ந்த ஆண்களுக்கு டெஸ்ட்ரோட்ரான் சரிந்து கிடந்தது. உப்புநீரை முகர்ந்தவர்களுக்கு அந்த நேரத்தில் எந்தப் பாதிப்பும் இல்லை. இதனால் ஒரு முடிவுக்கு வந்த ஆராய்ச்சியாளர்கள், கண்ணீர் விடும் பெண்ணால் தாம்பத்ய ஆசை குறையும் என்று அறிவித்துள்ளனர். கணவர் அல்லது காதலர் விலகி செல்வதுடன் முகத்தின் அழகும் குறைந்து போகலாம் என்று எச்சரிக்கிறது

இஸ்ரேல் நாட்டில் நடந்த ஆய்வு முடிவு. அத்துடன் முகத்தில் கண்ணீர், உப்பு நீருடன் இருந்த பெண்களை போட்டோ எடுத்து ஆராய்ந்ததில் கண்ணீர் விட்ட பெண்களின் அழகு குறைந்திருந்ததாகவும் கூறினார். ஆகவே பெண்களே கூடுதலாக அழுவதை நிறுத்துங்கள்.

## சமையல் குறிப்பு
## முட்டை ரவாப்பணியாரம்

**தேவையான பொருட்கள்:**
முட்டை – 2, ரவை – 150 கிராம், கோதுமை மா – 150 கிராம் தேங்காய்ப் பால் – 1 கப், சீனி – 150 கிராம், சோடா உப்பு – 2 சிட்டிகை, ஏலக்காய் – 4முந்திரிப்பருப்பு – 20 கிராம்

**செய்முறை:**
முட்டைகளை நுரைக்க அடிக்கவும்.
ரவை, கோதுமைமா, சீனி, தேங்காய், அடித்த முட்டை, சோடா உப்பு, ஏலத்தூள், பொடியாக நறுக்கிய முந்திரிப் பருப்பு இவைகளை இட்லி மாவு போல் கரைத்து வைக்கவும்.
பணியாரச் சட்டியில் எண்ணெய் ஊற்றிக் காய வைக்கவும்.
சிறிய கரண்டியில் மாவை எடுத்து எண்ணெயில் ஊற்றவும்.
வெந்ததும் எண்ணெய் வடிய வைத்து எடுக்கவும்.



# விரல் சூப்பும் பழக்கத்தை மாற்றுவது எப்படி?

**குழந்தைகள்** என்றாலே விரல் சூப்புவது என்பது இயல்புதான். நாம் என்னதான் கையை எடுத்துவிட்டாலும் குழந்தைகள் மீண்டும் மீண்டும் கையை வாய்க்குத்தான் கொண்டு செல்லும். குழந்தை விரல் சூப்புவதற்கு முக்கிய காரணம். தனக்கு முழுமையான பாதுகாப்பு கிடைக்கவில்லை என்று உணர்வதால்தான் என்கிறார்கள் உளவியல் அறிஞர்கள்.

மூன்று வயது வரை இந்தப் பழக்கத்தை பெரிதாக நினைக்க வேண்டிய அவசியமில்லை. தாயின் கருவறையில் இருக்கும் போதே இந்தப் பழக்கம் ஏற்பட்டுவிடுகிறது. இதனால் கவலை அடைய வேண்டிய அவசியமில்லை. குறிப்பிட்ட வயதில் இந்தப் பழக்கம் மாறிவிடும். நான்கு வயதுவரை இந்தப் பழக்கம் நீடித்தால் குழந்தை சிறப்பு மருத்துவரிடம் காட்டி சிகிச்சை பெறுவது நல்லது.

பெற்றோரிடம் தேவையான அன்பு, பராமரிப்பு, பாதுகாப்பு ஆகியவை கிடைக்காதபோது விரல் சூப்பும் பழக்கம் அதிகமாக இருக்கும். இவர்களிடம் அதிகமாக அன்பு செலுத்தி அரவணைத்தால் மட்டுமே விரல் சூப்பும் பழக்கம் மாறும்.

வயது வந்த குழந்தைகளை, விரல் சூப்பும் பழக்கத்தை விட்டுவிடுமாறு கட்டாயப்படுத்துவதோ அல்லது 4 வயதுக்கு மேல் அவர்களிடம் பக்குவமாக எடுத்துச் சொல்லி அவர்களை திருத்தலாம். அல்லது நிறைய அன்பு செலுத்தி அவர்களாகவே அந்தப் பழக்கத்தை நிறுத்த முயற்சிக்கலாம். குழந்தைகளின் விரல்களுக்கு வேலை கொடுக்கும் விதமாக விளையாட வைக்கலாம்.

எதையாவது எழுதச் சொல்லலாம் அல்லது ஓவியம் வரைய வைக்கலாம். இப்படி கை விரல்களுக்கு வேலை கொடுத்தால் விரல் சூப்பும் பழக்கத்தை தன்னாலேயே கொஞ்சம் கொஞ்சமாக மறந்து விடுவார்கள் குழந்தைகள். அதேபோல், தூங்கும் போது அவர்கள் கையில் பொம்மையை கொடுத்தால் அந்த பொம்மையைப் பிடித்துக் கொள்வதில் கவனம் செலுத்தும் போது விரல் சூப்புவதை மறப்பார்கள்.

# சோர்விலிருந்து விடுபட...

சோர்வு என்பது இயற்கையான ஒன்றுதான். ஒவ்வொரு செயலுக்கும் ஒரு எதிர்விளைவு உள்ளது போல் நல்ல புத்துணர்வு கிடைக்க சோர்வும் அவசியமாகும். சோர்வு இருவகைகளில் ஏற்படுகிறது. உடல் சோர்வாகவும், மனச் சோர்வாகவும் வெளிப்படும். உடலை சோர்வுக்கு அழைத்துச் சென்று தீராத தொல்லையைக் கொடுப்பது மனம்தான். மனம் சோர்வுற்றால் உடலும் சோர்வுறும். ஆரோக்கியமாக மனதை வைத்திருந்தால் தான் உடல் ஆரோக்கியத்தைப்பேண முடியும். மனச்சிக்கல், மன இறுக்கம், மனக் கிளர்ச்சி இவைகளால் உடலில் இரத்தத்தின் வேகம் அதிகரித்து இரத்தம் சூடேறுவதால்,



பித்தநீர் அதிகம் சுரந்து இரத்தத்தில் கலந்து உடல் உறுப்புகளுக்குச் சென்றடைகிறது. இதனால் உடல் உறுப்புகள் அதிக சோர்வு பெறுகின்றன. இந்த சோர்வு, நாள் செல்லச் செல்ல நீடித்துக்கொண்டே உணர்வுகளைக் கட்டுப்படுத்துவதால் அதன் வெளிப்பாடு சோர்வாகத்தான் முதலில் அமையும். சோர்வு என்பது ஒரு நோயல்ல. அது நோயின் அறிகுறியாகும். இந்தச் சோர்வை நாம் எளிதில் விரட்டலாம். சோர்வை போக்கி னாலே மனிதன் சாதனை படைக்க முடியும்.சோர்வைப் போக்க ஓய்வு ஒரு மருந்தாகும். ஆனால் அந்த ஓய்வு நீடித்தால் அதுவே சோர்வை வளர்க்கும் விஷமாக மாறும். அதிக நேரம் ஒரே இடத்தில் அமர்ந்திருத்தல், கணினி, தொலைக்காட்சி அதிகம் பார்ப்பது, அல்லது தனிமையில் அமர்ந்து தேவையற்ற சிந்தனைகளில் ஈடுபடுவது போன்றவற்றை தவிர்த்தால் சோர்வு ஏற்படாது. உடலுக்கும் மனத்திற்கும் புத்துணர்வு தரும் எண்ணங்களையே வளர்க்க வேண்டும். தினமும் உடற்பயிற்சி, யோகா, தியானம், சுவாசப்பயிற்சி மேற்கொள்ள வேண்டும். இயற்கை முறையிலும், உணவு முறை மாற்றத்தின் மூலமும் சோர்வை நீக்கி புத்துணர்வுடன் வாழ்வோமாக.

பெண்கள் பக்கத்திற்குரிய தரமான ஆக்கங்கள் வாசகர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.
அனுப்பவேண்டிய முகவரி: த.பெ.இல : 167,யாழ்ப்பாணம்.

## வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

**பரிசுப் போட்டி இல :- 255**

கேள்வி : குழந்தைகள் விரல் சூப்புவதற்கு முக்கிய காரணமென உளசியலாளரல்கள் கூறும் கருத்து?

பரிசு 1000/- ரூபா.

விடையைப் பக்கத்திலுள்ள கூப்பனில் எழுதி, அனுப்பி வைக்கவும்.
அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:
**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி, பரிசுப் போட்டி இல : 255**
**தினமுரசு வாரமலர், த.பெ.இல : 1772, கொழும்பு, த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.**
அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- **01.02.2011**
சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவார்.

பரிசுப் போட்டி இல:- 252 இற்கான விடை:-சளி, ஒற்றைத் தலைவலி, மூக்கு சம்பந்தமான தொந்தரவுகள், பார்வைக் கோளாறு.
பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி -திருமதி பூ தாமோதரம்பிள்ளை, தபால்கந்தோர் வீதி, மன்னார்.

255

பெயர் : ..............................
முகவரி : ..............................
..............................
..............................
தே.அ. அட்டை இல : ..............................
விடை : ..............................
கையொப்பம் : ..............................

# உன்னால் மட்டும் முடியும்




நடைபெற்று முடிவடைந்த ஆஷஸ் தொடருக்கு முன், இங்கிலாந்தின் பீட்டர்சன், ஆஷசில் என்னதான் இவர் செய்யப்போகிறார் என்று பரிதாபமாகப் பார்க்கப்பட்டவர். ஆட்டத்திறன் குறைவால் தென் ஆபிரிக்கா சென்று கழக மட்டத்தில் ஆடித் தன்னைத் தேற்றிக்கொள்ள முயன்றவர். ஆனால் இன்று ஆஷஸ் தொடரை இங்கிலாந்து தக்கவைத்துக்கொண்டுள்ள நிலையில் இங்கிலாந்தின் கதாநாயகனாகப பேசப்படுபவர் பீட்டர்சன்தான்.

இந்த எழுச்சி பற்றி அவரே பேசுகிறார். 2008 இன் இறுதிப் பகுதியில் அப்போதைய அணித் தலைவராகிய கெவின் பீட்டர்சனுக்கும் பயிற்சியாளராகிய பீற்றர் மூர் இருவருக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு இருவரின் பதவியையுமே பறித்தது. என் அணித் தலைவர் பதவி பறிக்கப்பட்டது தான் இன்றைய இங்கிலாந்தின் வெற்றிக்குக் காரணம் என்கிறார் அவர். அதே போல என் வெற்றிக்கும் அதுவே காரணம் என்று கூறுகின்றார். மேலும் 24 வருடங்களுக்குப் பின் அவுஸ்திரேலிய மண்ணிலேயே அவர்களைக் கவிழ்த்ததும் இந்தச் சம்பவங்களால் தான் என்கிறார்.

எதிர்மறைக் காரணங்களையே, சாதகமான காரணங்களாக மாற்றிக்கொள்ளும் வித்தியாசமான மனிதராக இவர் இருக்கிறார். தொடர்ந்து நடைபெற்ற சம்பவங்கள் பற்றிப் பேசும் போது பின்னர் புதிதாக நியமிக்கப்பட்ட பயிற்சியாளர் அண்டி பிளவர் மற்றும் அணித்தலைவர் அன்ட்ரூ ஸ்ரோஸ் ஆகியோ–ரின் இணைப்பே இன்று நாம் காணும் வெற்றிக்கு அடிப்படை என்று மனதாரப் பாராட்டுகின்றார். இந்த இருவரும் 18 மாதகாலத்தில் ஒருங்கே சேர்ந்து ஏற்படுத்திய சாதனை அணிதான் இன்றைய இங்கிலாந்து அணி என்று கெவின் திடமாக நம்புகின்றார்.

தற்போதைய அணித் தலைவர் அன்ரூ ஸ்ரோஸ் பற்றிக் கூறுகையில் தன் நலனைப் புறந்தள்ளி ஏனைய அணி வீரர்களின் நலன்களையே எப்போதும் முன்னிலைப்படுத்தும் தன்மை இவரிடம் நிறையவே உண்டென்பவர். அவரிடம் இருந்து தனக்கு வந்த ரெலிபோன் அழைப்பொன்றைப் பற்றியும் பேசுன்றார். "பீட்டர்சன் உன் அணித்தலைமை நீக்கப்பட்டபின் என்னை அணித்தலைவராகச் சம்மதமா என்று இங்கிலாந்து கிரிக்கெட் சபை கேட்கிறது. நான் என்ன செய்வது?" என்று வினவியிருக்கிறார் ஸ்ரோஸ். அதற்குத்தான் பதிலளித்தபோது நீயே மிகவும் பொருத்தமானவன். நீ அந்தப் பதவியை ஏற்றுக்கொள். நான் உனது நண்பன். எனது ஆதரவும் ஒத்துழைப்பும் எப்போதும் உனக்கு இருக்கும் என்றும் தான் கூறியதாகவும் சொல்கிறார்.

2006, 2007 இல் மிகச் சிறந்த துடுப்பாட்ட வீரராகத் திகழ்ந்தவர் பீட்டர்சன். ஆனால் பின்னர் ஆட்டத்திறன் குறைந்து, அணித்தலைமையை இழந்தும் கூட இன்று 2011இல் எல்லோரும் வியக்கும் துடுப்பாட்ட வீரராகத் தோற்றம் பெற்றுவிட்டார் இவர். இம்முறை அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற ஆஷஸ் தொடர் பற்றிப் பேசும் போது எல்லோரையும் விட முதன்மையாக கெவின் பீட்டர்சனே பேசப்படுகிறார்.

முக்கியமானதொரு விடயத்தை இங்கே குறிப்பிடலாம்.

பொறாமையும் போட்டியும் நிறையக காணப்படும் இன்றைய காலகட்டத்தில் மிகச் சிறந்த கிரிக்கெட் வீரரான கெவின் பீட்டர்சனுக்குள் அதிசிறந்த மனிதன் வாழ்ந்துகொண்டிருக்கிறான் என்பதே அதுவாகும். இல்லாவிட்டால் இப்படியாக மனந்திறந்து பேச அவருக்கு எப்படி மனம் வந்திருக்கும்?

# கொட்டிக் கிடப்பது உனக்காக

இவரை சேர்பிய நாட்டின் கவர்ச்சிக் கன்னி என்றே அழைக்கிறார்கள். பொதுவாகவே உலக அழகெல்லாம் கொட்டிக் கிடக்கும் இடமாக ரென்னிஸ் மைதானங்கள் தான் இன்று காணப்படுகின்றன. அந்த அழகு வரிசையில் ஒருவர்தான் அனா இவானோவிச். 2008 ஆம் ஆண்டு பிரென்ச் ஓப்பன் கிராண்ட்ஸ்லாம் வென்ற கையோடு உலக தரவரிசை ஒன்றிற்கு உயர்ந்தவர். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அவரின் ஆட்டத்திறன் குறைந்து போகவே மளமளவென்று சரிந்து தரவரிசை அறுபதில் வீழ்ந்துவிட்டார். ரென்னிஸ் உலகை பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கிய நிகழ்வாக இது அமைந்தது. ஆனால் கதை இத்துடன் முடிந்திருந்தால் கவர்ச்சிக் கன்னியின் கதை முடிந்ததாக இருந்திருக்கும். ஆனால் அப்படியல்ல, அதலபாதாளத்தில் வீழ்ந்த அனா வீறுகொண்டு எழுந்து இரண்டு வருட காலத்திற்குள் பதினேழாவது இடத்துக்கு வேகமாக முன்னேறியுள்ளார்.

உடற்தகுதியை மேம்படுத்திக்கொண்டது ஒரு புறம் இருக்க உளத்தகுதியை உயர்த்திக்கொண்டதுதான் என் எழுச்சிக்குக் காரணம் என்கிறார் அனா. புதிய பயிற்சியாளர்கள், புதிய சூழல் அத்தோடு புத்தாக்கத்திற்குள்ளான எனது நம்பிக்கைகள், எனது தகுதியின் மீது எனக்கிருந்த உறுதிப்பாடு இவையே நான் மீண்டெழக் காரணங்களெனத் தொடர்ந்தும் பேசுகிறார் அவர். நான் இப்போது சரியான திசையில் சென்று கொண்டிருக்கிறேன். எல்லாவற்றிலும் நேர்த்தி தெரிகிறது. என்னால் மீண்டும் மிக மிக முன்னிலைக்கு வர முடியும் என அனா இவ்வருடம் ஏனைய முன்னணி நட்சத்திரங்களுக்குப் பெரும் சவாலாக இருப்பார் என்றே கருதப்படுகின்றது.

சர்வதேச விளையாட்டுக்களில் மிக முதன்மைகள் பெறுவதென்பது இலகுவல்ல. முதன்மை பெற்றபின் அதனைத் தக்கவைத்துக்கொள்வதென்பது இன்னும் கடினமானதாகும். அதுவும் ரென்னிஸ் போட்டிகளில் இன்னும் கடினம். அப்படி வீழ்ந்துவிட்டால் மீண்டும் முதன்மையை அண்மிப்பது என்பது முயற்கொம்புதான். ஆனால் இருபத்திமூன்றே வயதான அனா இவானோவிச் இந்த எல்லா நிலைகளையும் வித்தியாசமாக நிரூபித்தவராக இருக்கிறார். இவருடைய எழுச்சி இவ்வருடம் இவரைத் தரவரிசை பதினேழில் வைத்திருக்கப் போவதில்லை. அவரே கூறுவது போல ஒரேயொரு கிராண்ட்ஸ்லாமுடன் என் ரென்னிஸ் வாழ்க்கை முடியாது. இன்னும் கிராண்ட்ஸ்லாம்கள் எனக்காகக் காத்திருக்கின்றன. அவற்றைக் கைப்பற்றியே தீருவேன் என்பதாக இவ்வருடம் அவருக்கு அமையும் என்று நம்பலாம்.



## விளையாட்டு

ஜோசப் கிருஸ்ணா

# சுவையான விடயங்கள்

அவுஸ்திரேலிய சுழற்பந்து வீச்சாளர்களில் ஒருவர் நேதன் ஹோரிட்ஸ். 2009 இல் இங்கிலாந்தில் மூன்று டெஸ்ட் போட்டிகளில் ஆடி, பத்து விக்கெட்டுக்களைப் பெற்றார். ஆனால் 2010 ஆஷஸ் தொடரில அவர் கவனிக்கப்படவில்லை. இவரின் தெரிவு இன்மைபற்றி இங்கிலாந்தின் சுழற்பந்துவீச்சாளர் கிரேம் சுவான் வேறுவிதமாகக் கூறுகின்றார். இவரை அவுஸ்திரேலியா ஓரம்கட்டியதன் மூலம், அவுஸ்திரேலியத் தெரிவுக்குழுவினர் இங்கிலாந்து அணிக்கும் பெரும் நன்மை புரிந்துள்ளதாக ஒருவகை நக்கலாகக் கூறுகின்றார். இவருக்குப் பதிலாக டோடடி களமிறக்கப்பட்டார். அவரும் சொதப்பவே அவரது இடம் கேள்விக்குறியாயிருந்தது. எனவே அப்போதாவது ஹோரிட்ஸ் மீளவும் அணிக்குள் அழைக்கப்பட்டிருக்க வேண்டும். அதற்கு மாறாக மைக்கல் பியர் உள்வாங்கப்பட்டார். இவற்றை அவதானித்த சுவான் தான் அவுஸ்திரேலிய தெரிவுபற்றி அதிருப்தி தெரிவித்துள்ளனர். பாம்பின் கால் இன்னொரு சுழல் பந்து வீச்சாளர் தான் இன்னொரு சுழல் பந்து வீச்சாளர் பற்றிக் கூற முடியும். அப்படிப் பார்க்கையில் ஆஷஸ் தொடர் முடிவடைந்தபின், சுயவிமர்சனங்கள் செய்து கொள்ளும் போது சுவானின் கருத்துக்கள் சரியானவை என அவுஸ்திரேலிய தெரிவுக்குழு உணரவும் கூடும்.



இன்னொரு புறம் சுவையான புதிய விடயம் ஒன்று வெளியாகிறது. அதாவது 2009 இல் இங்கிலாந்தின் பயிற்சியாளர் பீற்றர் மூர் நீக்கப்பட்டபோது, அவருக்குப் பதிலாக ஷேன்வோனை இங்கிலாந்துப் பயிற்சியாளராக நியமிக்க வேண்டும் என்று கோரியிருக்கிறார் கெவின் பீட்டர்சன். இவர்கள் இருவரும் ஹம்டியர் கவுன்ரிக்காக ஒன்றாக விளையாடியவர்கள் ஆனால் ஏதோ காரணங்களுக்காக இருவரின் இணைப்பையும் இங்கிலாந்து கிரிக்கெட் சபை ஏற்றக்கொள்ளவில்லையென்பதால் இக்கோரிக்கை மறுக்கப்பட்டுவிட்டது. இதுபற்றி ஷேன்வோனிடம் கேட்டபோது அவர் இதனை மறுக்கவில்லை என்பதில் இருந்தே இதில் ஏதோ உண்மை இருப்பது தெரிவு. சிலவேளை ஹேன்வோண் இங்கிலாந்தின் பயிற்றுனர் குழுவையே முழுவதுமாகப் பயன்படுத்தி இருப்பார். அந்த வினைத்திறன் மிக்க குழுவே ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் IPL வெற்றிக்குக் காரணமாக அமைந்தது எது எவ்வாறாயினும் தற்போதுள்ள பயிற்றுனர் அண்டி பிளவர் அதி திறமையான பயிற்சியாளர் என்பதால் ஷேன்வோனின் விடயம் பெரிதாகப் பேசப்படாமல் போயிற்று.

இது இப்படியிருக்க அவுஸ்திரேலிய தேசிய அணியின் புதுவரவு உஸ்மான் கவாஜாடின் வருகை புதிய உணர்வலைகளை அவுஸ்திரேலியாவில் ஏற்படுத்தியுள்ளது. உஸ்மான் தன் தெரிவு பற்றிப் பேசியதை விட அவரின் தந்தையின் கருத்துக்கள் வெறும் அவதானத்தைப் பெற்றுள்ளன. ஒரு கதம்பக்கலாசாரத்தை உள்வாங்கும் அவுஸ்திரேலியா என் மகனைத் தெரிவு செய்ததன் மூலம் அதனைக் கௌரவித்துள்ளது. இஸ்லாமியர் மட்டுமல்ல எந்த மதத்தவராக இருந்தாலும் திறமைக்கு இங்கு உரிய மதிப்பிருக்கும். இங்கு ஒரு நியாயமான கணிப்பொன்று இருக்கிறது. முயற்சியுடையோர் தம் இலக்கினை அடைந்து கொள்ள முடியும். அவுஸ்திரேலியாவில் உங்கள் நியாயமான கனவுகளை நனவாக்கிக்கொள்ள முடியும் என்று பாகிஸ்தானில் இருந்து அவுஸ்திரேலியா சென்று அந்த மண்ணின் பிரயாசையாகிவிட்ட உஸ்மானின் தந்தை மிகப் பெருமையாகக் கூறுகிறார். முன்னதாக லீமன் சைமன்கெட்டிச் ரிக்கிபொன்டிங் ஆகியோர் உஸ்மானின் தெரிவின் நியாயத்தை உற்சாகமாக ஏற்றுக்கொண்டிருந்தார்கள. இப்பொழுது உஸ்மானின் தந்தை அவுஸ்திரேலியாவிலேயே தன் மகனை ஏற்றுக்கொண்டுள்ளதை பெருமையுடன் எடுத்துக் கூறுகிறார். தற்சமயம் அவுஸ்திரேலிய கிரிக்கெட் தளம்பல் நிலையில்தான் இருக்கிறது. ஆனால் கங்காருகளின் தேசம் இந்த விடயத்தில் மிகவும் உயர்ந்தல்லவா நிற்கிறது.

# நல்லதொரு வாய்ப்பு மக்களின் கையில் தீர்ப்பு

நீண்ட காலத்திற்குப் பின்னர் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல் தமிழ் மக்களுக்கு நல்லதொரு வாய்ப்பாக அமையப் போகிறது.நாட்டில் நிலவி வந்த பயங்கரவாதம் அழிக்கப்பட்டு இலங்கைத்தீவு அபிவிருத்திப் பாதையை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கும் இந்த வேளையில் வரும் தேர்தல் தான் தமிழ் பிரதேசங்களின் அபிவிருத்திக்கு முக்கிய பங்காற்றும் என்பதில் ஐயமில்லை. இந்தத் தேர்தலில் தமிழ்கட்சிகளின் நிலைப்பாடுகள் மக்கள் மத்தியில் எந்தளவிற்குச் செல்வாக்குச் செலுத்தப் போகிறது என்பது தான் கேள்விக்குறியாக இருக்கின்றது. கடந்த காலத்தில் நடைபெற்ற தேர்தல்களைக் காட்டிலும் இம்முறை நடைபெறப் போகின்ற உள்ளூராட்சி தேர்தல் கட்சிகளிற்கிடையில் சங்கடத்தையும் ஏற்படுத்தப் போகின்றது.

கடந்த காலத்தில் தமிழ் கட்சிகள் அனைத்தும் எதிர் எதிர் திசைகளில் நின்று தங்களுக்குள் இருந்த பகைமைகளை வெளிக் காட்டி தேர்தல் பிரசாரங்களை மேற்கொண்டு வந்தனர். ஆனால் இப்போது தமிழ்க்கட்சிகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து செயற்பட ஆரம்பித்துள்ளன இந்த நிலையில் அரசியல் கட்சிகள் அனைத்தும் இனி அபிவிருத்தியை முதன்மைப்படுத்தியே தேர்தல் களத்தில் குதித்து தங்கள் பிரசாரங்களை முன்னெடுக்கப்போகின்றன.



கடந்த காலத்தில் பல்வேறு வாக்குறுதிகளை அள்ளிவீசி மக்களை மாயைவலைக்குள் விழுத்திய அரசியல் வாதிகள் செய்தது என்ன? சில விரல்விட்டு எண்ணக்கூடிய பாராளுமன்ற உறுப்பினர்களைத் தவிர எவரும் தமிழ் மக்களின் துன்பத்தில் பங்கெடுத்துக் கொள்வதில்லை. வருடத்தில் மூன்று தடவை வெளிநாட்டுச் சுற்றுலா என்று சென்றுவிட்டு தேர்தல் காலங்களில் மட்டும் வந்து மக்களுக்காக வெளிநாடு சென்றோம். மக்களின் பிரச்சினையை தீர்க்க கதைத்து விட்டு வருகின்றோம் என்று கதைவிடுபவர்களை மக்கள் தற்போது இனங்கண்டு கொண்டு விட்டார்கள். தற்போது உள்ளூராட்சித் தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கும் நேரத்தில் மக்கள் சரியான தெரிவைச் செய்யவேண்டியவர்களாக இருக்கின்றார்கள்

நாட்டின் அபிவிவிருத்தியில் தற்போதைய அரசாங்கம் முனைப்புக் காட்டிவருகின்றது நீண்டகாலமாகத் திறக்கப்படாமல் இருந்த சங்குப்பிட்டி ஏ-32 பாதை அண்மையில் திறக்கப்பட்டிருக்கின்றது. இதேபோன்று இனிவரும் காலங்களில் வடக்கில் அபிவிருத்தித் திட்டங்கள் வேகமாக முன்னெடுக்கப்படவுள்ளன. இவ்வாறு முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களில் தமிழ் மக்களின் பங்கு இன்றியமையாத ஒன்றாக அமையப்போகின்றது. அதற்காக தமிழ் மக்கள் வரும் உள்ளூராட்சித் தேர்தலை சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். அது மட்டுமல்லாமல் சரியானவர்களையும் தெரிவு செய்கின்ற பொறுப்பும் இருக்கின்றது.

எனவே மக்கள் சரியானவற்றை தெரிவு செய்து தங்கள் பிரதேச அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்கவும் வேண்டும்.

# சொக்கன் ஒரு சிந்தனாவாதி கலையுலகின் இரட்சகன்

நீறு பூத்த, நீறதன் மேல் பொட்டு, புன்னகை தவழும் பூ முகம், சிந்தனையின் ஆழத்தைக் காட்டும் அகன்ற நெற்றி, எதையும் கூர்ந்து கவனிக்கும் கண்கள். வார்த்தையின் பெறுமதியை உணர்ந்து ஒவ்வொன்றாக வெளிப்படுத்தும் உரையாடல். உள்ளத்தைப் போல தூய வெள்ளை ஆடை, இத்தனை திருக்கோலத்துடன் எம் மத்தியில் வாழ்ந்த ஓர் அறிஞன், ஓர் சிந்தனைவாதி, மாபெரும் கலைஞன், தான் மூதறிஞர் சொக்கன். சொக்கனின் இந்து சமய நூல்களை எடுத்து நோக்கும் பொழுது அறிவு தெளிந்த நிலையில் எளிமைதானே கைவரும் என்பதற்கு இந்த நூல்கள் சிறந்த சான்றாக உள்ளன. நூலாசிரியரின் ஆழ்ந்த சமய அறிவும் இந்துநாகரிக அறிவும், தமிழ் அறிவும் கற்பித்தல் அனுபவ முதிர்ச்சியும் உளவியல் அறிவும், பிறவும் இந்நூல்களிற் பளிச்சென்று தெரிகின்றன. அறநெறிப்பா மஞ்சரி (1969) குறிப்பிடத்தக்கதொரு தொகுப்பு நூலாகும். இது வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கேற்ற அறநெறி சார்ந்த நன்மொழிகளைச் சங்ககாலத்திலிருந்து இன்றுவரை எழுந்த அறநெறிப் பாடல்களிலிருந்து தொகுத்துத் தருகின்றது. சொக்கனின் பாரதி பாடிய பராசக்தி (1974) என்ற நூல் பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுதப்பட்ட பல்துறை சார்ந்த கட்டுரைகளை உள்ளடக்கிய தொகுப்பு நூல். இதில் சாக்தநெறி பற்றியும் தமிழகத்திலேயே நிலவும் சக்தி வழிபாடு பற்றியும் பாரதியின் பராசக்திப் பாடல்கள் பற்றியும் அவரது பேரிலக்கியம் பற்றியும் சிறப்பாக எடுத்துக் கூறப்படுகின்றன.

நல்லூர்க் கந்தன் மீது பாடிய நல்லூர் நான் மணிமாலை பக்திச்சுவை நிரம்பியது இவரது நல்லூர் நான்மணிமாலை வெண்பா கலித்துறை விருத்தம், அகவல் ஆகிய பா வடிவங்களில் முருகன் பெருமையைப் பேசுகின்றார். ஆலயங்களின் தலச்சிறப்புக்களையும் கோயிலில் எழுநதருளிய மூர்த்தியின் புகழையும் கூறும் ஊஞ்சற் பாடல்களும் சொக்கனின் ஆக்கங்களை அணி செய்கின்றன. 1968 ஆம் ஆண்டு இவர் வெளியிட்ட நல்லைநகர் நாவலர் என்ற நூல் நாவலரது வரலாற்றினைச் சுவையும் பக்தியும் ததும்ப வெளிப்படுத்தியது எனலாம். சொக்கின் சிறுகதைகளை எடுத்து நோக்கும் போது பாடசாலை மாணவனாயிருந்த போதே வள்ளி, குப்பையிலே மாணிக்கம் கதைகள் எழுதிய சிறுவனிடம் திறமையிருந்ததைப் பத்திரிகை ஆசிரியர்களும் சகபாடிகளும் கண்டு வாழ்த்தினார்கள். 1972.06.02 இல் சொக்கன் சிறுகதை என்ற சிறுகதைத் தொகுப்பினை நயினை கிருபானந்தா வெளியிட்டுள்ளார். மொத்தத்தில் சொக்கனின் சிறுகதைகளில் இலக்கண வழுவற்ற செம்மை சார்ந்த தமிழில் பழந்தமிழர் பண்பாட்டினடியாக மானுட மேன்மை நோக்கையும் கலாவியத்தியையும் காண முடிகிறது. சொக்கனின் நாடகக் கலையை எடுத்து நோக்கும் பொழுது வரலாற்று நாடகங்களுக்குரிய பண்புகள் குறைவின்றி எழுதுதல் எல்லோர்க்கும் எளிதன்று என்பது புலனாகும். பாத்திரங்கள் தமது சூழ்நிலையிலே தோன்றி நடமாட வேண்டும். தமது காலத்திற்குப் பொருந்தச் சிந்தித்தும் உணர்ந்தும் பேசி செயலாற்றல் வேண்டும். வரலாற்றுப் பாத்திரங்களுடன் ஆசிரியர் தாமாகப் புனைந்துள்ள பாத்திரங்களை இணைக்கும் பொழுது அமையும் நிலவுதல் வேண்டும். இவற்றைச் செய்து முடிப்பதற்கு வரலாற்று உணர்வும் நூற்புலமையும் நாடக நுணுக்கமும் பெரிதும் வேண்டற்பாலன. அவற்றைச் சொக்கன் குறிப்பிடத்தக்க அளவு பெற்றுள்ளார் என்றே கூறவேண்டும் நாடகத்துறையை எடுத்து நோக்கும் பொழுது நாடகம் முழுவதும் ஆசிரியரது இலக்கியப் பயிற்சியும் இசை ரசனையும் இழையோடுகின்றன.

சொக்கன் நாடக ஆசிரியர் மட்டுமன்றி நாடக ஆய்வாளராகவும் விளங்குகின்றார். ஈழத்து தமிழ் நாடக வளர்ச்சி என்றும் தலைப்பில் பேராசிரியர் சு.வித்தியானந்தனுடைய மேற்பார்வையிலே இவர் ஆய்வு மேற்கொண்டார். இவர் ஆய்வு செய்து சமர்ப்பித்த ஆய்வேட்டுக்கு பேராதனைப் பல்கலைக் கழகம் முதுமானிப்பட்டம் வழங்கியது. தனாக நாடகங்களை எழுதிய பொழுதிலும் மரபு வழி இலக்கியக் கதைகளையும் கவிஞன் பரிசு, தெய்வப்பாவை போன்ற நாடகங்களை இத்தகைய சொக்கனின் பேச்சுக் கலைத் தமிழ் மேடைகளிலும் சமய மேடைகளிலுமேயே பெரும்பாலும் நிகழ்தந்தது. தனியுரைகள் கருத்தரங்கு உரைகள், பட்டிமன்றப் பேச்சுக்கள் என அவருடைய பேச்சுத்துறைகளை பகுத்துக் கொள்ளலாம். இவ்வரங்குகளுக்கரிய உத்திமுறைகளை புத்திமுறைகளையும் தெரிந்து கொண்டு பேசும் வல்லமை இவரிடம் குடிகொண்டுள்ளது. மரபுத்தமிழ் அரங்குகளிலும் நவீன தமிழ் மேடைகளிலும் உறுதியாய் நிற்கக் கூடிய உரம் இவரிடம் உண்டு. நூல் வல்லமையாலும் நா வன்மையாலும் சொல்லமுதம் வழங்கிச் சபையோரை சுவையோராக்குவதில் கெட்டித்தனம் மிக்கவர் சொக்கன்.

மாணவரோடு தொடர்புள்ள எல்லாத்துறைகளையும் தழுவியது சொக்கனின் கட்டுரைக் கோவை இயற்சொற்களைப் பயிலும் எழிமையான உரைநடை, ஒழுங்கான பந்தியமைப்பு செப்பமான குறி யீடுகள் இவை கட்டுரைக் கோவையின் சிறப்பியல்புகள் இவ்வியல்புகள் அனைத்தும் ஒருங்கே அமைந்து கட்டுரைகள், கடிதங்கள், கற்பனைக் கதைகள், உரையாடல்கள், கூட்ட அழைப்புக்கள், அறிக்கைகள், பத்திரிகைச் செய்திகள் ஆகிய பிரிவுகளில் கட்டுரைக் கோவைச் சறப்பு அமைந்துள்ளது எனலாம் திருக்குறள் முழுவதற்கும் சொக்கன் அவர்கள் ஒரு பொழிப்புரையும் எழுதியுள்ளார்.

சிறுகதை எழுத்தாளராக, கவிஞராக, நாவலாசிரியராக, நாடக ஆசிரியராக, கட்டுரையாளராக, கவியாளராக, சமயநூல் எழுத்தாளராக, பேச்சாளராக, மொழிபெயர்ப்பாளராக, நடிகராக நெறியாளராக, ஆசிரியராக, அதிபராக படநூல் எழுத்தாளராக என்று இவர் தொட்டுத் துலங்காத துறையும் இல்லை. இவ்வளவும் கூறிய பின்னும் ஒரு வினா என்னுள்ளத்தில் தோன்றுகின்றது. ஈழத்து தமிழ் இலக்கிய உலகில் சொக்கனின் பங்கு எப்படிப்பட்டது. தமிழ் அறிஞர் திருக்கூட்டத்திலே அவர் எந்த வரிசையில் அவர் எந்த இடத்தில் நிற்கின்றார்? வாழ்க்கையினை நேரடியாக அணுகாது நூல்களின் வாயிலாக அணுகும் தன்மையே சொக்கனிடம் காணப்படுவதாகும். இது சொக்கனின் பலம். அவரின் பலவீனமும் அது தான்.



நயினை
கி. கிருபானந்தா



# ஆபத்தானவர்கள்

துரதிஷ்ர்டவசமாக அவள் கண்டுபிடிக்கப்பட்டால், அவள் உங்களைப் பற்றி பொலிசில் சொல்லாம். பொலிஸ் உங்களையும் தேடிக் கொண்டிருப்பதை நான் தனியாக உங்களுக்கு ஞாபகப்படுத்த வேண்டுமா என்ன?"

சுருட்டை ஆஷ்ட்ரேயில் போட்டு நசுக்கி அணைத்தபடி எழுந்தார்.

"நான் உடனடியாகக் கிளம்புவதற்கு வேறொரு அவசியமும் இருக்கிறது. என்னுடன் வந்த பெண்ணை நன் கண்டுபிடிக்க வேண்டும். இல்லாவிட்டால், அது எனக்கு ஆபத்தாகிவிடும்!" புஷ்பராஜ் மற்றோர் உபாயத்தைப் பயன்படுத்தினார்.

கங்காபிரசாத் சற்று நேரம் சிந்தனையில் ஆழ்ந்தார். அறைக்குள் குறுக்கும் நெடுக்குமாகச் சற்று நேரம் உலாவினார்.

'புஷ்பராஜ் சொல்வதும் சரிதான். எனினும் தனது திட்டத்தை முழுவதுமாக வெளிப்படுத்திய பிறகு ராபின்சனை இப்படி வெளியே விடலாமா?'

"நாம் பரஸ்பரம் அளவுக்கு அதிகமாக நம்பிக்கை கொள்வது நியாயமா?" கங்காபிரசாத் கேட்டார்.

"தேவையில்லைத்தான். என்னைப் பொறுத்தவரை இது எதிர்பாராத ஒரு நிகழ்ச்சி.

இந்த உபாயம் பலித்தது. உண்மைதான. இருப்பினும் புஷ்பராஜை வெளியேவிட அவர் மனம் ஒப்புக்கொள்ளவில்லை.

"நீங்கள் சொல்வதெல்லாம் சரிதான். நீங்கள் அவளைத் தேடுவீர்கள். கண்டுபிடிக்க முடியாமலும் போகலாம். அதேசமயம் பொலிஸ் உங்களை அடையாளம் தெரிந்து பின்தொடர்ந்தால் நிலைமை மேலும் சிக்கலாகிவிடாதா?" கங்காபிரசாத் கேட்டார்.

"நானும் இதையெல்லாம் யோசிக்கவே செய்தேன். அதனால் அவளைத் தேடா மல் இருக்கவும் முடியாது. நான் எச்சரிக்கையானவன். எந்த வேலைக்கு நடுவிலும் என்னைத் தற்காத்துக்கொள்ளும் உள்ளுணர்வு ஒளிந்திருக்கும். அதனால் வேறு எதவும் பாதிக்கக் கூடாது என்பதும் எனக்குத் தெரியும். எனவே, நான் குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட வேலையைக் கச்சிதமாக முடிப்பேன். எது எப்படியிருந்தாலும் நீங்கள் குறிப்பிட்ட இடத்தில் நான் இருப்பேன். என்னை நம்பும் நீங்கள், என் வார்த்தையை நம்பாவிட்டால் எப்படி?"

"சரி.. உங்களது யோசனைக்கு நான் ஒப்புக்கொள்கிறேன். உங்கள் வேலையை முடித்துக்கொண்டு பார்க்குக்கு முன்னால் காரை ரிப்போர் செய்யும் சாக்கில் காத்திருங்கள். சரியாக நள்ளிரவு பன்னிரண்டு மணி பத்து நிமிடத்துக்கு நான் பார்க்குக்கு வருவேன். எங்கிருந்தாவது கார் ஒன்றை அமர்த்திக்கொள்வதோ, நிறுத்திக்கொள்வதோ உங்கள் விருப்பம். ஆனால், அந்தக் காரை அங்கேயே விட்டுவிட வேண்டும்!"

"அப்படியே செய்கிறேன்." புஷ்பராஜ் ஒப்புக்கொண்டார். மறுவிநாடி அவர் கண்கள் இரண்டும் கட்டப்பட்டன. அவர் வெளியே அழைத்துவரப்பட்டார. நகரின் பரபரப்புக் குறைந்த ஒரு பகுதியில் அவரை இறக்கிவிட்ட கார், சட்டென்று அவர் பார்வையிலிருந்து மறைந்தது.

அந்த இடம் எதுவென்று சட்டென்று அவருக்கு அடையாளம் தெரிந்தது. பக்கத்தில் தென்பட்ட பொதுக் கழிப்பறைக்குள் நுழைந்தவர். தனது பிரீ:.ப்கேஸை திறந்தார். வேடம் மாறி வெளியே வந்தார். ஒருவேளை தன்னை கங்காபிரசாத்தின் ஆட்கள் தொடர்ந்து வருவதாக இருந்தால் அவர்கள் ஏமாறட்டும் என்பதற்காகவே இந்த நடவடிக்கை. கங்காபிரசாத்தின் கூடாரத்தில், புஷ்பராஜை இறக்கி விட்டவர்களும், பின்தொடர்ந்தவர்களும் வந்து சேர்ந்தனர். "ராபின்சன் எங்கு போனான் என்று உங்களுக்குத் தெரியவில்லையா?" கங்காபிரசாத் கேட்டார்.

"காரிலிருந்து இறங்கிய மறுவிநாடி அவர் எங்கே, எப்படி மறைந்தார் என்று எங்களால் கண்டுபிடிக்க முடியவில்லை." கார் ஓட்டி வந்தவர் கூறினார்.

"கையாலாகாத நீங்கள் எந்தவிதமான சமாதானமும் சொல்லத் தேவையில்லை. அவனது பிடி என்னிடம் இருக்கிறது. நான் அவனைக் கவனித்துக்கொள்கிறேன். அவன் என்னைவிட்டு எங்கும் செல்ல முடியாது!" கங்காபிரசாத்தின் முகம் இருளடைந்தது.

"அந்தக் கட்டடத்துடன் அவனும் சேர்ந்து அழியப் போவது அவனுக்குத் தெரியாது. மட்டுமன்றி அதைச் சிதைத்தது அவன்தான் என்றும் உலகம் புரிந்துகொள்ளும்" கங்காபிரசாத் சுரட்டு ஒன்றை எடுத்துப் பற்ற வைத்தார்.

பொலிஸ் கிளப்பை அடைந்த புஷ்பராஜ் அங்கிருந்து தாமஸ் ஜேக்கப்புக்குப் போன் செய்தார்.

அவரும் உடனே வந்து சேர்ந்தார். நடந்ததை புஷ்பராஜ் விவரித்தார். அதே நேரம் கங்காபிரசாத்தின் இருப்பிடத்தையும், கிளமெண்ட் டிசூசா எங்கே போனான் என்பதையும் அவரால் தெளிவாகக் கூற முடியவில்லை.

"எப்படி இருந்தாலும் நீங்கள் ஓட்டலுக்குப் போனது ஒரு நல்ல விஷயம்தான். இல்லாவிட்டால், அந்தக் கட்டடம் சிதிலமடைவது நமக்குத் தெரியாமல் போயிருக்கும். சரி... மேற்கொண்டு இதில் நாம் என்ன செய்யலாம்?"

(தொடரும்....)

# மேய்ச்சல் வெளி 83

சுல்தான்

# நமக்கு வேண்டியது தீர்வுக்கான ஒற்றுமை

உள்ளூராட்சித் தேர்தல்கள் அறிவிக்கப்பட்டிருக்கிறது. தமிழினத்தின் ஒற்றுமை பற்றியும், ஒன்றுபட்டு வாக்களிப்பதால் தமிழர்கள் அடையக் கூடிய வீறு பற்றியும், எதிரிகளுக்குக் காட்டக் கூடிய பயப்பீதி பற்றியும் மீண்டும் ஒரு சுற்று பிரலாபங்களைக் கேட்டு சில வாரங்களுக்கு நம் தலையில் கிறுகிறுப்பை ஏற்றிக் கொண்டு உலாவரக் கூடிய வாய்ப்புக் கிடைக்கப் போகிறது.

இதுவரை காலமும் வாக்களிப்பில் ஒற்றுமையை சரிவரக் காட்டாததன் காரணமாகவே இன்னும் அவலங்கள் தொடர்கின்றன. இம்முறை மூச்சுப்பிடித்து அந்தப் பிழையை சரிசெய்துவிட வேண்டும். உலக எதிரிகளை வீராவேசத்துடன் தொடர்ந்து எதிர்த்துக் கொண்டிருக்கக் கூடிய யாருக்காவது ஏகப்பிரதிநிதித்துவத்தைக் கொடுத்துவிட்டால், நம் கவலை எல்லாம் தீர்ந்துவிடும். இந்தத் தேர்தலிலாவது அதைச் சாதித்துவிட வேண்டும். இல்லையேல் அடுத்த தேர்தலுக்கும் தமிழர்தம் ஒற்றுமையின்மை பற்றிய கவலையையே நம் மற்றெல்லாக் கவலைகளையும் விடப் பெருத்த கவலையாகப் பட வேண்டியிருக்கும் என்ற பதகளிப்பு நமக்கு உருவாகப் போகிறது.

தலைவர்களும் பத்திரிகைகளும், நம்மை நாமே நொந்து கொள்ளுமளவுக்கு, ஒன்றுபட்டால் உண்டு வாழ்வின் மகத்துவத்தை, அதே மாறாத நியாயங்களோடு எடுத்தோதப் போகிறார்கள். இந்திய அணிக்கும் பாகிஸ்தான் அணிக்குமிடையே கிரிக்கெட் போட்டி நடைபெறும்போது மட்டும்தான் ஒவ்வொரு இந்தியக் குடிமகனுக்கும் 'இந்தியன்' உணர்வு ஏற்படுவதாகச் சொல்லப்படுவதுண்டு. அது போல, இங்கே இப்படி ஏதாவது தேர்தல் வரும்போதுதான் நாமும் தன்மானத் தமிழர்களாய் உணர்ந்து கொள்ளும் பாக்கியம் கிடைக்கிறது.

இந்த வண்டவாளத்துக்கிடையில், தமிழர்களின் ஒற்றுமைக்கு வேட்டு வைப்பதற்காகத்தான் சிங்கள அரசாங்கம் அடிக்கடி தேர்தலைக் கொண்டுவருகிறது என்ற 'தமிழ் ஜனநாயக'க் கண்டுபிடிப்பைச் செய்து வெளிநாட்டிலிருந்து இணையத்தளங்களில் எழுதும் கோமாளிக் குஞ்சுகளும் தங்களைத் தன்மானத் தமிழ்த் தேசியர்கள் என்பதாகத்தான் பாவனை பண்ணிக் கொள்கின்றன.

அந்த அளவுக்கு தேர்தல் என்றால் தமிழின ஒற்றுமை, ஒற்றுமை என்றால் தேர்தலில் வாக்குப்போடுவது என்பதற்கு மேல் எண்ணமுடியாதபடி நம் வாய்பாடு மிகச் சுருக்கமாகி விட்டது. ஒற்றுமைப்பட்டு என்னத்தைச் சாதிப்பது என்பதற்குப் பதிலாக ஒற்றுமைப்பட்டு எதிர்த்தரப்புக்கு 'ஷோ' காட்டும் திருப்தியொன்றே போதும் சிலருக்கு. போரில் வெல்லமுடியுமா முடியாதா என்பதையெல்லாம் விட்டுவிட்டு, அடித்தெடுத்த ஆயுதங்களின் 'ஷோ'வைப் பார்த்துக் கொண்டிருந்தால் போதுமென்றிருந்த மன நிலையின் தொடர்ச்சி. என்ன செய்ய?

இவர்கள் ஒருபுறமிருக்க, இவர்களை விடவும் ஆக்ரோசமாக (நாமிருக்கும் நிலையை இவர்கள் விவரித்துச் சொல்வதைக் கேட்டு நாமே குலைப்பனில் நடுங்கும்படியாக) இரத்தக் கண்ணீரைப் பெருக்கியபடியே இருக்கிறார்கள் தமிழக தமிழ்த் தேசியர்கள். இங்குள்ள குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்கக் கூட இந்த இரத்தக் கண்ணீர் உதவாதென்பது அவர்களுக்கும் தெரியும். சிங்கள இனம் இருக்கும்வரை ஈழத்தமிழினத்தின் கஷ்டங்கள் நிரந்தரமே. உங்கள் வாழ்க்கை போனால் என்ன, சிங்களவனை சும்மா விட்டுவிடலாமா? அதனால் எங்கள் பொங்குதமிழ்க் கண்ணீர் 'ஷோ'வைப் பார்த்து தமிழாவேசக் கொதிமூச்சை விட்டுக் கொண்டிருப்பதே உங்களுக்கு ஒரே வழி. கடைசி உயிர் வரை அழித்து தமிழீழத்தைப் பெறும் கனவுதான் சரிவரவில்லை, கடைசிக் கந்தாயம் வரை வாழ்க்கையை இழந்தாவது உங்குள்ளவர்கள், சிங்களவன் பிழை என்பதைக் காட்டிக் கொண்டிருக்க வேண்டும். தமிழர்களா கொக்கா?" என்பதே அவர்களின் தமிழ்ச் சகோதரத்துவச் செய்தி.

துன்பப்படுபவர்களுக்கு வாழ்க்கையை வழங்க எந்த ஒரு துரும்பையும் எடுத்துப் போடமாட்டார்கள். தொடை தட்டி எதிரியைத் திட்டி முழக்குவதில் மட்டும் பேராதரவு விநியோகித்துக் கொண்டிருப்பார்கள். ஈழத்தமிழர்களுக்காக இரத்தக் கண்ணீர் வடிக்கும் தமிழக இனவீறாளர்கள், சிங்கள ராட்சசர்களைக் கட்டமைக்கும் விதம் சிறுபிள்ளைத்தனமானது மட்டுமில்லை, நம்மைச் சிக்கலில் மாட்டிவிடும் கொழுப்புத்தனமுமாகும்.

தமிழக மீனவர்கள் மீது சிங்கள இராணுவத்தினர் தாக்குதல் என்றவாறான செய்திகளைத் தினமும் தூக்கிப்பிடித்து, அதை ஈழத்தமிழர்களுக்கான ஆதரவாகவும் காட்டும் இனவாத நாடகம் நடத்துகிறார்கள். சிங்கள இனவெறுப்பைக் கக்குவதை ஈழத்தமிழர்களுக்கான அனுதாபமாய் காட்டி ஏமாற்றுகிறார்கள். தமிழக மீனவர்கள் அத்துமீறி மீன்பிடிப்பது யாருடைய கடலில்? போரினால் நொந்து வாழ்வை மீட்க அவதியுறும் வடபகுதி மீனவர்களின் வாழ்வாதாரமான அதே கடல்பகுதியில்தான். இப்போதுதான் வலையும் வள்ளங்களும் மீன்பிடி அனுமதியும் பெற்று சிறிது சிறிதாகத் தங்கள் வயிற்றுப் பிழைப்பை ஆரம்பிக்கும்.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)




ஒரே ஒரு குழு மட்டும் ஒரு நல்ல ஆங்கிலக் கவிதையைத் தழிழில் மொழிபெயர்த்து இனிமையா அதுக்கு மெட்டு போட்டு லேசான துடிப்போட பாடினாங்க. அந்த அனுபவம் இலக்கிய அனுபவமாகவும் இசை அனுபவமாகவும் இருந்தது. அதனால் இந்த முதல் பரிசை அவங்களுக்கும் பங்குபோட்டுக் கொடுக்க விரும்பறேன். அகல்யா அண்ட ப்ரமோத் ஆ.ஃ.ப் சரஸ்வதி ஆர்ட்ஸ் அண்ட சைன்ஸ் காலேஜ்இறுதியா மெடிக்கல் காலேஸ"க்கு கொடுக்கலைன்னா இந்த ஹாலை விட்டு நாங்க வெளியே போக முடியாது. அவங்களுக்கு இரண்டாவது பரிசு.

ப்ரமோத் அவளை இறுக்க அணைத்துக் கொண்டிருப்பதை அப்போதுதான் அகல்யா உணர்ந்தாள்.

இந்தக் கணத்தின் உற்சாகத்தில்,வெற்றிப் பூரிப்பில் பல சம்பிரதாய நடத்தைகள் அறுத்துபோய் பரிசின் நியாயம் மட்டும் மனத்தை ஆக்கிரமிக்க,செக்ஸை மறந்து மார்புடன் உரசுவதை மறந்து அணைத்த அணைப்பு அது. அகல்யா கொஞ்சம் நிதானமாகவே விலகிக்கொண்டாள்.

ரகு,'இதுதான் சாக்குன்னு

**சரஸ்வதி ஆட்ஸ் அண்ட் சயன்ஸ் கல்லூரி மாணவர்களான அகிலா, ப்ரமோத் ஆகிய இருவரும் அகில இந்திய மாணவர் இசைவிழாப் போட்டியில் கலந்துகொண்டனர். ஒருவருக்கொருவர் சளைக்காது வண்ணம் இரு கல்லூரி மாணவர்களும் தத்தமது திறமைகளை வெளிப் படுத்தியிருந்தனர். போட்டியின் முடிவுகளைப் போட்டி நடுவர் அறிவித்துக் கொண்டிருக்கிறார்.**

கைபோடறியா?' மேடையின் பக்கவாட்டிலிருந்து சுருக் என்றது. பொறாமை அவன் முகத்தை இன்னும் கறுப்பாக்கியிருந்தது. அகல்யாவின் சந்தோஷக் கிண்ணத்தில் ஒரே ஒரு துளி விஷம்.

ஏராளமானவர்கள் கை குலுக்கி வாழ்த்துத் தெரிவித்தனர். வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றுக்கொள்ள "யார் ஜெயிச்சது?" என்று ஒருதன் கேட்க "எஸ்.ஏ.சி" என்று கூறியவாறு நடனமாடி மகிழ்ந்தார்கள். அவர்களின் விடுத்திக்கு வரும் வரை வானின் யன்னல் வழியாகக் கை நீட்டி தையத்தக்க நடனம் தொடர்ந்துகொண்டே இருந்தது.

விடுத்திக்கு வந்து உடை மாற்றி பல்தேய்த்து படுத்த போது மணி ஒன்று. மாமா விடம் இருந்து காலையே வந்திருந்த கடிதம் கீழே கிடந்தது.

அன்புள்ள
அகல்யாவுக்கு!
சுந்தரேசனின் ஆசீர்வாதங்கள். நீ நலம்தானே? நீ கேட்டபடி ஐந்நூறு ரூபாய் மணி-யோடர் அனுப்பியுள்ளேன். செவ்வாய்க்கிழமைக்குள் கிடைக்கவில்லை என்றால் தபாலகத்தில் போய்க் கேட்கவும். கொம்பியூட்டர் கற்க விரும்புவதில் எனக்குச் சந்தோசமே. ஆனால் ஒரேயடியாக பத்தாயிரம் ரூபா கொடுப்பது சிரமம். சாத்தியமில்லைத்தான், அவ்வளவு முக்கியமென்றால் லோன் கேட்டுப் பார்க்கிறேன். வேறு ஏதாவது குறைந்த செலவில் கோஸ் இருக்கிறதா?

("தாயில்லாத...." என்று ஆரம்பித்து அந்த வார்த்தையைப் பலமுறை அழித்துவிட்டு) உனக்கு எந்தவிதத்திலும் படிப்பு முடியும்வரை குறைவைக்கமாட்டேன். நான் வரும் 18 ஆம் திகதி வேலைவிடயமாக வரும் போது வந்து பார்க்கிறேன்.

இப்படிக்கு
எஸ்.சுந்தரேசன்

அகல்யா தன்னைக் கண்ணாடியில் பார்த்துக்கொண்டாள். "உனக்கு என்ன வயது பத்தா?" வெற்றியின் ஒவ்வொரு கணத்தையும் திரும்ப நினைத்து அதை மனதில் தேங்க வைத்தாள். ஒத்திகை பார்த்தது, ரிதம் அமைத்தது, காலையில் ஏற்பட்ட தடுமாற்றம், மாட்டேன் என அழுதது, ப்ரமோத் சமாதானப்படுத்தியது, பாட்டுத் தொடங்குவதற்கு முன் சட்டென்று ஏற்பட்ட வியர்வைப் பெருக்கம், இரண்டாம்வரியிலேயே பார்வையாளர்கள் ஒன்றிப்போனது, அதனால் ஏற்பட்ட குதூகலம், முடிவைக் கேட்டதும் தன்னிச்சையாகக் கண்களில் வழிந்த நீர், பின்னர் தன்னிலை மறந்த அந்த அணைப்பு... அப்பா! எவ்வளவு இறுக்கமான...அகல்யா தன்னைத்தானே அப்படி அணைத்துக்கொண்டாள்.

ப்ரமோத்தின் ஆப்ரஷேவ் வாசனை இன்னும் அகல்யாவுக்கு இதமாகவே இருந்தது.

கீழே விடுதியின் பொதுத் தொலைபேசி இடைவிடாது அடித்துக்கொண்டிருந்தது. காவல்காரன் எடுப்பான் தூங்கிப் போயிருக்க வேண்டும். அகல்யா இறங்கி வந்து அதை எடுத்து "ஹலோ" என்றாள்.

"ரூம் நம்பர் 201 இல் அகல்யாவைக் கூப்பிடுங்கள்"

"அகல்யாதான் பேசிறேன்"

"அகல்யாதான்... அதிர்ச்சி...ப்ரமோத்"

"என்ன ப்ரமோத்?"

"எனக்குத் தூக்கமே வருகுதில்லை"

"எனக்கும்தான்"

"எல்லாத்தையும் வரி விடாம நினைச்சுப் பார்த்தேன்"

"நானும்"

"நாங்கள் கட்டாயம் சந்திக்கவேணும்"

"சரி"

"இப்ப"

"இப்பவா? நேரம் என்ன தெரியுமா"

"முன்மண்டபத்தில் றெடியாய் இரு. அரை மணித்தியாலத்தில் வந்துவிடுகிறேன்"

"கொஸ்ரல் பூட்டியிருக்கு ப்ரமோத்"


"அதெல்லாம் என் பிரச்சினை. தயாராய் இருக்கிறது மட்டும் உன் வேலை...."

"நான் வரலை. நீ ஏதோவெல்லாம் பண்ணவாய்...."

"நீ வாறாய்"

**இன்பம் தொடரும்**

இவ்வாரச் சிறுகதை




**அன்று** விடியற்காலை ஆனந்த் கைதிகளில் ஒருவறாக சிறைச்சாலையில் நிற்கும் பூச்செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிக் கொண்டு நின்றான். மறுபக்கத்தில கைதிகளில் சிலர் கதைக்கும் சத்தம் ஆனந்தின் காதுகளில் விழுந்தது. "டேய் இன்றைக்கு என்ன விசேஷம் தெரியுமா?" காதலர் தினம் அதுதான் இளம் ஜோடிகள் றோசாப்பூவோடு செல்கிறார்கள் என்று கதைத்தார்கள்.

ஆனந்திற்கு தலை சுற்றுவது போல் இருந்தது. ஆம் போன வருடம் இதே நாளில் தானே என் காதலைத் தொலைத்தேன் என்று பழைய நினைவுகளுடன் பக்கத்தில் நின்ற மரத்தடியில் உட்கார்ந்திருந்தான்.

ஆன்ந்தும் கௌரியும் ஒரே ஸ்கூலில் படித்தவர்கள். சிறு வயதில் இருந்தே ஒரே வகுப்பில் படித்துக் கொண்டிருந்தனர்.

கௌரிக்கும் ஆனந்தை நன்றாகவே பிடித்திருந்தது. காட்டிக் கொடுக்கவில்லை தன்மனதிற்குள்ளே ஆனந் மேல் உள் பாசத்தைப் பூட்டி வைத்திருந்தாள். கௌரி பெரிய பணக்காறவீட்டுப் பிள்ளை. அழகும் அந்தஸ்து எல்லாம் அவளிடம் இருந்தது. ஆனந் வறுமைப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவன். பெப்ரவரி பதின் நான்கு அன்று ஆனந் நினைத்தான். இன்றைக்கு எப்படியாவது கௌரியிடம் தன் காதலைச் சொல்ல வேண்டும் என்ற ஆவலுடன் அவனது அன்புப் பரிசாக சிறிய பூங்கொத்தை வாங்கி அவள் வரவுக்காகக் காத்திருந்தான்.

காத்திருந்தவனுக்கு ஒரு பெரிய ஏமாற்றம் வரவேற்றது. கௌரி யாரோ ஒரு இளைஞனோடு சிரித்து சிரித்து கதைத்துக் கொண்டு வந்தாள். ஆனந்தைக் கண்டும் காணாதவளாய் போனாள். ஆனந்திற்கு உலகமே சுற்றுவதைப் போல இருந்தது. அப்படியே உட்கார்ந்து கொண்டான். யார் அந்தப் பையனாக இருக்கும் என யோசித்துப் பார்த்தான். அவனது மனது அலையாய் தவித்தது.

அப்போது ஆன்ந் என்று கூப்பிடும் சத்தம் கேட்டுத் திரும்பிக் கோபத்துடன் எழுந்தான்.

"கௌரி யார் அந்தப் பையன் உண்மையைச் சொல்லி முடிப்பதற்கு முன் அவெளின் கன்னத்தில் பளார் என்று ஒரு அறை அறைந்தான் ஆனந்.

கௌரி அப்படியே நிலத்தில் விழுந்தாள்.

"கௌரி... கௌரி..." என்னை மன்னிச்சிடு.

"நீ எனக்குக் கிடைக்காமல் போய்விடுவாயோ" என்ற பயம் தான் கௌரி என்று அழுதான்.

அப்போது சனக் கூட்டம் நிறைந்த அந்த இடத்தில் பொலிஸ் ஜீப் வந்தது. யாரோ கொடுத்த தகவலின்படி ஆனந்தை விலங்கு போட்டுகொண்டு சென்றார்கள்.

"சேர் என்னை ஏன் கொண்டு வந்தீர்கள் நான் அப்படி என்ன குற்றம் செய்தேன்" என் கௌரிக்குக் கிட்ட நான் போக வேணும் என் கௌரிகிட்ட போக-வேணும் எனத் துடியாய்த் துடித்தான்.

எப்படிக் கதறியும் பொலிஸ்காரர் விடுவதாக இல்லை ஆனந்தைச் சிறையில அடைத்தாரக்ள்.

அனந் போன வருடம் பெப்ரவரி பதின்நான்காம் திகதி நடந்த சம்பவத்தை மீட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது பொலிஸ்காரர் வந்து. "ஆனந் உன்னை ஒரு பெண் பார்க்க வேணுமெண்டு வந்திருக்குது." என்றார்.

எழும்பி வந்து சிறைக் கம்பிகளைப் பிடித்தவாறு வெளியே பார்வையைச் செலுத்தினான். அங்கே வந்திருந்தது வேறு யாரும் இல்லை. கௌரியே தான் இது கனவாக இருக்குமோ என்று நினைத்தவாறே உற்றுப் பார்த்தான்.

கௌரி "ஆனந்" என்று கூப்பிட்டவாறு வந்தாள். "ஆனந்" அன்று நடந்தது என்னவென்று சொல்வதற்கு முதல் அழுதாள்.

நான் கதைத்துக்கொண்டு போனவர் வேறுயாருமில்லை "என் அண்ணன் தான் அவர் வெளிநாட்டில இருந்து வந்தவர் அவருடன்தான் நான் கதைத்துக் கொண்டு போனேன். எனக்கும் மாப்பிள்ளை பார்த்து என்னையும் கூட்டிக் கொண்டு போவதாகச் சொன்னார்.

எனக்கு நீங்க உயிராய் இருக்கும் போது நான் எப்படிச் சம்மதிப்பேன். உஙகளை அன்றே அண்ணாவிற்கு அறிமுகம் செய்திருந்பேன். அதற்கிடையில் என்னமோ நடந்துவிட்டது.

நானும் ஒரு வருடமாக உங்களையே நினைத்து நினைத்து மனம் வருந்தினேன். என் சொத்துச் சுகம் எல்லாவற்றையும் உதறித் தள்ளிவிட்டு உங்களைப் பார்க்க ஓடிவந்தேன். உங்களுக்காக போன வருடம் வாங்கிய பரிசு கொண்டு வந்திருக்கிறேன்.

"ஆனந் என்னை மன்னிக்கமாட்டீர்களா"?

என்னை உங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்ள வந்திருக்கிறேன்.

"பிளீஸ் ஆனந்" என்றால் கண்ணீர் சிந்த அப்போது பொலிஸ்காரர் வந்து "ஆனந் உனக்கு இன்று விடுதலை நீ போகலாம் என்றார்.

அங்கே உள்ள கைதிகள் எல்லோரும் கூச்சல் இட்டு ஆனந் வாழ்க் காதல் வாழ்க கத்தினார்கள்.

பிரிந்த காதலர்கள் அதே காதல் தினத்தில் (பெப்பரவரி பதின்நான்கில்) ஒன்று சேர்ந்தனர். ■

# மனதுக்கு நிம்மதி

# மனதில் அமைதி வேண்டும்

**"மனதில் உறுதி வேண்டும்"**. என்பது எத்தனை நியாயமான தேடப்படும் வார்த்தைகளோ அத்தனை நியாயமான தேடப்படும் வார்த்தைகள் "மனதில் அமைதி வேண்டும்" என்பதும். இவ்வுலகில் அமைதியை, நிம்மதியை வெறுப்பவர் யாரேனும் உண்டா. ஒவ்வொரு மனிதனும் அமைதி தேடி, நிம்மதி தேடி அலைகிறான். எங்கே கிடைக்கும் என்று, தாகத்திற்கு தண்ணீரை தேடி அலைவது போல் தவிக்கிறான்.

ஒருவர் சொன்னார். "நான் மகிழ்ச்சியாக இருக்கவேண்டும் என்றால் - அந்த நடிகரின் நகைச்சுவை காட்சியைப் பார்ப்பேன்" என்று. ஆனால் நடிகரோ தன் மன அமைதிக்கு வேறு எதையோ நாடுகிறார். பிறருக்கு அவரால் நிம்மதி கிடைக்கிறது. ஆனால் அவருக்கு அவரால் நிம்மதியை தரமுடியவில்லை. பணம் கிடைத்தால் நிம்மதி என்று பணத்தை சம்பாதிக்க ஓடுகிறோம். வேலை கிடைத்தால் நிம்மதி என்று வேலையை தேடி ஓடுகிறோம். தேடியதெல்லாம் கிடைத்தது. ஆனால் அதன் மூலம் கிடைக்க வேண்டிய நிம்மதி நமக்கு கிடைத்திருக்க வேண்டுமே. கிடைக்கவில்லை.

இன்னொருவருக்கு கோவிலுக்கு போனால் நிம்மதி கிடைக்கிறது என்று கோவிலுக்கு போகிறார். நிம்மதி பெறுகிறார்.

இரண்டு பேர் ஒரே இடத்தில் பணிபுரிந்தார்கள். இருவரும் ஒரே வகையான பணியில் இருந்தார்கள். ஒரேயளவு ஊதியம் பெற்றார்கள். ஒரே மாதிரியான மனநிறைவை, நிம்மதியை பெற்றார்களா. இல்லையே... ஒருவன் மனநிறைவு பெற்றான். மற்றவனோ திருப்தியின்மையில். ஏன்? எல்லாமே முரண்பாடுகளால் கட்டமைக்கப்பட்டுள்ள சூழலில், கிடைக்கின்ற அமைதிக்கும், கிடைக்காத நிம்மதியும் முரண்கள் அற்று போகுமா.

நிம்மதியற்ற மனநிலையை ஒரு வியாதியாக பார்க்கிறோம். எந்த மருந்தை சாப்பிட்டால் நிம்மதி என்கிற குணமாதல் கிடைக்கும் என்று தேடுகிறோம். அமைதியின்மையை ஒரு வியாதியை போல் பார்க்க ஆரம்பித்தோமேயானால் அதற்கு மருந்தே கிடையாது. காரணம்... மருந்து என்று அறியப்படுவது நல்ல ஆலோசனையே. நபருக்கு நபர் அந்த மருந்தின் தேவையின் தன்மை மாறுபடுகிறது.

நிம்மதியை தேடி, காலங்காலமாகவே மனிதன் அலைந்து கொண்டு தான் இருக்கிறான். கற்கால மனிதனுக்கு நிம்மதியை தேட வேண்டிய அவசியம் இருந்து இருக்காது. அன்று அவனிடம் போட்டி இருந்து இருக்காது. பொறாமை இருந்து இருக்காது. என்று மனிதன் தனக்கென்று ஒரு நாகரிகத்தை உண்டு பண்ணினானோ, என்று ஆசைப்பட ஆரம்பித்தானோ, அன்று முதல் நிம்மதியை தேடுகிறான். ஆனால் இன்றுவரை அவனால் அறியப்படாதவையாகவே நிம்மதி உள்ளது. இன்னும் தேடும் பொருளாகத் தான் நிம்மதி உள்ளது.

தெரிந்தோ, தெரியாமலோ செய்கின்ற ஒவ்வொன்றின் விளைவுகளே, நம் நிம்மதியின்மைக்கும், அமைதியை தேடும் மனநிலைக்கும் காரணமாகிறது. நமது சுபாவத்திற்கும் நிம்மதியின்மைக்கும் மிக பெரிய தொடர்புள்ளது. அமைதியை தேடும் ஒவ்வொரு மனிதனையும் உற்று கவனித்தால், அவன் தன்னை பற்றி மிகப் பெரிய கற்பனையில் இருக்கின்றவனாக இருப்பான். எளிமையாக வாழுபவர்கள் அமைதி எங்கே என்று தேடமாட்டார்கள். நிம்மதி குறைவுக்கு எதெல்லாம் காரணமாக இருக்க போகிறதோ - அதை ஆரம்பத்திலிருந்தே விலக்கியவர்களாக இருப்பார்கள். உலகில் மிக பெரும்பாலானவை எல்லாமே சுலபமாக கிடைக்கவே வழி அமைக்கப்பட்டுள்ளது. நாம் தான் நம் பழக்க வழக்கங்களால் கடுமையாக்கி கொண்டுள்ளோம். அதில் அமைதியும் ஒன்று. அமைதியை தேடுபவர்கள், தங்களை முற்றிலுமாக மாற்றி கொண்டால் அமைதியைப் பெறலாம். ■



# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

## குறுக்கெழுத்துப் போட்டி - 403

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | ■ | 9 | ■ | ■ | 12 |
| 13 | ■ | ■ | 16 | 17 | 18 |
| 19 | 20 | ■ | 22 | ■ | ■ |
| 25 | ■ | 27 | 28 | 29 | 30 |
| 31 | ■ | ■ | ■ | 35 | 36 |

### இடமிருந்து வலம்

01.அண்மையில் சர்வதேச அளவில் பரபரப்பை ஏற்படுத்திய இணையத்தளம்.

16.உறவு முறைகளில் ஒன்று. (குழம்பியுள்ளது)

19.ஒரு இடத்தை அடைவதற்குப் பயன்படுபவைகளில் ஒன்று.

27.ஒருவருக்குத் தகவல் அனுப்ப இது கட்டாயம் தேவை. (குழம்பியுள்ளது)

35.திக்கு என்றும் கூறலாம். (திரும்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

01.ஒரு பொருளை விற்பனை செய்ய ஊடகங்களில் இது போடுவார்கள்.

03.இந்தப் பறவையை வைத்து சாஸ்திரம் கூறுவார்கள்.

06.மரக்கறி வகைகளில் ஒன்று.(குழம்பியுள்ளது)

16.கர்நாடக இராகங்களில் இதுவும் ஒன்று (குழம்பியுள்ளது)

29.பழிப்பு அல்லது இகழ்ச்சி என்றும் அழைக்கலாம்.

30.விரைவு அல்லது ஆற்றல் எனவும் கூறுவர்.

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி 02.02.2011 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-403
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல.: - 1772, கொழும்பு. - த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்

தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

குறுக்கெழுத்துப் போட்டி இல.401 க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

க.சிவகடாட்சம், 46/1 பசல்ஸ் லேன், வெள்ளவத்தை.

### பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.

01.கு.இராஜேஸ்வரி,52,பொக்குண வீதி,கவுடான,தெஹிவளை.
02. என்.பர்ஹானா,02 ஆம் வட்டாரம், மன்னார்.
03. க.கார்த்திகேசன், 89,ரொசிட்டா வீடமைப்புத்திட்டம்,கொட்டகலை.
04. ரி.செல்வதுரை, லோறன்ஸ் வீதி, வெள்ளவத்தை.
05. ந.மதனிகா, இராமநாதன் அவெனியு, தெஹிவளை.
06.அ.ராணி,தபால்கந்தோர் வீதி, மன்னார்.
07. இ.விக்கினேஸ்வரன், பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு.
08.பா.சங்கீதரன், 28, கொண்டலடி வீதி, நல்லூர்,
09.சு.சுதாகரன்,தொட்டிலடி மத்தி, சண்டிலிப்பாய்.
10.அ.சந்தியாகோ,அம்பிட்டியா றோட், தென்னக்கும்புர, கண்டி.

### குறுக்கெழுத்துப் போட்டி 401- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 தை | 2 ப் | 3 பொ | 4 ங் | 5 க | 6 ல் |
| 7 சீ | ■ | 9 ட் | 10 கு | 11 டி | ■ |
| ■ | 14 தி | 15 டு | 16 ச | ■ | 18 ம் |
| 19 ரு | ■ | ■ | ■ | 23 தி | 24 ச |
| 25 கு | 26 கோ | 27 ல | 28 ம் | ■ | 30 ர |
| 31 வி | 32 டை | ■ | ■ | ■ | 36 இ |

# உப்பு தயாரிப்பது எப்படி?

உப்பில்லா பண்டம் குப்பையிலே என்றொரு பழமொழி. உப்பு இல்லாத சாப்பாட்டை நாம் விரும்பி சாப்பிடுவதில்லை. உணவில் உப்பு முக்கியப்பங்கு வகிக்கிறது. இதன் வேதியியல் பெயர் சோடியம் குளோரைட் ஆகும். அதாவது உப்பு என்பது சோடியம் மற்றும் குளோரின் ஆகிய இரண்டு மூலகங்களால் ஆன ஒரு கூட்டுப்பொருள். சுத்தமான உப்பு, வெண்மை நிற படிகமாக இருக்கும். இதற்கு நீரை உறிஞ்சும் தன்மை கிடையாது. சாதாரணமாக மலிவான விலையில் கிடைக்கக்கூடிய உப்பு, அவ்வளவு சுத்தமானது கிடையாது. அதில் மக்னீசியம் குளோரைட் கலந்திருக்கும். இயற்கையாகவே சில ஏரிகளில் இருக்கும் நீரிலும், கடல் நீரிலும் உப்பு கலந்திருக்கும். கடல் தண்ணீரில் சுமார் 25 சதவீதம் உப்பு இருக்கிறது. கடற்கரை பக்கத்தில் ஆழமற்ற பாத்திகளை வெட்டி, அதில் கடல்நீரைப் பாய்ச்சுவார்கள். சூரியவெப்பத்தினால் அதில் இருக்கும் தண்ணீர் ஆவியாகி, உப்பு மட்டும் படிவமாக இருக்கும். அப்படிப் படியும் உப்பை துளையுள்ள அரிப்பான்கள் மூலம் சேகரிப்பார்கள். இப்படித் தயார் செய்யப்படும் உப்பு, சுத்தமாக இருக்காது. எனவே அதைக் குறிப்பிட்ட சில முறைகளில் சுத்தப்படுத்தி விற்பனைக்கு அனுப்புவார்கள்.





**தேவ அருள்ஞான சித்த சக்தி**
கடமையும் உண்மையும் இரு கண்களாகக் கொண்ட
என்னிடம் அபூர்வ சக்தி இருக்கின்றது என்பது யாவரும் தெரிந்த விடயமே!
**சாதிக்க முடியாததைச் சாதிக்க வாருங்கள்**

சித்தர்களின் அனுக்கிரக வாக்கின்படியே அவரவர்களின் பிரச்சினைகளுக்குத் தக்கவாறு கிரக கோட்பாட்டின்படி பரிகாரங்கள் செய்து கொடுக்கப்படுகின்றது. சித்த ஞானம்பெற்ற என்னிடம் எல்லா மதத்தினருக்கும் பொருந்தக் கூடிய அனைத்து மாந்திரீக பரிகாரங்கள் செய்து கொடுக்கப்படும். வெளிநாட்டவர்களுக்கென கடல் கடந்து செயற்படக் கூடிய வண்ணம் அதிவிசேட அச்சரக்கூடு தயாரில் உள்ளது. 46 வருட காலம் மங்கா மங்கள ஒளிவீசக் காரணம் உண்மையும், நேர்மையுமான சேவையே? இனி என்ன உங்கள் குறைகூறுங்கள்? சித்து, முத்து, வித்து, மருந்தீட்டலா?திருமணத் தங்கு தடைகளா? செம்மையாகச் செவ்வாய்த்தோசம் நிவர்த்தி செய்துகொள்ள வேண்டுமா? தாம்பத்திய வாழ்வில் சுபபோகக்குறைவா? மனக்கிலேசமா? நித்திரையின்மையா? காதலில் தோல்வியா? வாழ்வா? சாவா? என்ற நிந்திப்பா? தொழிற் தடங்கலா? செய்தொழில் பெருத்த இலாபம் அடைய வேண்டுமா? குடிபோதையில் இருந்து விடுபட வேண்டாமா? அருள்வாக்குப் பெறமாதாந்தம் நடைபெறும் பருவ அக்கினி குண்டலயமாக மாதாந்தம் நடைபெறும் பருவ அக்கினி குண்டலயமாக பூஜையில் கலந்து அருட்கடாட்சம் பெறவும். இத்துறையில் இந்தியாவிலும் இலங்கையிலும் கூட என்னை நாடிவரக் காரணம் எனது உண்மைச் சேவையும் நேர்மையுமே. கால தாமதத்தை தவிர்த்துக்கொள்ள முன்பதிவு அவசியமே.

**உங்கள் கதையைக் கூறும் உங்கள் யாதகம்:-**

காண்ட அடிப்படையில் அக்குவேறு ஆணிவேறாக 331 பக்கம் கொண்ட அவரவர் ஜனன ஜாதகத்தை வாழ்க்கைச் சித்திரமாக அறிந்து தெரிந்து செயற்பட, முன் அனுமதியுடன் என்னைச் சந்திக்கவும்.

**உலகப்புகழ் கௌரவ பேராசிரியர் தேசபந்து பீ.கே. சாமி ஜே.பீ ஐயா**
**ஸ்ரீ அருள் ஞான சக்தி இல்லம் இல: 23, மேபில்ட் ரோட், கொழும்பு-13.**
தொலைபேசி - 0112342463, 0112342464, 0112470615 தொலைநகல் -2344831
நுவரேலியாவில் மட்டுமே எமது கிளை
ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயம் இல: 33 தின சந்தை கட்டடம், நுவரெலியா
0522222506/0522223093

## பொன்மொழி

தன்னலம் சிறிதும் இல்லாமல், நிறைந்த அன்புடன் பழகுபவர்களே இப்போது உலகத்திற்குத் தேவைப்படுகிறார்கள்.



சுவாமி விவேகானந்தர்

✉ சிந்தியா!! வெள்ள அனர்த்தத்தினை அரசியலாக்க சிலர் முயற்சிப்பதாகக் குற்றம் சாட்டப்படுகிறதே...

**எஸ். கமலினி, கல்வியங்காடு.**

● "சோழியன் குடுமி சும்மா ஆடாது" என்பார்கள். அதேபோன்று அரசியல்வாதிகள், தாங்கள் மேற்கொள்ளும் ஒவ்வொரு செயற்பாடுகளையும் தமது அரசியல் எதிர்காலத்திற்கு சாதகமாக்க முயற்சிப்பர். தேர்தல் அரசியல் நடைமுறையில் உள்ள அனைத்து நாடுகளிலுமே இதே நிலையே காணப்படுகிறது. அது தவிர்க்க முடியாததும் கூட.வழங்குபவர்களின் நோக்கம் எதுவாக இருப்பினும், அவர்களின் செயற்பாடுகள் அல்லற்படும் மக்களுக்கு ஆறுதலானதாக இருப்பின் அவற்றை வரவேற்கலாம். செயற்பாடுகளில் நேர்மை இருப்பின் பாராட்டலாம்.

✉ சிந்தியா! உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ் மகட்சிகள் ஒற்றுமையாய் போட்டியிட்டால் தமிழ் மக்களுக்கான தீர்வு கிடைக்குமா?

**கு. திவாகர், மன்னார்.**

● கிடைக்கும் என்று கூட்டமைக்கும் சிலர் மக்களை ஏமாற்ற முனையலாம். ஆனால், நடைபெறப்போவது உள்ளூராட்சி சபைத்தேர்தல். இத்தேர்தலில் வெற்றிபெறுபவர்களினால் சட்டவாக்கல் சபையான பாராளுமன்றத்தின் செயற்பாடுகளில் எதையும் செய்யமுடியாது. வேண்டுமானால் சம்பிரதாயத்திற்கு எதிர்ப்பைத் தெரிவிக்கலாம். உள்ளூராட்சிச் சபைகள் முற்றுமுழுதாகப் பிரதேச அபிவிருத்திகளையே அடிப்படையாகக் கொண்டவை என்பதால், கூட்டாட்சி நடத்தி பிடுங்குப்படுவதைவிட தனித்தாயினும் இணக்கப்பாட்டுடன் மக்கள் மத்தியில் செயற்படக் கூடியவர்களைத் தெரிவதன் மூலமே நிறைந்த பலாபலன்களை அறுவடை செய்ய முடியும்.

✉ கேரதீவு, சங்குப்பிட்டிப் பாதைத் திறப்பு யாருக்கு நன்மையை ஏற்படுத்தப்போகிறது?

**க. மிகுதன், வவுனியா.**

● நீங்கள் எந்த நோக்கத்துடன் கேட்கின்றீர்கள் என்று தெரியவில்லை. பொதுவாக இப்பாதை திறப்பினால் யாழ்ப்பாணத்திற்கும் வெளிமாட்டங்களுக்கும் தனியார் வாகனங்களில் பயணம் செய்கின்ற பொதுமக்களின் நேரத்தை மிச்சப்படுத்தலாம். அரசியல் ரீதியில், தெற்கிலேயே பாரிய அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படுவதாக ஆங்காங்கே ஏற்படும் முனகல்களை அடக்குவதற்கு அரசு இதனைப் பயன்படுத்தலாம்.

இன்னொரு விடயம், பாலத்திற்குப் போட்ட 'காப்பெற்றை' வீதியின் ஏனைய பகுதிகளுக்கும் போட்டால் மக்கள் மனம் மகிழ்வர். ஏ-9 வீதியில் ஏற்படும் ஆட்டம், பாட்டம், குலுக்கம் போன்ற வேதனையான அவஸ்தைகள் இருக்காது.

✉ சிந்தியா! காதல் தெய்வீகம் என்கிறார்களே...?

**எஸ். மது, வெள்ளவத்தை.**

● அப்படியா! அதனால்தான் தினமும் தரிசனம் கேட்கிறார்கள் போலும். தற்போதைய எஸ்.எம்.எஸ் யுகத்தில் குறுந்தகவல் அனுப்பவில்லை என்றாலே வெடிக்கிறார்கள் போலும்.

**சிந்தியா பதில்கள்**

✉ சிந்தியா! பல சவால்களையும் தாண்டி காவலன் வந்துவிட்டதாமே?

**பு. பிரணகதி, கிளிநொச்சி.**

● நடித்தோமா பிழைத்தோமா என்றில்லாமல் அலகலக்கால் வைப்பதற்கு தளபதி முயற்சித்ததன் விளைவு காவலன் காத்திருக்க வேண்டியிருந்தது. ஆனால் இப்போது தேர்தல் நெருங்கி வரும் வேளையில் பல பக்கங்களாலும் அதிருப்திகளும் சூழ்ந்து வருவதால், காவலனின் வம்பையும் விலைக்கு வாங்காமல் விலகி நிற்க பொங்கல் ரேசில் காவலன் குதித்துள்ளான்.

அடுத்தவாரம் காவலன் பற்றிய சிந்தியாவின் விமர்சனத்தை எதிர்பாருங்கள்

# குதிரைக்காரன் மகன் 14

இலக்கிய நயம்

**கே.வி. குணசேகரம்**

சங்ககாலப் புலவர்களின் பாடல்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சுவையை உடையன. பொதுவாகப் புலவர்கள் காதலைப் பற்றியும்,காதலரின் பிரிவைப் பற்றியும், பெண்களின் வனப்பைப் பற்றியும், ஆடவர்களின் மனஉடல் திடத்தைப் பற்றியும், அரசர்களின் வீரதீரச் செயல்களைப் பற்றியும் புகழ்ந்து பாடியுள்ளனர். முக்கியமாகப் பெண்களையும் அரசர்களையும் புகழ்வது புலவர்களுக்குக் கைவந்த கலை. இந்த இருவகையினையும் புகழ்ந்துபாடிப் பெரும் புகழையும், பெருஞ்செல்வத்தையும் சம்பாதித்து மிகமிக வசதியாக வாழ்ந்த புலவர்கள் பலர்.

ஆனால் பெண்களையும் அரசர்களையும் பெரிதாகப் புகழாது அவர்களைக் கேலி செய்து பாடிப்புகழ் பெற்ற புலவர்களும் உண்டு. ஆனால் கடவுளைப்பற்றிக் கேலியாகப்பாடுவது போலப்பாடி உண்மையான தத்துவத்தை மக்களுக்கு உணர்த்திப் புகழ்பெற்ற புலவர்கள் ஒரு சிலர் மட்டுமே. அவர்களில் காளமேகப் புலவர் மேலானவர். அவரைப்போலப் பாடல்களைப் பாடிப் புகழ்பெற்ற புலவர்கள் இல்லையென்று கூடச் சொல்லலாம்.

காளமேகப் புலவர் வைணவர். அவர் சைவ சமயத்தை உயிராகக் கொண்ட மோகனாங்கி என்ற பெண்ணின் அழகில் மயங்கி அவளின் அடிமையானார். அவளின் தாய் அவருக்குத் தனது மகளைத் திருமணம் செய்து கொடுக்கமாட்டேன் என்று சபதமிட்டாள். புலவரால் அந்த அழகிய மோகினியைப் பிரிந்திருக்க முடியவில்லை. அவள் இரவு பகலாகப் புலவரின் மனதில் தோன்றிச் சித்திரவதை செய்தாள். அதைத் தாங்கமுடியாத புலவர் சைவ சமயத்தில் சேர்ந்து தன் காதலியைக் கரம் பிடித்தார். அதன்பின் புலவர் சிவனைத் தவிர வேறு தெய்வங்களைப் பற்றிப் பாடுவதில்லை. அத்துடன் அரசர்களைப் பற்றியும் விலைமாதர்களைப் பற்றியும் கேலியும் கிண்டல் செய்தும் பாடி வந்தார்.

மதுரையில் காளமேகம் சிதம்பரத்தில் குடிகொண்டிருக்கும் மீனாட்சி அம்மையைத் தரிசித்துக்கொண்டிருந்தார். அப்போது அங்கே வந்த துறவி விநாயகர் அடியார், புலவரே, சிவனையும், உமையையும் புகழ்ந்து பாடும் நீர் ஏன் அவர்களது புதல்வர்களைப் பற்றிப் பாடுவதில்லை எனக்காக விநாயகரைப் பற்றிப் பாடுங்கள் என்று இருந்தார்.

புலவர் சிரித்துவிட்டுச் சொன்னார், "நீர் குதிரைக்காரனின் மகனைப் பற்றியா புகழ்ந்து பாடச் சொல்லிப் பாடினார். பொதுவாகப் புலவர்கள் முன்பு சொன்னதையே திருப்பி வேறு வார்த்தைகளால் சொல்வார்கள். சொற்களால் விளையாடுவது புலவர்களின் பொழுதுபோக்கு. ஆனால் காளமேகம் அடுத்தவர்கள் பாடாத, பாடத் துணியாத விடயங்களை மிகவும் இலகுவாகப் பாடுவார். அதில் கருத்துக்கள் மிகுந்திருக்கும். புலவர்கள் அவற்றைப் புரியாது தடுமாறுவார்கள் அரசனுக்கும் மக்களுக்கும் அது மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கும். அரச அவையிலே எல்லாப் புலவர்களும் எதையெதைப்பாட வேண்டும் என்று தீர்மானித்துத் திட்டமிட்டுத்தான் வருவார்கள். ஆனால் காளமேகம் எந்தச் சிந்தனையும் இல்லாமல் சபைக்கு வருவார். கடைமொழிமாற்று என்பது செய்யுள் அணிகளுள் ஒன்று. செய்யுளின் கடைச் சொல்லை முன்னே வைத்துப்பொருள் சொல்லல் வேண்டும். இது மிக மிகக் கடுமையான பணி. ஆனால் காளமேகத்திற்கு இது கைவந்த பணி. ஒரு முறையின் சபையில்,மாடு தின்பான் பார்ப்பான், "மறை போதுவான் குயவன்" என்று பாடினார். அரசனும் மக்களும் திகைத்துத்திகிலடைந்தனர். எனினும் காளமேகத்தை எதிர்த்து ஒருசொல் கூடப்பேசமுடியாது. பேசினால் அவர்திட்டும்திட்டு வரலாறாகிவிடும் அதனால் எல்லோரும் பேசாதிருந்தனர். புலவர் தான் பாடிய பாடலின் இறுதிவரியான, பரும்புடைவை தப்பு மறை, என்றவரியின் இறுதிச்சொல்லான 'மறை' என்பதை முன்னே வதைத்து 'மறை மாடுதின்பான் பார்ப்பான்' எனக் கருத்துக் கூறினார்.'

அதனால் குதிரைக்காரன் மகன் என்ற பதம் விளங்காது சபையினர் திகைத்தனர். எனினும் போசாது காத்திருந்தால். தான் புலவரின் கவியை உணரலாம். எனப் பேசாதிருந்தனர். அப்பாடல் இது, நல்லதொரு புதுமை நாட்டிற் கண்டேன் சொல்லவா சொல்லவா சொல்லவா - தொல்லை மதுரை விக்கினேசுவரனை மாதுமையாள் பெற்றாள் குதிரை விற்க வந்தவனைக் காட்டி'

நல்லதொரு புதுமையை நான் கண்டேன் தனை அதைவிட மிகவும் விந்தையான விஷயம் அது அதைச் சொல்லவா... செல்லவா... செல்லவா.. பழைமையான மதுரை நகரின்கண் வீற்றிருக்கும் விக்கினேஸ்வரனை, உமையம்மையானவள் குதிரைக்காரன் மீது காதலுற்றுப் பெற்றெடுத்தாள். இது விந்தையானது'

மாணிக்கவாசகருக்காகச் சிவபெருமான் குதிரைகளை ஓட்டிக்கொண்டு மதுரைக்கு வந்த அந்தப் பெரும் நிகழ்ச்சியை ஞாபகப்படுத்தியும், அதன் பெருமையை விளக்கவும் காளமேகம் அந்தச் சம்ப வத்தை ஓர் அடியில் எடுத்தாண்டவிதம் இலக்கிய உலகிற்குப் புதுமையானது. நல்ல கருத்துக்களைக் கதையாகக் குவதும் கவிதையாக்குவதும் அன்றிலிருந்து இன்றுவரை நடைபெற்று வந்தபோதிலும் பழைய கருத்துக்களைப் புதிய வடிவத்தில் கூறுவோர் மிகக்குறைவு. இந்த வகையில் காளமேகம் பழைய புராண நிகழ்வொன்றைப் பலரும் இரசிக்கும் படியும், அதன் உள்ளத்தைப்புரிந்து கொள்ளும் படியும் கூறியது போலக் கூறுவதற்கு இன்றுவரையாரும் இல்லையென்றே கூறலாம்.




✉ சிந்தியா! காதலன் காட்டும் அன்பிற்கும், தாய் காட்டும் அன்பிற்கும் என்ன வித்தியாசம்?

**க. புவன், திருகோணமலை.**

● காதலி காட்டும் அன்பு கண்ணசைவில் ஆரம்பிப்பது. எந்நேரமும் கைநழுவிச் செல்லக் கூடியது. தாயின் அன்பு கருவறையில் ஆரம்பிப்பது. ஆயுளுக்கும் அரவணைப்பது.

இன்னொன்றையும் சொல்லலாம். காதலியின் அன்பில் காமம் கொஞ்சம் கலப்படம் செய்யப்பட்டிருக்கும்.தாயின் அன்பில் அது தூய்மையானதாகவே இருக்கும்.




**புலிகளை ஆதரித்துப் பேசுவது எங்கள் உரிமை. அதை யாரும் தடுக்க முடியாது.** - *வை.கோபாலசாமி தெரிவிப்பு.*

“முள்ளிவாய்க்காலோடை போரும் போச்சுது. புலியளின்ர போராட்டமும் போச்சுது. பொத்திக் காத்த மானமும் போச்சுதெண்ட நிலையில இஞ்ச சனம் இருக்கேக்க, இனி எங்க புலியள் இருக்கெண்டு உவர் ஆதரிச்சுப் பேச வெளிக்கிட்டிட்டார்? உவர் புலியளைத்தான் ஆதரிக்கிறாரேயொழிய, போருக்குள்ள அம்பிட்ட சனத்தைப் பற்றி நினைக்கிறாரில்லை. சனத்தை விட தன்ர சந்தர்ப்பவாத அரசியலுக்குப் புலியளும்; புலியளின்ர போராட்டமும்தான் தேவைப்படுகுது. மெய்யே! சாமியார் தெரியாமல்தான் கேக்கிறன், கோவிச்சப்போடாதேங்கோ. புலியளை ஆதரிச்சுப் பேசுறது உங்கட உரிமையெண்டா வன்னிச்சண்டேக்கை புலியள் வீடு வீடா இரவில நித்திரையில கிடந்ததுகளை கொற இழுவை யாய் இழுத்துக்கொண்டுபோய் சண்டை புடிக்க விட்டதுக்கும், சனங்கள் சாப்பாட்டுக்கு வழியில்லாம ஆமியிட்ட போக வெளிக்கிட, போகவிடாமல் சுட்டுச்சாக்காட்டினதுக்கும் உரிமை கோருவியளே? எங்கை ஒருங்கா ஓமெண்டு சொல்லுங்கோவன் பார்ப்பம்... ஹி...ஹி...ஹி...ஹி....”

**மரக்கறி விற்பனையில் ஈடுபடுத்தியதன் மூலம் இராணுவத்தை அரசாங்கம் பரிகசிப்புக்குள்ளாக்கியுள்ளது.**
*-ஜே.வி.பி செயலாளர் ரில்வின் சில்வா.*

“உப்புச்சப்பில்லாத அரசியல் நடத்துறதுகள் உப்புடிக் கதைச்சு ஆமிக்காரரை உசுப்பேத்திப் பாக்கினம் பாருங்கோ. ஆமிக்காரருக்காகக் கதைக்கிறதாக் காட்டிக்கொண்டு, ஆட்சியில இருக்கிறவையளையும் ஆமிக்காரரையும் கொளுவிவிட்டு, நடுவில குளிர் காயலாமெண்டு நினைக்கினம் போலக்கிடக்குது”

**அகதிகளா இனியும் இருக்கக் கூடாது; யாழ். வந்த முஸ்லிம் மக்கள் தெரிவிப்பு?.** - *பத்திரிகைச் செய்தி.*

“பாம்பின்ர காலைப் பாம்புதான் அறியும் எண்டு பழமொழி சொல்லுறமாதிரி அகதியா அல்லற்பட்டு அந்தரிச்சு வெளிக்கிட்டதுகளுக்குத்தான் அதின்ர தாற்பரியம் புரியும். உடுத்த உடுப்போடை ஒரு நாள் இரவில ஓட்டுமொத்தமா வெளிக்கிடுகிறதெண்டதை நினைச்சுப் பார்க்க ஏலுமே. அகதி வாழ்க்கை எப்படிப்பட்டதெண்டதை உந்த வன்னிச் சனத்தைக் கேட்டால் தெரியும். சொந்த ஊரையும் பிறந்த வீட்டையும் விட்டிட்டு, பிறத்தியார் வீட்டுக்கோடிக்கை இருக்கிறதைப் போல வேதனையும் விரக்தியும் வேறை ஒண்டுமில்லைக் கண்டியளே.”

**சிங்களச் சமூகம் கோபித்துக்கொள்ளும் வகையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் நடந்துகொள்ளக் கூடாது-**
*-மின்சக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க.*

“உப்புடித்தான் கொஞ்ச நாளைக்கு முன்னர் ஒருவர் “பெரும்பான்மைச் சமூகத்தைப் புண்படுத்தாத வகையில்...” எண்டு கதைச்சவர். இப்ப இவர் வேற தொடங்கியிட்டார். உவை சிங்களத்தார் தாங்கள் ஆளும் இனம்; தங்களிட்டை எல்லாம் கிடக்கெண்டாப்போல, நாங்கள் என்ன அடங்கிப்போக வேணுமெண்டு நினைக்கினமே? சிங்களச் சனம் கோபிக்காதபடிக்கும் அவேன்ர மனம் புண்டாதபடிக்கும் நாங்கள் நடக்கவேணுமெண்டால் அவையளும் அதுக்கேற்றமாதிரியல்லோ தங்கட அரசியல நடத்திக்காட்ட வேணும். உதுகளைக் குறைசொல்லி என்ன பயன் எங்களுக்கு? சூடு சொரணையில்லாமல் சோத்துக்கும், உடுதுணிக்கும் அரசியல் நடத்த வெளிக்கிட்ட சில கூத்தாடிகளாலதான் நேத்து முளைச்சதுகள் எல்லாம் எங்களை இருத்தி எழுப்ப வெளிக்கிடுதுகள் பாத்தியளே?”

**பொன்சேகாவை விடுதலை செய்தால் இயற்கை அனர்த்தம் தணிந்துவிடும்.** *-ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர.*

“அடிசக்கை! நல்ல கண்டுபிடிப்பு உது. ஆதிகால சாஸ்திரப் பரம்பரையில வந்த சாஸ்திரிமாருக்குத் தெரியாத சூட்சுமமொன்றைச் சொல்லுகிறார். நல்லாக் கேளுங்கோ. ஆராவது இளிச்சவாயன் கூட்டமிருந்தால் சொன்னவருக்குப் பக்கத்தில போய் நிண்டுகொண்டு “ஆமா...” போட்டுக் கும்புடுங்கோ. நாட்டில இருக்கிற பொதுச்சனங்களை என்ன விசரர் பைத்தியக்காரர் எண்டு நினைச்சிட்டினமே? பொன்சேகாவை விடுதலை செய்தால்தான் இயற்கை அனர்த்தம் தணியுமெண்டால், இப்ப எத்தனை வருசமா எதுவித ஆதாரங்களில்லாமல் கைது செய்து வெலிக்கடை, பூசாவில தடுத்து வைச்சிருக்கிற எங்கட தமிழ்ப்பொடியள், பொட்டைக் குஞ்சுகளை விடுதலை செய்தால்... இந்த நாட்டில ஒரு அனர்த்தங்களும் நடக்காது தெரியுமே! நாடு நல்லபடியா உருப்பட விரும்பினா முதல்ல அதைச் செய்யுங்கோவன். செய்வியளே?”

**எனக்குப் பின்னர் சர்வாதிகாரம் வருமெனத் தெரிந்திருந்தால் நாட்டின் நன்மைக்காக நான் சர்வாதிகாரியாக மாறியிருப்பன்.**
*-முன்னாள் சனாதிபதி சந்திரிகா பேட்டி.*

“நாச்சியார்! உப்புடிப் பேசுறது உனக்கு நல்லதல்லக் கண்டியே. ஏற்கெனவே ‘சமாதானதேவதை’ வேசம் போட்டுக்கொண்டு தமிழ்ச்சனத்தைச் சாகடிச்ச சங்கதியெல்லாம் மறைஞ்சு போச்சுதே. புருசன் இல்லாத விதவை நான். போரில புருசனை இழந்த பொம்புளையளின்ர மனநிலை எனக்குப் புரியுமெண்டெல்லோ கதைவிட்டு அரியாசனக் கதிரையை அவுக்கெனப் புடிச்சனி. ஏன் ஆட்சியில இருக்கேக்கை பண்ணின அடாவடித்தனங்கள் காணாதெண்டே இப்ப நீ கழிவிரக்கப்படுகிறாய்? வாயால வாசிக்கிறதை கொஞ்சம் யோசிச்சு அடக்கிவாசி. இல்லையெண்டா எங்க ஊர்க்கவிராயர்கள் “சிலுப்பாக் குடுமியும் சிங்களத்து நாயகியும்” எண்ட தலைப்பில பக்கம் பக்கமாகக் கவிதை யள் எழுதி காலம் பூராவும் நாறவைச்சிடுவினம். கவனம் நாச்சியார்!”.

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

**மரணம்...**

அந்த நிகழ்வில் ஆயிரக்கணக்கான மக்கள் தமிழ், முஸ்லிம் சிங்களம் என்ற பேதம் இல்லாமல் கலந்துகொண்டனர். கண்டி நரசபை நல்லபக்கத்துக்கான சகல ஏற்பாடுகளையும் செய்திருந்தது.

சிறிது தூரம்வரை ஏந்திச் செல்லப்பட்ட சடலங்கள் பின்னர் கார்களில் மயானத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. அங்கு விஷேடமாக அமைக்கப்பட்ட கொட்டகையில் வைக்கப்பட்ட சடலங்களுக்கு குடும்ப உறவினர்கள், தமிழ் முறைப்படியான தமது சடங்குகளைச் செய்தனர். அதைத் தொடர்ந்து ஏழு கிடங்குகளில் சடலங்கள் நல்லடக்கம் செய்யப்பட்டது.

மயானத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மூவின மக்களும் கூடி நின்றனர். மயானத்துக்குள், பெண்கள், சிறுவர்கள், குழந்தைகள் போவது பெரும்பாலும் தவிர்க்கப்படுவது வழமை என்ற போதும், அன்றைய நிகழ்வில் அவை எதுவும் அங்கு கடைப்பிடிக்கப்படவில்லை.

அதேவேளை குடும்ப உறவினர்கள் இறுதிச்சடங்குகளை செய்தார்களே தவிர மற்றைய அனைத்துக் காரியங்களையும் ஊர் மக்கள் திரண்டு வந்து பொறுப்பெடுத்துச்செய்தனர்.

யாருக்கு யார் ஆறுதல் சொல்வதென்று தெரியாமல் மரணம் எல்லோரையும் ஆட்சி செய்தது. சிங்கள முஸ்லிம் மக்கள் அங்கு நடந்த தமிழர் கிரியைகள், சடங்குகளைக் கண்டு வியந்தனர். அன்றுதான் அவர்களுக்கு இவற்றைக் கண்டுகொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது...

இறந்தவர்கள் ஒரே குடும்பத்தவர்கள், அம்மா, அக்கா, தங்கைகள், மைத்துனர், மகள், மகன் என்று ஒரே இரத்த உறவுகள் என்பதால், 'வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்கள் தவிர ஏனையவர்கள் அனைவரும் மயானத்திற்கு வந்திருந்தனர்.

ஐந்து வீடுகளில் 23 பேர் வாழ்ந்து வந்துள்ளனர். இவர்களில் ஏழு பேர் இறந்துவிட்டதால், 16 பேர் எஞ்சியிருக்கின்றனர். இவர்கள் தாம் வாழ்ந்த வீட்டின் பகுதிக்கு செல்லவே விரும்பவில்லை. அது மரணக் கிடங்கு. மீண்டும் அங்கு சென்று வாழ முடியாது. வேறு எங்காவது எங்களுக்கு வாழ ஏற்பாடு செய்யுங்கள் என்கின்றனர். அவர்களுக்கான மாற்று ஏற்பாடு செய்யப்படும் வரை பெரதேனியா நூலகத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இலட்சக்கணக்கான மக்கள், நமது நாட்டில் யுத்தம் காரணமாக இறந்தார்கள், ஆயிரக்கணக்கானவர்கள் சுனாமியால் இறந்தார்கள், இப்படி மரணங்களைக் கண்டு பழகிப்போயிருந்தாலும், நம்மத்தியில் நிகழும் ஒவ்வொரு மனிதனின் மரணமும் துயரமான தாகவே இருக்கின்றது. ஒருவரின் மரணம் அவர் எந்த இனத்தைச் சேர்ந்தவர் என்று கவலைப்படக் கூடியதல்ல. எந்தச் சாதியைச் சேர்ந்தவர் என்பதற்காக பிறரால் நிராகரிக்கக் கூடியதுமல்ல.

இன,மத, பேதங்களால், பிரித்து வைக்கப்பட்ட மக்களை மீண்டும் இணைக்க வேண்டுமாக இருந்தால் அது அறிக்கைகளாலும், சட்டங்களாலும் முடியாது. மனித நேசிப்புக்களாலும் புனிதமான உணர்வு வெளிப்பாடுகளாலுமே முடியும் என்பதையே கண்டியில் நடந்த மரணங்கள் புலப்படுத்தின. விகாராதிபதியின் துணிச்சலும் மனிதநேயம் மிகுந்த பங்களிப்பும் ஊர்மக்களின் உதவியும், பங்களிப்பும் இந்தச் செய்தியையே உணர்த்தியது.

இனம், சாதி,மதம், உள்ளான்,இல்லான், என எல்லா வேறுபாட்டு விசங்களையும் கடந்து மனிதம் நேசிக்கப்படுமாக இருந்தால் இந்தப் பிறவியின் பயனை நம்மால் அடைய முடியும். முயற்சிப்போம்.

(18 ஆம் பக்கத் தொடர்ச்சி)

**நமக்கு வேண்டியது...**

அதே கடல்பிரதேசத்தில்தான் தமிழகத்திலிருந்து இவர்கள் இழுவைப்படகுகளுடன் வந்து மீன்பிடித்துச் செல்கிறார்கள். இவர்களைத்தான் இலங்கை இராணுவத்தினர் தாக்கி விரட்டுகிறார்கள். உண்மையை மறைத்து இதையும் ஈழத்தமிழர் ஆதரவுப் பிரசாரமாக அங்குள்ள தமிழ்த் தேசியர்கள் கதைவிட்டுக் கொண்டிருப்பதுதான் கொடுமை.

எழுவைதீவு மீனவர்கள் கடந்த 12ஆம் திகதி தொழிலைப் பகிஷ்கரித்து போராட்டத்தில் ஈடுபட்டார்கள். முன்பு அவ்வப்போது அத்துமீறி வந்து மீன்பிடித்துச் சென்றுகொண்டிருந்த தமிழக மீனவர்கள் இப்போது வாரத்தில் ஏழு நாட்களும் இழுவைப்படகுகளில் வந்து தீவுப்பகுதிக் கடலில் மீன்பிடித்துச் செல்வதாகவும், இதனால் தங்கள் தொழிலைப் பாதித்து வயிற்றிலடிப்பதாகவும், இலங்கை அரசு இதைக் கண்டித்து நிறுத்த வேண்டும் என்றும் தெரிவித்தே எழுவைதீவு மீனவர்கள் போராட்டத்தை அறிவித்திருந்தார்கள்.

நிலைமை இப்படியிருக்க, தமிழக தமிழ்த் தேசிய வீரர்களின் நாடகமோ என்னவாக இருக்கிறது? வடபகுதி மக்களின் உண்மையான கவலையை காதில் வாங்கிக் கொள்ளாமலே, ஒட்டுமொத்த தமிழினத்துக்கெதிரான இராஜபக்ஷவின் ராட்சச அரசு, இராணுவ வெறியாட்டம் என்று ஏமாற்றிக் கதையடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஏதோ தமிழக மீனவர்கள் இழுவைப்படகுகளில் யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு உதவ வந்தது போலவும், இராணுவத்தினர் அவர்களை உதவவிடாமல் அடித்து விரட்டியது போலவும் ‘நாம் தமிழர்’ பீலா விட்டுக் கொண்டிருக்கிறார்கள். வேறொன்றுமில்லை, இன்னொரு இனத்துக்கெதிரான பகையுணர்வுகளைப் பெரிதாக்கி வைத்துக் கொள்வதே அவர்களது இன அரசியல் உள்ளாசைகளுக்குத் தேவையான தோதாக இருக்கிறது.

நம் வாழ்க்கை என்னவாக இருக்கிறது? பல இன மக்களாக, உலகப்பந்தில் ஒரு புள்ளி அளவு இடத்தில் இருக்கும் நாம் என்ன மாதிரியான ஒரு வாழ்க்கையை வாழ்கிறோம்? இந்த வாழ்வை ஒன்றுசேர்ந்து மேலானதாக ஆக்கிக்கொள்ளும் விதத்தில் ஏதாவது திட்டமிடுகிறோமா? வாழ்வைச் சிக்கலாக்கி விடாத பொறுப்புணர்வுடன் பேசுகிறோமா? நடக்கிறோமா? எல்லோருமாகவே இந்தத் தீவில் வாழவேண்டும் என்பதை உணர்கிறோமா? அதற்கே தீர்வு என்று யோசிக்கிறோமா? நமக்கே பிரச்சினை, நமக்கே தீர்வு, மற்றவர்கள் பிரச்சினை நமக்குத் தேவையில்லை, தெரியவும் வேண்டாம் என்ற மனநிலையோடு அல்லது கொள்கைப் பிடிவாதங்களோடு நம் சிக்கல்களை விடுவித்துவிட முடியுமா?

எந்த யோசனையுமின்றி சிங்கள அரசுக்குத் தமிழனின் ஒற்றுமைப் பலத்தை வாக்குகளில் காட்டி விடுவ தொன்றே போதும், என்று சில நாட்களுக்குப் பரபரத்துப் பின் பழையபடியாகி விடும் பனிக்காலத்துத் தடுமன் காய்ச்சல் போலவே தேர்தல்கள் நமக்கு வந்து போகின்றன. தேர்தல் ஒற்றுமையல்ல நமக்கு வேண்டியது. தீர்வுக்கான ஒற்றுமை. இதற்கு, நம்மிடையே உள்ள கருத்துபேதங்களையும், குறைகள் பற்றிய குற்றச்சாட்டுகளையும் கூறிக் கொண்டிருப்பதை விடுத்து, தீர்வுக்காக நாம் ஒன்றுபடக்கூடிய புள்ளிகள் குறித்துப் பேசுவதே தேவையானது.

வெவ்வேறு கட்சிகளின் தோற்றமே ஒரு கட்சியின் போக்கிலிருந்து மற்றவர்கள் மாறுபடும் விஷயங்களைக் கொண்டு உருவானவைதான். எனவே, சாதாரண மக்களின் வாழ்வு குறித்த அக்கறையைக் கொண்டிருப்பவர்கள், அதிகாரப் பகிர்வுக்காக நம்மிடமுள்ள குறைந்தபட்ச ஒற்றுமைப்புள்ளிகளை இனங்கண்டு கொள்வதையே பிரதானப்படுத்துவர். நமக்குள் அதாவது சிறுபான்மையினக் கட்சிகளிடையே இருக்கும் பேதங்கள், குறைகூறல்கள் எல்லாம், இந்நாட்டில் அதிகாரப்பகிர்வு நடைபெற்று அதன்பிறகு வரும் தேர்தல்களின்போது பேசப்பட வேண்டியவை.

அதிகாரப்பகிர்வு நடைபெற்றுத் தீர்வு கிடைத்த பின்பே தமிழ்க்கட்சிகள் தங்களுக்குள்ளே இருக்கும் முரண்பாடுகளைப் பிரதானப்படுத்த முடியும். தீர்வு கிடைத்த பிறகான தேர்தல்களிலேயே நமக்குள் சொல்லெறிதல்களையும் குற்றச்சாட்டுகள் வீசுதலையும் வைத்துக்கொள்ள வேண்டும். இந்த இக்கட்டான, சமூகம் பாடழிந்துள்ள நிலையிலிருக்கும் காலகட்டத்தில், இதிலிருந்து மீள்வதற்கான தீர்வுக்கான இணக்கப்புள்ளிகளையே நம்மிடையே நாம் காண முனைய வேண்டும். அல்லாதவர்கள், மேலும் மேலும் வீழ்ச்சிக்குத் துணைபோகும் சமூக அழிப்பு அரசியலின் கருவிகளாகத்தான் இருப்பர்.

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி) **கிழக்கின் அழிவும்...**

இதனை கூட்டமைப்பின் தலைமை சாதகமாக பார்க்கின்ற போதும் கூட்டமைப்பின் கடைநிலை நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவர்களை வருகை தமிழ் தேசியக் கூட்டமைப்பு உடைத்துவிடுமோ என்ற சந்தேகத்தை எழுப்பியுள்ளனர். இந்தநிலையில் அரசியலுக்கு அப்பால் கேரதீவு சங்குப்பிட்டி பாலத்தின் ஊடான வீதிப்போக்குவரத்து முதல் முறையாக கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று ஜனாதிபதியினால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இதே வேளை 18 வருடங்களுக்கு பின்னர் இந்த மார்க்கத்தின் மூலமான மக்கள் போக்குவரத்து இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. 18 வருடங்களுக்கு முன்னர் இந்த மார்க்கத்தில் படகுபாதைப் போக்குவரத்து இடம்பெற்று வந்தது. போர் காரணமாக அந்த போக்குவரத்தும் முழுமையாக தடைப்பட்டது. இந்த நிலையில் புதியபாலத்தின் ஊடான வீதிப்போக்குவரத்து நிச்சயமாக மக்களுக்கு ஒரு வரப்பிரசாதம் என்றே கூறவேண்டும். எனவே அபிவிருத்திகளை போலவே சமாதானத்துக்கான அடிப்படைகளும் ஆரம்பிக்கப்படவேண்டும் என்பதே பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் ஆதங்கமாகும்.

# இந்தவாரம் உங்கள் பலன்

(20.01.2011 தொடக்கம் 26.01.2011 வரை

ஆதினி

**மேடம்:** தொழில் நிலையில் மேன்மையான நிகழ்வுகள் ஏற்பட்டு மகிழ்ச்சியை அதிகரிக்கப் பண்ணும். துணிவுடன் மேற்கொள்ளும் முயற்சிகள் யாவும் வெற்றியைத் தரும். பணம் தாராளமாகப் புழங்கும். உறவினர்களும் நண்பர்களும் தாராளமாக உதவி செய்வர். பெரியவர்களும் மேலதிகாரிகளும் உங்கள் செயல்களைப் பாராட்டுவார்கள். அதனால் துணிச்சலு டன் காரியமாற்றுவீர்கள். எதிர்பாராத வகையில் நற்செய்தி ஒன்று வந்துசேரும். தடைப்பட்டிருந்த ஒரு காரியம் வார இறுதியில் நிறைவேறும். மாணவர்கள் பாராட்டுப் பெறுவர். அரசியலில் உள்ளோர் துணிச்சலுடன் காரியமாற்றுவர். விவசாயிகளும் வியாபாரிகளும் பெரும் இலாபம் பெறுவர்.
அதிர்ஷ்ட நாள் ஞாயிறு.

**இடபம்:** தொழிலில் இடைக்கிடை சிக்கல் தோன்றி மனதை வருத்தும். எதிர்பார்த்த பணம் உதவிகள் தாமத மாகியே வந்துசேரும். இருப்பினும் மனங்கலங்காமல் தெளிவுடன் நடந்து இலாப மடைவீர்கள். போட்டிகளில் தோல்வி உண்டாகலாம். எதிர்பார்த்த காரியங்கள் பெரும் முயற்சியின் பின் நிறைவேறும். மேலதிகாரிகள் முரண்படுவார்கள். புகழுக்காகச் சில காரியங்கள் செய்து மகிழ்வீர்கள். மாணவரின் கல்வியில் சில தடைகள் ஏற்படலாம். அரசியல்வாதிகள் எதிர்பார்ப்பவை தாமதமாகவே நடக்கும். விவசாயிகளினதும் வியாபாரிகளினதும் முயற்சிக்கேற்ப இலாபம் கிடைப்பது கஷ்டம்.
அதிர்ஷ்ட நாள் வெள்ளி.

**மிதுனம்:** இனிய வார்த்தைகளால் காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள். தொழில் செய்யுமிடத்தில் முரண்பாடுகள் உண்டான போதும் சாதுரியத்தால் சமாளித்துக் கொள்வீர்கள். மனதில் சில சம்பவங்களைப் பற்றிய கவலை அடிக்கடி தோன்றிக் குழப்பத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கும். எதிர்பார்த்த பணம் எதிர்பார்த்தபடி கிடைக்கும். குடும்பத்தில் சில சச்சரவுகள் தோன்றுவதால் மனநிலை பாதிக்கப்படும். வார இறுதியில் முன்பிருந்த கவலைகள் யாவும் தீர்ந்து மன அமைதி உண்டாகும். மாணவர்கள் கல்வியில் அக்கறை கொள்ள வெண்டும். அரசியலில் உள்ளோர் காரணமின்றிப் பயப்படுவர். விவசாயிகளும் வியாபாரிகளும் முதலீட்டுக்கேற்ற இலாபம் பெறமாட்டார்கள்.
அதிர்ஷ்ட நாள் வியாழன்

**கடகம்:** தொழிலில் இருந்து வந்த குழப்பங்கள் நீங்கி நட்புடன் நிறைவைக் கொடுக்கும். மேலதிகாரிகள் நட்புடன் நடந்து கொள்வார்கள். போட்டிப் பரீட்சைகளில் சித்தியடைவீர்கள். இனசனபந்துகள் தாராள உதவி செய்வார்கள். மறைமுகமாக இருந்து வந்த பகை நீங்கும். புதிய முதலீடுகளைச் செய்யலாம். சமூகத்தால் மதிக்கப்படுவீர்கள். உடல் நலம் விருத்தியடையும். வெளியூரில் இருந்து எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் அக்கறை கொள்வர். அரசியலில் உள்ளோர் நினைத்ததைச் சாதிப்பர். விவசாயிகளும், வியாபாரிகளும் இலாபம் அடைவார்கள். அதிர்ஷ்ட நாள்: ஞாயிறு.

**சிங்கம்:** தொழில் நிலையத்தில் அமைதியைப் பேணி வெற்றியடைவீர்கள். எதிர்பார்த்த காரியங்களில் வெற்றியும் இலாபமும் உண்டாகும். குடும்பத்தினர் சகல வழிகளிலும் ஒத்துழைப்பார்கள். அதனால் மகிழ்ச்சியும், அமைதியும் உண்டாகும். இனசனபந்துகள் நண்பர்கள் உங்களுக்கு உதவ முன்வருவார்கள். உடல் நலம் ஆரோக்கியமாக இருக்கும். தாய் வழியால் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். போட்டிகளிலும், வழக்குகளிலும் வெற்றியடைவீர்கள். மாணவர்கள் உற்சாகமாகக் கல்வியில் ஈடுபட்டு வெற்றியடைவர். அரசியலில் உள்ளோரின் எண்ணங்கள் நிறைவேறும். விவசாயிகளும், வியாபாரிகளும் இலாபம் அடைவர். அதிர்ஷ்ட நாள்: வியாழன்

**கன்னி:** தொழிலில் வந்த சிக்கல்கள் மறைந்து உற்சாகம் பிறக்கும். எதிர்பார்த்த காரியங்கள் எதிர்பார்த்தவாறு நிறைவேறி மகிழ்ச்சியைத் தரும் குடும்பத்தவர்களுடன் சேர்ந்து நற்காரியம் செய்து மகிழ்வீர்கள். குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறும்.
கடன் கொடுத்த பணம் வந்து சேரும். நல்ல உணவு வகைகளை உண்டு மகிழ்வீர்கள். ஆலய தரிசனமும் புண்ணிய காரியங்களில் விருப்பு உண்டாகும். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டி முன்னேற்றம் காண்பர். அரசியலில் உள்ளோர் விரும்பியபடி காரியமாற்றுவர். விவசாயிகளும், வியாபாரிகளுக்கும் மேன்மையான வாரம். புதிய முதலீடுகளில் முதலீடு செய்யலாம் அதிர்ஷ்ட நாள்: சனி.

**துலாம்:** தொழில் செய்யுமிடத்தில் சிறு சிறு சச்சரவுகள் தோன்றுவதால் மனம் குழம்புவீர்கள். எதிரிகள் உங்களின் பலவீனத்தைப் பயன்படுத்தித் தொல்லைகள் தந்து கொண்டிருப்பார்கள். காரணமின்றி இறுதி வரை பயந்து கொண்டிருந்தாலும் இறுதியில் வெற்றி உங்களுக்கே கிடைக்கும். எதிர்பார்த்த விடயங்கள் இழுபறிபட்டுப் வாரஇறுதியில் நிறைவேறும். நினைத்த காரியம் ஒன்றும் வாரப்பிற்பகுதியில் நிறைவேறி மகிழ்ச்சியைக் கொடுக்கும். எதிர்பாலாருடன் குழப்பமடைவீர்கள். அரசியலில் உள்ளோர் முரண்படுவர். விவசாயிகளும், வியாபாரிகளும் எதிர்பார்த்த இலாபத் தை அடையாவிட்டாலும் நட்டப்பட மாட்டார்கள். அதிர்ஷ்டநாள்: புதன்.

**விருச்சிகம்:** தொழிலில் மறதியும், அரட்டையும் கொள்வதால் தொழிலில் பல சிக்கல்கள் தோன்றி மனதைக் குழப்பும். வார மத்தியில் இந்நிலை மாறி மகிழ்ச்சியைக் கொடுக்கும். ஆனால் எதிலும் கவனம் தேவை. நம்பியவர்கள் ஏமாறுவதால் சிக்கலும் தகராறும் உண்டாகும். யாரையும் நம்பி முக்கிய விடயங்களைச் செய்யவோ ஒப்படைக்கவோ கூடாது. மனைவி வழியால் சிலசில முரண்பாடுகள் தோன்றும். இருப்பினும் மனைவியின் உதவி நிறைய உண்டு. வார இறுதியில் பணமும் பாராட்டும் வந்துசேரும். மாணவர்கள் குழப்பமடைவர். அரசியலில் உள்ளோர் ஏமாற்றமடைவர். விவசாயிகளும், வியாபாரிகளும் முன் முதலீட்டால் இலாபம் பெறுவர். அதிர்ஷ்ட நாள்: வியாழன்.

**தனுசு:** தொழிலில் சோர்வு காணப்படும். அதை ஆர்வத்துடன் முறியடிக்க முனைந்து வெற்றி காண்பீர்கள். சோம்பலால் காரியக்கேடுகள் வாரம் முழுவதும் உண்டாகும். அவதானம் தேவை. ஆலய வழிபாட்டிற்கு முக்கியத்துவம் கொடுப்பீர்கள். பூசைகள், அன்னதானம், தானதர்மங்களில் விருப்பு அதிகரிக்கும். குடும்ப உறுப்பினர்கள் நல்ல முறையில் ஒத்துழைப்புத் தருவார்கள். தாய் வழியால் உதவிகள் உண்டாகும். மாணவர்கள் மறதியாலும், சோம்பலாலும் இழப்புக்கள் உண்டு. அரசியலில் உள்ளவர்கள் பெரும் மாற்றத்தை எதிர்பார்க்க முடியாது. விவசாயிகளும், வியாபாரிகளும் நன்மையடைவர். அதிர்ஷ்ட நாள்: ஞாயிறு.

**மகரம்:** வரவுக்கு மீறிய செலவு உண்டாகும் வாரம். தொழிலில் சலனமாக இருத்தல் வேண்டும். இல்லாவிட்டால் சிக்கல்கள் பல உருவாகும். மேலதிகாரிகள் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பர். வார நடுப்பகுதியில் இந்நிலை மாறி நினைத்தவை நினைத்தவாறு நடைபெறும். பணம் வந்து சேரும். குடும்பத்தில் இருந்து வந்த முரண்பாடுகள் தீர்ந்து மனமகிழ்ச்சியைக் கொடுக்கும். உடல்நலத்தில் சலனம் எடுக்கவும். மாணவர்கள் கல்வியில் அக்கறை கொள்ளல் வேண்டும். மறதியால் தீமை உண்டாகும் அரசியலில் உள்ளோர் வார பிற்பகுதிகளில் பாராட்டப்படுவர். வியாபாரிகளும், விவசாயிகளும் வாரமுற்பகுதியை விடப் பிற்பகுதியில் இலாபம் பெறுவர். அதிர்ஷ்ட நாள்: வெள்ளி.

**கும்பம்:** தொழிலில் பல சிக்கல்கள் தோன்றும். எதிர்பார்த்த விடயங்கள் தோல்வியைத் தரும். அதனால் மனதில் கவலை உருவாகி வாழ்க்கையை வெறுக்கப் பண்ணும். நண்பர்கள் தேவையில்லாத விடயங்களுக்காக முரண்படுவார்கள். அதனால் பகை வலுக்கும். வாரப் பிற்பகுதியில் நிலைமை நல்ல நிலைக்குத் திரும்பும். போதிய பணம் புழங்கும். தவறாக எண்ணியோர் தமது தவறைப் புரிந்து கொள்வர். மதிப்பு உயரும். இலாபம் கிட்டும். மாணவர்கள் வாரப்பிற்பகுதியில் திறமை காட்டுவர். அரசியலில் உள்ளோர் வாரப் பிற்பகுதியில் போற்றப்படுவர். விவசாயிகளும் வியாபாரிகளும் வாரப் பிற்பகுதியில் பெரு இலாபம் அடைவர். அதிர்ஷ்ட நாள்: செவ்வாய்

**மீனம்:** ஊக்கத்துடன் செயற்பட்டுக் காரியங்களைச் சிறப்பாக முடிக்கச் சோம்பல் விடாது. எக்காரியத்தையும் பிற்போடுவீர்கள். பண வரவில் குறைவிருக்காது. நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த ஒரு நற்செய்தி கிட்டும். நண்பர்களிடையே குழப்பமேற்பட்டுத் தீரும். சோம்பலும் தவறான சந்தேகங்களும் மனதில் உருவாகி மனத்தைக் குழப்பும். அவதானமாகச் செயற்பட்டால் அவற்றைத் தடுக்கலாம். வாகனத்தைப் பாவிப்போர் வார இறுதி நாட்களில் கவனமாக இருக்கவும். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். அரசியலில் உள்ளோர் நினைத்ததைச் செய்ய முடியாது தவிப்பர். விவசாயிகளும், வியாபாரிகளும் புதிய முதலீடுகளைத் தவிர்ப்பது நல்லது. அதிர்ஷ்ட நாள்: ஞாயிறு.

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வதெல்லாம் பொய்
பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை
– காதில பூ கந்தசாமி –

**உதவி தேடிச் சென்ற அபலைப் பெண்ணை அனுமதி இன்றி வீடியோ எடுத்த எம்.பி ஸ்ரீதரன், அதனைத் தனது சகோதரனினால் இயக்கப்படும் இணையத்தளத்தில் வெளியிட்டு குறித்த அபலைப் பெண்ணுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்திவிட்டதாக ஊடகங்கள் பலவும் குமுறிக் கொண்டிருக்கின்றன. முரசும் அதனை வெளியிட்டிருந்தது. இதனையடுத்து தனது கற்பனைக் குதிரையைத் தட்டி விடுகிறார் காதில பூ கந்தசாமி.**

**கா.பூ:–** ஹலோ ஸ்ரீதரன் எம்.பி இருக்கிறாரா?

**பதில்:–** ஹலோ நீங்கள் யார் பேசுவது. நான் 'பென்காந்தன்' பேசுகிறேன்.

**கா.பூ:–** பெண் காந்தனா...?

**பதில்:–** சொறி...சொறி... நாக்குச் சறுக்கிவிட்டது. பெண்காந்தன் இல்லை பொன்காந்தன் பேசுகிறேன்.

**கா.பூ:–** இப்போது நாக்கு சறுக்கினாலும், கடந்த காலங்களில் பல இடங்களில் சறுக்கி விழுந்தவர் நீர், ஆசைநாயகியா அந்த ஆசிரியை இருக்கையிலேயே, உமது ஆர்வத்தைப் பல இடங்களுக்கு அலையவிட்டவர் நீர் குரலுக்குக் குரல் கொடுத்ததன் மூலம் 'பெண்காந்தம்' ஆகி தூள் கிளப்பியவர் நீர். பல சமாச்சாரங்களுக்குச் சொந்தக்காரன் என்பதால் நாக்குச் சறுக்கினாலும் பொருள் பொதிந்த சறுக்கலாக அமைந்திருக்கின்றது.

**பதில்:–** (கோபமாக) மிஸ்டர் நீர் யார்? உமக்கு என்ன வேணும்?

**கா.பூ:–** ஓ.கே. ஓ.கே. கூல் டவுண் மிஸ்டர் பெண்காந்தன். நான் கந்தசாமி பேசுறன். உங்களது கௌரவ பா.உ. ஸ்ரீதரனுடன் பேச வேண்டி அழைப்பை ஏற்படுத்தியிருக்கின்றேன்.

**பதில்:–** ஆம், அவர் பொதுமக்களை சந்தித்து அவர்களின் கஷ்டங்களை சந்திக்கு கொண்டு வரும் கைங்கரியங்களை பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கிறார். இப்போது நந்தியாக நீங்கள் வந்திருப்பதை அறிந்தால் வெந்தீயாய்க் கொப்பளிப்பார்.

**கா.பூ:–** அவர் சந்திக்கு கொண்டு வரும் விடயங்களால், அப்பாவி மக்களுக்கு ஏற்படும் அவலங்கள் பற்றிப் பேசலாம் என்றுதான் அழைப்பை ஏற்படுத்தியிருக்கின்றேன்.

**பதில்:–** ஓ..... நீங்கள் கலாரஞ்சினி என்ற பெண்ணின் பெயரால் நிதிசேகரிக்கப்பட்ட விடயம் சம்பந்தமாக பேசுகிறீர்கள் என்று நினைக்கின்றேன்

**கா.பூ:–** ஆம். அந்த வீடியோ பிரதியை சுட்டெடுத்த சூனியக்காரன் நீர் என்றுதான் பேச்சு அடிபடுகிறதே....

**பதில்:–** ஐயா....! ஏன் என்னை வம்பில் மாட்டி விடுகிறீர்களா? கூலிக்கு மாரடிக்கும் நான், கூலி கொடுக்கும் முதலாளிக்கு விசுவாசமாய் இருப்பது அவசியமல்லவா? அதனாலேயே அவர்கள் முன்மொழிவதை சிரமேற்கொண்டு செய்துவருகின்றேன். இதில் ஏதாவது தவறுகள் இருப்பின் அது என் குற்றமன்று. என்ன செய்விக்கும் அந்தத் தம்பியின் குற்றமே என்பதை அழுத்தம் திருத்தமாக கூறிவைக்க விரும்புகின்றேன்.

**கா.பூ:–** குறித்த வீடியோ நீக்குமாறு தங்களிடம் கேட்கப்பட்டபோது சண்டித்தன முறையில் வம்பு பண்ணியதாகக் கூறப்படுகிறதே.

**பதில்:–**ஆம், பிஸியான செடுலுக்கு மத்தியிலும் நேரம் ஒதுக்கி. வீடியோ செற்பண்ணி, ஒளிப்படம் எடுப்பது ஒன்றும் இலகுவான காரியம் அல்ல. அந்த நேர விரயத்திற்கும் எமது சக்தி விருப்பத்திற்கும் ஈடு செய்யும் வகையிலான தொகை சேகரிக்கப்பட முன்னரே, ஒலி நாடாவை ஒழித்துவிடுமாறு கேட்டார்கள். அதனாலேயே மறுப்புத் தெரிவித்தேன். அதுவும் என் குருநாதரின் உபதேசப்படியேயாகும் என்பதனை தெரிவிக்கவிரும்புகிறேன்.

**கா.பூ:–** அதுசரி உங்களது தனிப்பட்ட சேட்டைகள் இப்போதும்...? லேசாக முறைக்கிறார் பொன்காந்தன், நைசாக நழுவுகிறார் கந்தசாமி.

யாவும் கலப்படமற்ற கற்பனை

# குருடர்களை இருளிலிருந்து ஒளிக்கு அழைத்துச் சென்றவர்

ப்ரெய்லி புத்தகங்கள், டைப்ரைட்டர்களைத் தவிர ஏராளமான ப்ரெய்லி முறை அட்டைகள் புழக்கத்திற்கு வந்துள்ளன. இதைக் கொண்டு குருடர்கள் கணித இயலை, அல்ஜீப்ரா உட்படக் கற்றுக் கொள்ள முடிகிறது. எத்தகைய அதிசயமான முன்னேற்றம்! ஜான் மில்டன் என்ற மகாகவி ஒருவர் குருடர் ப்ரெய்லி முறையில் கற்றறிந்தார். ஹெலன் கெல்லர் பிறவி ஊமை, செவிடு,குருடு. இவர் தம்மைப் பற்றியும், தம்மைப் போன்றவர்களைப் பற்றியும் ஐந்து புத்தகங்கள் எழுதி வெளியிட்டிருக்கிறார். சரர்ஆர்தர் பியர்சன் என்பவர் பார்வை இழந்த இராணுவ வீரர்களுக்காக ஜெயிண்ட டன்ஸ்டன்ஸ் ஹோம் என்ற பெயரில் விடுதி ஒன்றைத் துவக்கிப் புகழ் பெற்றார். இவரும் ஒரு குருடர்தான். இப்படி ப்ரெய்லியின் முறையினால் கல்வி கற்று, வாழ்வு பெற்றுப் புகழ்பெற்றவர்கள் அநேகர். குருடர்களும் வாழ்வில் உயர முடியும் என்ற நம்பிக்கை உண்டாக்கிய ப்ரெய்லியின் பெருமை சொல்லவும் படுமோ!



உலகை வியக்க வைத்தவர்கள்

[வியப்புக்கள் தொடரும்...]

Regd. as a News paper at the G.P.O.(QD/124/NEWS/2010)



# வான்வெளியில் மின்சக்தி

ஐரோப்பியர்களினதும் உள்ளூர் விளையாட்டுத் தேவைகளையும் கருத்திற் கொண்டு உலகின் முதலாவது மின்சார விமானம் உருவாக்கப்பட்டுள்ளது. 80 முதல்,120 குதிரை வலு கொண்ட இந்த விமானம் பல்வேறு இலகு ரக உபகரணங்களைக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. இதில் ஆகக் கூடிய எடை கொண்ட இலகு 200 இறாத்தல்கள் மட்டுமே. அமெரிக்காவின் விளையாட்டுத்துறை விமானிகளுக்கு உகந்தது என சிபார்சு செய்யப்பட்டுள்ளது. SONEX விமானம் என்று இதற்குப் பெயரிடப்பட்டுள்ளது.

# மாதிரி



மருத்துவமனைகள் ஆரம்ப காலத்தில் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு இருந்தது காலப்போக்கில் அவை பணம் சம்பாதிக்கும் களமாக மாறிவருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. ஒரு உயரிய நோக்கத்திற்காகவே அதாவது மக்களின் உடல் ஆரோக்கியத்திற்காகவும், உடல் நலக்குறைவால் சிகிச்சைக்காக வெகுதூரம் மக்கள் செல்வதை தடுப்பதற்காகவும் போன்ற பொது நலநோக்கில் தான் ஆரம்பிக்கப்படுகின்றன. நாளாக நாளாக அதன் நோக்கம் படிப்படியாக திசை மாற்றப்பட்டு பணம் சம்பாதிக்கும் நோக்கமே தலையாய கடமை என்ற வியாபார நோக்கிற்கு தள்ளப்படுகின்றன.இதில் போலி மருத்துவர்களின் பிரவேசம் வேறு. மக்களின் அறியாமையையே தன் வியாபார முதலாய் எண்ணி களத்தில் குதித்து கோடிகள் பார்க்கின்றனர். கடைசியில் சிலர் கம்பியும் எண்ணுகின்றனர்.

பல மருத்துவ மனைகளில் உயிருக்காக போராடும் நோயாளியின் சிகிச்சைக்காக மருத்துவர்களால் நோயாளியின் குடும்பத்துடன் இரக்கமின்றி பணப்பேரம் பேசப்படுவதாக நாம் கேள்விப்படுகிறோம். அப்படியே சிகிச்சைக்கு முன் நோயாளியின் உயிர் பிரிந்து விடுமாயின் அவர் சிகிச்சைக்காக அதுவரை ஆன செலவுகள் முற்றிலும் செலுத்தப்படாதவரை அவரின் பிரேதம் என்ன தான் குடும்பத்தினர் கதறினாலும், கூக்குரலிட்டாலும் மருத்துவமனையிலிருந்து வெளியே எடுத்துச்செல்ல அனுமதிப்பதில்லை மருத்துவமனை நிர்வாகம். எவ்வாறு மருத்தவ மனைகள் இருக்கின்ற போது நவீன முறையில் கட்டப்பட்டிருக்கும் மருத்துவ மனைகள் சிகிச்சைக்கு ... கட்டணம்,மருத்துவமனை கட்டுவதற்கு செலவான கட்டணத்தையும் சேர்த்து இவ்வாறான இருத்துவ மனைகள் நோயாளிகளிடம் அறவிடுகின்றன.

# மனோதிடம்





வாழ்க்கையில் சாதிப்பதற்கு ஊனம் ஒருதடையல்ல என்பதினை நிரூபிக்கும் பல விதமான மனிதர்களை பற்றி நாம் கேள்விபட்டுள்ளோம். அத்தகைய ஓர் சிறுவனைப் பற்றிய சுவாரஸ்யமான செய்தியே இது.அமெரிக்காவைச் சேர்ந்த 9 வயதான கோடி மெக்கஸ்லேண்ட் என்ற இச் சிறுவனிடம் சுமார் 20 செயற்கைக் கால்கள் உள்ளன. இவை அனைத்தும் வெவ்வேறு விதமான போட்டிகளில் பங்கு பற்றுவதற்காக அச் சிறுவன் தன்னிடம் வைத்துள்ளவையாகும். இதுவரை பல விளையாட்டுக்களில் பங்கேற்று பதக்கங்களை வென்றுள்ளான் கோடி. இவன் குழந்தையாக இருக்கும் போதே இவனது கால்கள் சத்திரசிகிச்சை மூலம் அகற்றப்பட்டுள்ளன எனினும் தன்னம்பிக்கையை மட்டும் இழக்காத கோடி தனது முயற்சி மூலம் தன்னால் பல விளையாட்டுக்களில் சாதிக்கமுடியும் என்பதினை நிரூபித்துள்ளான். இவனது வெற்றிகளுக்கான இன்னுமோர் முக்கிய காரணம் இவனது பெற்றோராகும். அவர்களது ஊக்குவிப்பே இத்தகைய ஓர் தன்னம்பிக்கை மிக்க ஒருவனாக மாற வழிவகுத் துள்ளது. கோடியின் தற்போதைய இலக்கு உலக ஊனமுற்றோருக்கான ஒலிம்பிக் போட்டிகளில் ஓர் தங்கப்பதக்கத்தை வெல்வதே ஆகும்.

# நிலையான நீர்



நீண்டகாலம் ஒரே இடத்தில் இருந்து மிகவும் பழமை வாய்ந்த நீர் என்ற பெருமையைப் பெற்றுச் சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்திருக்கிறது. கனடா நாட்டில் உள்ள நீர் நிலை ஒன்று. 3800 மீற்றர் ஆழமுள்ள இந்நீர் நிலையானது பல நூற்றாண்டுகளாகச் சுத்திகரிப்பு எதுவுமின்றி காணப்படுகின்றது. வட கனடாவையும் அமெரிக்காவையும் இணைக்கும் பகுதியில் காணப்படுகின்ற இந் நீர்நிலை பசுபிக் சமுத்திரத்துடன் மிகவும் சிறிய அகலத்திலான தொடர்பைக் கொண்டுள்ளது. இவ் அகலமானது வெறும் 70 மீற்றர்களேயாகும். அமெரிக்கர்களினாலும், கனேடிய மக்களினாலும் விசித்திரமாக நோக்கப்படுகின்ற இந் நீர்நிலை குளிர்காலங்களில் பனியின் உறைவிடமாகி நீர் மறைந்துவிடும். வசந்தகாலம் வந்துவிட்டால் இவ்விருநாட்டின் எல்லைப் புறங்களில் வாழ்வோருக்கும் கொண்டாட்டம் தான். இந்நீர் நிலையே அவர்களின் சொர்க்கபுரியாக மாறி விடும். சுற்றுலாப் பயணிகளும், பொழுதுபோக்க விரும்புபவர்களும் இங்கு முகாம் அமைத்துவிடுவார்கள். படகுச் சவாரிகள் நடைபெறும். இரவு பகலாக களியாட்டங்களுக்கும் இளசுகளின் ஆனந்தக் கூத்துக்கும் பஞ்சமே இருக்காது.


## இணுவில் மக்லியோட் வைத்தியசாலையின் வாய்.பல் சிகிச்சைப் பகுதி (இணுவில் ஆஸ்பத்திரி)

*Oral And Dental Wing Of Mc Leod Hospital Inuvil*



அதி உன்னத உபகரணங்கள்,வசதிகள் கொண்ட (Air Rotor Dental Unit) இணுவில் மக்லியோட் வைத்தியசாலையின் வாய், பல், சிகிச்சைப் பகுதிக்கு வருகை தந்து நவீன முறையில் சிகிச்சை பெறுங்கள்.

தேவையேற்படின் கொழும்பிலிருந்தும் அதி உன்னத நிபுணர்களை இச்சிகிச்சைப் பகுதிக்கு வரவழைக்கச் சந்தர்ப்பம் உண்டு.

தொ.பே.இல-021 223 7669,077 9060 767,077 6171 451.

Dr.R விசாகருபன், பல் வைத்திய நிபுணர்.

## யாழ் - கொழும்பு பயணிகள் சேவைக்கு...

# SDR Travels

ஆசனப் பதிவுகளுக்கு

கொழும்பு: 0778278089

யாழ் : 0772622638




தொடர்புகளுக்கு :-

40 ஸ்ரேசன் வீதி, கல்கிசை.

அராலி தெற்கு, வட்டுக்கோட்டை.

SINCERITY ✲ DECENCY ✲ RESPONSIBLE ✲ அதுதான் SDR

Registered as a News Paper in Sri lanka

இலவச இணைப்பு

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

யாழ் மக்களுக்காக... யாழ் மண்ணில்...



C/348

SPICE TRAVELS & TOURS (PVT) LTD®

IATA

412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)

Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2041 தை 06 வியாழக்கிழமை (20.01.2011) பக்கங்கள் IV ஓசை – 112

## வேட்புமனுத்தாக்கல் இன்று முதல் ஆரம்பம்

(கொழும்பு)

எதிர் வரும் மார்ச் மாதம் 12ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுத்தாக்கல் இன்று முதல் ஆரம்பமாவதாக வேட்பு மனுக்களை ஏற்றுக்கொள்வதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும் சுயேட்சைக் குழுக் (iiiஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் பத்து லட்சம் பேருக்கு உதவ 51 மில்லியன் அமெரிக்க டொலர் தேவை

(வோஷிங்டன்)

இலங்கையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சுமார் 10லட்சம் மக்களின் அவசரத் தேவைக்களுக்கு என 51 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுவதாக ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித வுரிமை விவகாரங்களுக்கான பிரதிச் செயலாளரும், அவசரகால நிவாரண பிரதி இணைப்பாளருமான கதரின் பிராக் நேற்று இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு இந்தத் தகவலைவெளியிட்டுள்ளார்.



இலங்கையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதிர்வரும் ஆறு மாத காலத்திற்கு தேவையான நிவாரணங்களை (ivஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிச்சூடு ஒருவர் பலி!

(கொழும்பு)

வெள்ளம்பிட்டி பிரதேசத்தில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்வத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. முச்சக்கர வண்டியில் சென்றவர்களை உந்துருளியல் பின் தொடர்ந்து வந்த நபர்கள் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளதாகத் தெரியவருகின்றது.

இந்த சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் (iiiஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு-கிழக்கில் சிறுபான்மையினர் ஒருவித அச்சத்துடனேயே வாழ்கின்றனர்

## லண்டன் அமைப்பின் ஆய்வுத்தகவல்

(லண்டன்)

**இலங்கையில் போர் முடிவடைந்து சுமார் இரண்டு வருடம் ஆகியுள்ள நிலையிலும், இன்னமும் வடக்கிலும் கிழக்கிலும் வசிக்கும் சிறுபான்மையினரான தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் ஒருவித அச்ச சூழலிலேயே வாழ்கின்றனர் என்று கூறும் அறிக்கை ஒன்று வெளியாகியுள்ளது.**

வடபகுதி சிங்களமயமாக் கப்படுகிறது என்கிற அச்சம் நிலவுவதாக அறிக்கை கூறுகிறது

லண்டனை தலைமையிட மாகக் கொண்டு செயற்படும் சிறுபான்மையினர் உரிமை அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்தக் கருத்து கூறப்பட்டுள்ளது.

வடகிழக்கில் சில மாவட்டங்களில் நான்கு பொதுமக்களுக்கு ஒரு இராணுவத்தினர் என்கிற எண்ணிக்கை நிலவுகிறது என்றும் அப்பகுதிகள் இராணுவமயமாக் கப்பட்டு வருவதாகவும் அந்த அமைப்பின் அறிக்கை கூறுகிறது.

இலங்கை அரசு பொதுவாக ஒரு பெருந்தேசிய இனவாத (iiiஆம் பக்கம் பார்க்க)

## நல்லிணக்க ஆணைக்குழுவின் கடமை ஜனவரி மாதத்துடன் நிறைவடைகிறது



(கொழும்பு)

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு எதிர்வரும் 31ஆம் திகதியுடன் தமது கடமைகளை நிறைவுக்கு கொண்டு வரவுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

எனினும் ஏற்பட்ட சேதங்கள் மற்றும் கணிப்பீடுகள் தொடர்பில் எதிர்காலத்தில் சாட்சிகள் அளிக்க சந்தர்ப்பம் வழங்கப்படும் என உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக் குழுவின் தலைவர் சீ.ஆர்.டி.சில்வா தெரிவித்துள்ளார்.

இந்த மாதத்தின் இறுதி வாரத்தில் (ivஆம் பக்கம் பார்க்க)

## இராஜதந்திர நெருக்கடிக்கு உதவ இலங்கைக்கு ஆர்மிரேஜ் ஆலோசனை



(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்காவின் முன்னாள் பிரதி இராஜாங்க அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிட்டேஜ் நேற்றுமுன்தினம் மாலை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடி (ivஆம் பக்கம் பார்க்க)

## பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ ஐ.நா.பிரதிநிதி இலங்கை வருகை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமை விவகாரங்களுக்கான பிரதிச் செயலாளரும், அவசரகால நிவாரண பிரதி இணைப்பாளருமான கதரின் பிராக்கின் நேற்றைய இலங்கை விஜயத்திற்கும், பான் கீ மூனின் நிபுணர்கள் குழுவுக்கும் தொடர்பில்லை என ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.

இலங்கையில் எதிர்வரும் 21ஆம் திகதி வரை தங்கியிருக்கவுள்ள இவர், வடக்கில் போரினால் பாதிக்கப்பட்ட மற்றும் இடம்பெயர்ந்து மீளக்குடியேறியுள்ள மக்களையும் நேரில் சென்று பார்வையிடவுள்ளதுடன், வெள்ளத்தினால்

பாதிக்கப்பட்ட பிரதேசங்களையும் பார்வையிடுவார் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இலங்கையில் மேற் கொள்ளப்பட வேண்டிய மனிதவுரிமை நடவடிக்கைகள் மற்றும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்க



ளுக்கான நிவாரணப் பொருட்களை வழங்குவது தொடர்பாகவும் கதரின் பிராங்கின் இவ் விஜயம் அமைவதாக ஐக்கிய (ivஆம் பக்கம் பார்க்க)

## ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் இராணுவம் தலையிடாது

### - இராணுவப் பேச்சாளர்


(கொழும்பு)

ஜனாதிபதியால் நியமிக்கபடப்டுள்ள கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் இராணுவத்தினர் ஒருபோதும் தலையிடவில்லை என்றும் இனியும் அவர்கள தலையிட மாட்டார்கள்(ivஆம் பக்கம் பார்க்க)



## கூட்டமைப்பும் – அரங்கமும் பிளவுபடக்கூடாது

### - கலாநிதி குமரகுருபரன் கவலை



(கொழும்பு)

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை வென்றெடுப்பதற்காக பேச்சுக்களில் ஈடுபட்டுவரும் கூட்டமைப்பும் தமிழ்க் கட்சிகளின் அரங்கமும் உள்ளூராட்சித் தேர்தல்களுக்காக பிளவுபட்டு விடக்கூடாது என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் மேல் மாகாணசபை உறுப்பினருமான கலாநிதி குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் இதனை அவர் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் தமிழ் கட்சிகளின் அரங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளும் கூட்டமைப்பும் கடந்த காலத்தில் ஏற்பட்ட பாடங்களை அனுபவமாகக் கொண்டு தமிழ் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்கின்ற பொது அரசியல் (ivஆம் பக்கம் பார்க்க)

## அங்காடி பழக்கடைகள் வியாபாரிகளிடம் கையளிப்பு

### அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

நகர அபிவிருத்தி நடவடிக்கைகளின் ஓர் அங்கமாக யாழ்.நகரில் அகற்றப்பட்ட நடைபாதை பழவியாபாரிகளுக்கென புதிதாக அமைக்கப்பட்ட அங்காடி வியாபார கடைத் தொகுதியை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பழவியாபாரிகளிடம் நேற்றுக் கையளித்தார். யாழ் மத்திய (ivஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பில் இன்று நேர்முகத் தேர்வு

(அச்சுவேலி)

நுண்கலைத்துறையில் பட்டப்படிப்பை முடித்துவிட்டு வேலையற்றிருந்த பட்டதாரிகளை ஆசிரியப் பணியில் இணைத்துக் கொள்வதற்காக நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆசிரியர் நியமனம் வழங்குவதற்கான நேர்முகத் தேர்வுகள் இன்று கொழும்பில் நடைபெறவுள்ளது.

இதில் அழகியல் பாடங்களான நடனம், சங்கீதம், சித்திரமும் வடிவமைப்பும் ஆகிய பாடங்களில் பட்டம் பெற்ற மாணவர்களுக்கு கடந்த 10ஆம் மாதம் நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில் அழகியற்பாட ஆசிரியர்களிற்கான நேர்முகப் பரீட்சை இன்று கொழும்பில் நடைபெறவுள்ளது. இந்த நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கென யாழ். குடாநாட்டில் இருந்து நூற்றுக் கணக்கானோர் அழைக்கப்பட்டிருக்கின்றனர்.

இதேவேளை, அமைச்சினால் நடாத்தப்பட்டு வரும் நேர்முகத் தேர்விற்கு குடாநாட்டைச் சேர்ந்த பலருக்குக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக பாதிக்கப்பட்டவர்கள் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, கட்டம் கட்டமாகவே கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுவதாகவும், ஏனையோருக்கு விரைவில் கடிதங்கள் அனுப்பி வைக்கப்படும் என தெரிவித்திருந்தபோதிலும், தமக்கு இதுவரை நேர்முகத் தேர்விற்கான கடிதங்கள் கிடைக்கப்பெறவில்லையென தெரிவிக்கும் அவர்கள், தமக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டு தாமும் இந்த இந்நேர்முகத் தேர்வில் பங்குபற்ற அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (03)

## அடிக்கல் நாட்டல்

ஜப்பான் அரசின் நிதியுதவியுடன் அமைக்கப்படவுள்ள யாழ். போதனா வைத்தியசாலையின் மூன்று மாடிக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நாளை யாழ். போதனா வைத்தியசாலையில் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனா அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஜப்பான் உயர்ஸ்தானிகாரலய அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

# நிவாரணப் பொருட்கள் கையளிப்பு



(தெல்லிப்பளை)

கிழக்கில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கபட்ட மக்களுக்கு வழக்குவதற்கென தெல்லிப்பளை பூமா விளையாட்டுக்கழகத்தினால் சேரிக்கப்பட்ட சுமார் அறுபதாயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்கென வலி வடக்கு பிரதேச செயலாளரிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது

இந்தப் பொருட்களை பிரதேசச் செயலாளர் உடனடியாக கிழக்கு மாகாண பல்கலைக்கழக மாணவர்களிடம் கையளித்துள்ளார். இதில் பால்மா வகைகள், பிஸ்கட் வகைகள் மற்றும் குடிநீர் உட்பட சவர்க்காரம் என பல்வேறு பொருட்களும் அடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## அணிகள் அறிவிப்பு

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்கான 15 பேர் கொண்ட அணியை, தென்னாபிரிக்க, இங்கிலாந்து, நியூசிலாந்து, பாகிஸ்தான் கிரிக்கெட் சபைகள் அறிவித்துள்ளன. அதன்படி ஒவ்வொரு அணிகளின் பெயர் விபரம் வருமாறு:

**இங்கிலாந்து**

ஸ்ட்ராஸ் (தலைவர்) ஆண்டர்சன், இயன் பெல், டிம் பிரெஸ்னன், ஸ்டுவர்ட் பிராட், போல் கொலிங்வூட், இயான் மோர்கன், கெவின் பீற்றர்சன், மேட் பிரையர், அஜ்மல் ஷாசாத், கிரேம் ஸ்வான், ஜேம்ஸ் டிரெட்வெல், ஜொனாதன் டிராட், லுக் ரைட், மைக்கேல் யார்டி.

**தென்னாபிரிக்கா**

ஸ்மித் (தலைவர்), ஹசிம் அம்லா, டிவில்லியர்ஸ், கலிஸ், டுமினி, பெலிசிஸ், இங்ராம், போத்தா, மார்னே மோர்க்கல், ராபின் பீட்டர்சன், ஸ்டெய்ன், இம்ரான் தாகீர், டிசோட் சோபே, மார்னே வான்வியூர்.

**நியூசிலாந்து**

வெட்டேரி (தலைவர்), மார்ட்டின் குப்தில், மக்குல்லம், ரோஸ் டெய்லர், ரைடர், பென்னட், பிராங்ளின், ஜேமி ஹவ், நாதன் மக்குல்லம், மில்ஸ், ஜேக்கப் ஓரம், சௌத்தி, ஸ்டைரிஸ், வில்லியம்சன், லுகே வுட்காக்.

**பாகிஸ்தான்**

அப்ரிடி, மொகமட் ஹபீஸ், அஹ்மட் ஷேஹாட், கம்ரன் அக்மல், யூனிஸ் கான், மிஸ்ப உல் ஹக், ஆஷாட் சபீக், உமர் அக்மல், அப்துல் ரசாக், அப்துர் ரஹ்மான், சீட் அஜ்மல், சொஹைப் அக்தார், உமர் குல், வஹாப் ரியாஸ், சொஹைல் தன்வீர்.

# தொடரை வென்றது பாகிஸ்தான்

(வெலிங்டன்)



நியூசிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட் தொடரை பாகிஸ்தான் அணி கைப்பற்றிக் கொண்டது.


நியூசிலாந்து, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவதும், இறுதியுமான போட்டி நேற்று வெலிங்டன் மைதானத்தில் நிறைவடைந்தது.

இப்போட்டியில் 274 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் ஐந்தாம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த பாகிஸ்தான் அணி, நேற்றைய இறுதி நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 226 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது போட்டி நிறைவுக்கு வந்தது. இதில் யூன்ஸ்கான் 81 ஓட்டங்கபைப் பெற்று ஆட்டமிழந்தார். அணித் தலைவர் மிஸ்பா உல் ஹக் ஆட்டமிழக்காது 70 ஓட்டங்களைப் பெற்றதுடன் போட்டியின் ஆட்ட நாயகனாகவும் தெரிவானார். இதன் மூலம் இப்போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவுக்கு வந்தது. அத்துடன் இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை பாகிஸ்தான் அணி 1-0 என்ற கணக்கில் கைப்பற்றிக் கொண்டது.

2006ஆம் ஆண்டுக்குப் பின்னர் பாகிஸ்தான் அணி டெஸ்ட் தொடரைக் கைப்பற்றியிருப்பது குறிப்பிடத்தக்கது. நியூ சிலாந்து முதல் இனிங்ஸ் 356, பாகிஸ்தான் முதல் இனிங்ஸ் 376, நியூசிலாந்து இரண்டாவது இனிங்ஸ் 293. இரு அணிகளுக்குமிடையிலான ரி-20 தொடரை நியூசிலாந்து அணி கைப்பற்றியமை தெரிந்ததே.

# 3ஆவது போட்டியில் இந்தியா வெற்றி

(கேப்டவுன்)



தென்னாபிரிக்க அணிக்கெதிரான மூன்றாவது ஒரு நாள் போட்டியில் இந்திய அணி இரண்டு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இந்திய, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் மூன்றாவது போட்டி நேற்று முன்தினம் கேப்டவுன் மைதானத்தில் பகலிரவு போட்டியாக நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய தென்னாபிரிக்க அணி, 49.2 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையம் இழந்து 220 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பிளிஸ்சிஸ் 60, டுமினி 52 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சகீர்கான் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 221 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இந்திய அணி, 48.2 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் யூசுப் பதான் 59, ரெய்னா 37 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மோர்க்கல் மூன்று, ஸ்ரெயின் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக யூசுப் பதான் தெரிவானார்.

ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் இந்திய அணி 2-1 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது.

இரு அணிகளுக்குமிடையிலான நான்காவது ஒரு நாள் போட்டி நாளை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சிறு விளம்பரம்

**காங்கேசன் சீமெந்து**

காங்கேசன் சீமெந்து கிளிநொச்சி மாவட்டத்தில் சில்லறையாகவும், மொத்தமாகவும் பெற்றுக் கொள்ள, கோபால் ஸ்ரோர்ஸ், இல: 05, மேற்கு விவேகானந்த நகர், கிளிநொச்சி. (சி-198)

## கால்கோள் விழா

யாழ். இந்துக் கல்லூரியின் தரம் 6 மாணவர்களுக்கான கால்கோள் விழா இன்று காலை 8 மணிக்கு இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

EDWARD MAKES
Edward Pain Oil

சகல விதமான நோவு, வீக்கம், கண்டல், சுளுக்கு, கைகால் பிடிப்பு, நாரிப்பிடிப்பு, கழுத்துளைவு, தீச்சுட்டபுண், பித்தவெடிப்பு நீக்க

எட்வேட் நோவு வாத எண்ணெய்

நோ எண்ணெய் வாங்குங்கள்...

★ பித்தவெடிப்பினால் ஏற்பட்ட நோவு. வேதனையிலிருந்து விடுதலை தந்து குணமளிக்கும் அரிய தைலம்

★ மாடுகளுக்குண்டாகும் சகல நோவு. வீக்கங்களும் குணமாகும்.

RED OINTMENT (றெட் ஒயின்மென்ட்)

நீர்ச்சிரங்கு, சொறி, புண், புரை, பருக்கள், கட்டு, படுவன், அக்கி, கிரந்தி, அவியல், தலை அவியல், தீச்சுட்டபுண்டு, வெட்டுக்காயம், உரஞ்சல், வட்டக்கடி, அரைக்கடி சகலதையும் குணமாக்கவல்லது.

GOROCHANA PILLS (கோரோசனைக்குளிசை)

குழந்தைகளுக்குக் காணும் கிரந்தி முறுக்கு, சளி, சளிக்கட்டு, மேல்கொதி, மண்டைக்கொதி, உடற்சூடு மலக்கட்டு, சலக்கட்டு ஆகியவையும் வேறு குழந்தை நோயும் குணமாகும்.

பலகாலமாகப் பற்பல மருந்துகள் செய்து அனுபவம் பெற்றவர்கள். சித்த ஆயுள்வேத மருந்துகள், வைத்தியர்களுக்கும் மருந்துக் கடைகளுக்கும் ஓடருக்குச் செய்து கொடுக்கப்படும்.

நோயாளர்களுக்கு வைத்திய ஆலோசனைகளும், சிகிச்சைகளும் வழங்கப்படும்

எட்வேட் தயாரிப்புக்கள் எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

T.P: 021 222 8171
edwardmakes@yahoo.com

63, குருசோ வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(சி-406)

## மனோதத்துவ வைத்தியம்

**GENERAL PSYCHOTHERPHY**

**அகில உலகெங்கும் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களிற்கு அறிமுகமான பிரபல மனோதத்துவ Dr.P. ஆறுமுகம் அவர்கள் பல நூற்றுக்கணக்கான இளைஞர்களின் இல்லற வாழ்க்கைக்குப் புத்துயிர் கொடுத்து பலரின் பாராட்டையும் பெற்றுள்ளார்.**

**20-01-2011 முதல் 25-01-2011 வரை யாழில்**

KAMAL TOURIST INN (சிவதர்சன் பாட்ஸ் கடைக்குமேல்
392/A Clock tower street, Jaffna
வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்)

T.P 021 492 2403
Hot Line : 071 9315664
077 7569205

(தம்பாத்திய பாதிப்புக்கு 100%இற்கு 10% கூட நோய்காரணம் அல்ல 90%மனோநிலையால் ஏற்படும் தாழ்வு மனப்பான்மையே காரணம்)

இப்படியானவர்கள் திருமணம் செய்யப் பயந்து திருமணத்தை வெறுக்கிறார்கள். பலர் திருமணம் செய்து ஏற்பட்ட தோல்வியால் வாழ்வே வீணாகிவிட்டது என்று பயந்து வாழ்வை வெறுக்கிறார்கள். இதற்கு இளம் வயதில் இருந்து (முஸ்தீ மைத்தூனம்) கரப்பழக்கம் செய்து சீக்கிரம் விந்து வெளியாக்க பயிற்சி கொடுத்தாலும், சிலர் அளவுக்கதிகமான உறவு கொள்வதாலும் முறையற்ற தொடர்புகளாலும் உடல் ஆற்றல் குன்றி நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு இப்படியான பாதிப்புக்களை ஏற்படுத்திக் கொள்கின்றனர்.

விஞ்ஞான வளர்ச்சி பெற்ற முக்கியத்துவம் கொடுக்கும் இக்காலத்தில் இவ்வாறான பாதிப்புக்களை Dr. P. ஆறுமுகம் அவர்கள் விஞ்ஞான ரீதியில் அற்புதமான மனோதத்துவப் பயிற்சியைக் கொடுத்து தாழ்வு மனப்பான்மையை நீக்க முடியாது என்ற எண்ணத்தை மாற்றி அடி மனதில் நான் முடியுமானவன் ஆகிவிட்டேன் என்ற நம்பிக்கையைக் கொடுக்கின்றார் மற்றும் உடல்நிலை பாதிப்பு, பலவீனம், மெலிவு, நரம்புத்தளர்ச்சி, நீங்கள் விரியம் பெறத் தரமான நிலை உயர்ந்த மூலிகை மருந்தையும் கொடுக்கின்றார்.

**வெளிநாட்டினருக்கு விஷேட வைத்தியம்**

**மனோதத்துவ ஒலிப்பதிவு நாடாவும் நாலுவிதமான 1 1/2 கிலோ மூலிகை மருந்தையும் அனுப்புகிறார். இப்படியான வைத்தியம் செய்து வெற்றி பெற்றவர்கள் லண்டன், இத்தாலி, சுவிஸ், ஜேர்மன், சவுதி அரேபியா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் இருந்து பாராட்டும் பரிசில்களும் அனுப்பி உள்ளனர்.**

**நீங்களும் வெட்கமின்றி உங்களுக்குரிய பாதிப்புக்களை எழுதினால் சில கேள்விகளுக்குப் பதில் பெற்று அதற்கேற்ப மனோதத்துவ ஒலிப்பதிவு நாடாவும் மூலிகை மருந்துகளும் பெற்று இன்பமான இல்லற வாழ்வை பெறலாம்.**

**இன்னும் மனோவியாதிகள், தலையிடி, ஆஸ்மா, வாதம், நீரிழிவு, தலைமுடி உதிர்தல், குழந்தை பேறின்மை, பல்முரசு கரைதல் போன்றவற்றுக்கும் சிறந்த வைத்தியம் செய்கின்றனர்.**

**விளக்கம் பெற 300/= மணி ஓடர் செய்யவும்.** (சி-346)



தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் மஹா கும்பாபிசேக பெருவிழா ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அம்பாளுக்கு எண்ணைக்காப்பு சாற்றும் நிகழ்வு நாளை காலை 7.00 மணி முதல் ஆரம்பமாகி 22ஆம் திகதி மாலை 5.00 மணி வரை நடைபெறவுள்ளது.

# தேசிய மட்ட ஹொக்கி இறுதிப் போட்டியில் பங்குகொள்ளும் யாழ். மாவட்ட அணியினருக்கு அமைச்சர் டக்ளஸ் வாழ்த்து

(யாழ்ப்பாணம்)

இவ்வார இறுதியில் நடைபெறவுள்ள தேசிய மட்ட ஹொக்கி இறுதிப்போட்டியில் பங்குபற்றும் யாழ்.மாவட்ட அணியினருக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வாழ்த்துத் தெரிவித்துள்ளதுடன் அணியினரின் சகல செலவுகளையும் பொறுப்பேற்றுள்ளார்.

அமைச்சரின் யாழ்.பணிமனைக்கு வருகை தந்த யாழ். மாவட்ட ஹொக்கி அணியினருடன் கலந்துரையாடிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தேசிய மட்டத்தில் பங்குகொள்ளவுள்ள அவர்களுக்கு தமது வாழ்த்துக்களையும் ஆசிகளையும் வழங்கினார். இதனைத் தொடர்ந்து தமது பயணச்செலவுகள் குறித்து அணியின் இணைப்பாளர் வினோகாந்தன் தெரியப்படுத்திய நிலையில் அணியினரின் போக்குவரத்து தங்குமிட உணவுச்செலவுகள் அனைத்தையும் தாமே பொறுப்பேற்பதாகவும் அதற்கான காசோலையினையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இணைப்பாளரிடம் கையளித்தார்.

இதனைத்தொடர்ந்து ஹொக்கி அணியினர் மத்தியில் உரையாற்றிய அமைச்சர் விளையாட்டுத்துறையினை பொழுது போக்கிற்காக மட்டுமன்றி உங்களது முன்னேற்றத்திற்கு உறுதுணையாகவும் மாவட்ட மக்களின் பெருமைக்கு எடுத்துக்காட்டாகவும் வெளிப்படுத்தவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். அண்மையில் கால்பந்தாட்ட தேசிய இறுதிப்போட்டியில் பங்குகொண்டு வெற்றிபெற்றதுடன் ஜனாதிபதியின் கையால் வெற்றிக்கிண்ணம் பெற்ற பருத்தித்துறை லீக்அணியினரை உதாரணமாக எடுத்துக்காட்டிய



அமைச்சர் இவ்வாறு நாம் வாழுகின்ற சமூகத்திற்கும் மாவட்டத்திற்கும் பெருமை சேர்க்க வேண்டும் எனத் தெரிவித்ததுடன் தம்து வாழ்த்துக்களைத் தெரிவித்து அணியினரை அன்புடன் வழியனுப்பி வைத்தார்.

தேசிய மட்ட ஹொக்கி இறுதிப்போட்டிகள் இன்று கொழும்பில் ஆரம்பமாகி எதிர்வரும் 24ஆம் திகதிவரை கொழும்பில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கடத்தப்பட்ட மாணவர்கள் தாக்கப்பட்டு விடுவிப்பு

(மன்னார்)

மன்னார் பகுதியில் பிரபல பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் உயர்தர வகுப்பு மாணவர்கள் இருவர் இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டு நேற்று முன்தினம் கடுமையாக்த் தாக்கப்பட்ட நிலையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அருளானந்தம் ஜோகன்சன் (வயது - 19), மற்றும் கிறேசியன் றொமல்சன் (வயது - 18) ஆகிய இரண்டு மாணவர்களும் கடந்த திங்கட்கிழமை பாடசாலைக்குச் சென்று திரும்பாததை அடுத்து பெற்றோர்கள் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்த நிலையில் இவ்விரு மாணவர்களும் கடத்தப்பட்டவர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர். தற்போது இரண்டு மாணவர்களும் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மன்னார் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் குறித்த மாணவர்களுக்கு வைத்தியசாலையில் பாதுகாப்பையும் வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## தபால் மூல வாக்காளர்கள் விண்ணப்பங்களைப் பெறலாம்

நடைபெறவுள்ள உள்ளூராட்சிச்சபைத் தேர்தலின்போது தபால் மூல வாக்களிப்பில் ஈடுபடவுள்ள அரச ஊழியர்களிற்காக தபால் மூல வாக்களிப்பிற்கான விண்ணப்பங்கள் அந்தந்த நிறுவனங்களிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

எனவே, தபால் மூலம் வாக்களிப்புச் செய்ய விரும்பும் அரச ஊழியர்கள் தமக்குரிய விண்ணப்பத்தினை நிறுவனத் தலைவர்களிடமிருந்து பெற்று அதில் கேட்கப்பட்டிருக்கும் விடயங்களை சரியான முறையில் பூர்த்தி செய்து அவற்றை மீண்டும் நிறுவனத் தலைவர்களினூடாகவே தேர்தல் திணைக்கள தெரிவத்தாட்சி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது. (03)

# யாழில் இரண்டாவது கிளை ஜெய்ப்பூர் நிறுவனம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

நாட்டில் கடந்த காலத்தில் ஏற்பட்ட யுத்தத்தினாலும் நோய் மற்றும் விபத்துக்களால் அங்கவீனர்களானவர்களிற்கு 1987இல் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஜெய்ப்பூர் நிறுவனம் தனது சேவையை மக்கள் மத்தியில் விரிவுபடுத்துவதற்காக 19/3 கொழும்புத்துறை வீதி சுண்டிக்குளியில் தனது சேவையை ஆரம்பித்துள்ளது.

நீண்ட காலமாக செயற்கைக்கால், கைகள் பொருத்துதல், முள்ளந்தண்டு ஆதார உறுப்புக்கள், கால்களுக்கான கலிபர்கள், இயன் மருத்துவச் சிகிச்சை, கல்வி ஊக்குவிப்புக் கொடுப்பனவு, சமூக புனர்வாழ்வு, உளவளத்துணை போன்ற சேவைகளை வழங்கி வருவதோடு, மாற்று வலுவுடையோர் உடல், உள ரீதியாக மட்டுமல்லாது சமூக பொருளாதாரத்திலும், சமூகத்திலும் வலுப்பெற்றவர்களாய் வாழ்வதற்கு பல்வேறு சேவைகளுடனும் தேவைக்கேற்ப பல அவசிய திட்டங்களை செயலில் விரிவாக்கி தனது பணியை ஜெய்ப்பூர் நிறுவனம் மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# தேர்தல் கடமை புரிவோர் விண்ணப்பங்கள் ஏற்பு

(அச்சுவேலி)

நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல் கடமைகளில் ஈடுபடுவதற்காக அலுவலர்களை நியமிப்பதற்கு அரசாங்கத் திணைக்களம் மற்றும் நிறுவனங்களில் கடமையாற்றும் அரச ஊழியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகின்றன.

அரசாங்க நிறுவனங்களில் கடமையாற்றும் ஊழியர்களிற்கு அவ்வவ் நிறுவனத் தலைவர்களினூடாக விண்ணப்படிவங்கள் அனுப்பிவைக்கப்பட்டு அவை பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் நிறுவனத் தலைவர்களினூடாக அவை மீண்டும் சேகரிக்கப்பட்டு தேர்தல் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன. இதற் காகப் பாடசாலை மற்றும் பிரதேச செயலகங்கள், அதிகாரசபைகள், திணைக்களங்க ஆகியவற்றிற்கு விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (03)

## வேட்பு மனுத்தாக்கல்

களும் இன்று முதல் வேட்பு மனுக்களை தாக்கல் செய்யலாம். வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படுவதை முன்னிட்டு 20 ஆம் திகதி முதல் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகங்களின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளன. எவ்விதமான இடையூறுகளும் இன்றி மனுக்களை தாக்கல் செய்யும் வகையிலான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு தேர்தல்கள் ஆணையாளர், பிரதி தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகங்களிலிருந்து தேர்தல்கள் திணைக்களத்திற்கு தரவுகளை, தொலைநகல் மற்றும் இணையத்தின் மூலமாக பெற்றுக்கொள்வதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வேட்பாளருக்கான விருப்பு இலக்கங்களை துரிதமாக வழங்கும் நோக்கிலேயே இவ்வாறான துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக திணைக்களம் அறிவித்துள்ளது.

ஜனவரி 06 ஆம் திகதி வியாழக்கிழமை நள்ளிரவு கலைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைகளுக்களுக்கான தேர்தலில் போட்டியிடுவதற்கு விரும்பும் சுயேட்சைக்குழுக்கள் கட்டுப்பணத்தை 26 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் செலுத்தியிருக்கவேண்டும். புதிதாக உருவாக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் அடங்கலாக நாட்டில் 335 மன்றங்கள் இருக்கின்றன. இவற்றில் 267 சபைகளின் ஆட்சிகாலம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு கலைக்கப்பட்டன. அத்துடன் ஏற்கனவே ஆயுட் காலம் முடிவடைந்திருந்த நிலையில் தேர்தல் தொடர்ச்சியாக ஒத்திவைக்கப்பட்டு வந்த 34 சபைகளுக்கான தேர்தலும் இம்முறை நடைபெறவுள்ளது.

இதன்படி 301 சபைகளுக்கான வேட்பு மனுக்கள் கோரப்பட்டுள்ள அதே வேளை மீதமாகவுள்ள 34 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் பின்னர் இடம்பெறும். இவற்றுள் கிரிக்கெட் சுற்றுப்போட்டி காரணமாக ஒத்துவைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் ஏப்ரல் மாதத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ள அதே நேரம் நாட்டிலுள்ள 18 மாநகரசபைகள் தேர்தலுக்காக கலைக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## வடக்கு-கிழக்கில்..

கொள்கையை நோக்கி போய் கொண்டிருப்பது போலத் தோன்றுகிறது எனவும் அரசிலிருந்து சிறுபான்மையினர்களான தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் விடுபட்டு போயுள்ளது போல தெரிகிறது எனவும் அந்த அமைப்பின் செயல் இயக்குநர் மார்க் லாட்டிமர் பிபிசியிடம் தெரிவித்தார்.

இலங்கைக்குள்ளேயே இடம் பெற்ற ஆய்வின் அடிப்படையிலேயே இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் வடகிழக்கிலுள்ள மக்களிடம் பேசிய போது கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையிலேயே அங்கு மக்கள் அச்சத்துடன் வாழ்கிறார்கள் என்றும் அவர் கூறுகிறார். அரசு நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும் நாட்டில் அனைவருக்கும் இடம் உள்ளது என்கிற நம்பிக்கை அனைவரிடமும் ஏற்படுவதுதான் இலங்கையின் எதிர்காலத்துக்கு நல்லதாக இருக்கும் எனவும் மார்க் லாட்டிமர் சுட்டிக்காட்டு கிறார்.

புலிகளின் பிடியிலிருந்து தாம் விடுவிக்கப்பட்டுள்ளோம் என்கிற உணர்வு பெரும்பாலான தமிழர்களிடம் இருந்தாலும், அதனால் ஏற்பட்டுள்ள சமாதானத்தின் பலன்களை அவர்கள் பெறவில்லை என்பதும் காணக் கூடியதாக இருக்கிறது எனவும் மார்க் லாட்டிமர் கருத்து வெளியிடுகிறார்.

வடகிழக்கில் பல இடங்களில் புதிதாக புத்த விகாரைகள் அமைக்கப்படுவதை தாங்கள் கண்டதாக வடக்கு கிழக்கிலுள்ள மக்கள் தமது ஆய்வுக் குழுவினிரிடம் தெரிவித்துள்ளனர் என்று அந்த அமைப்பு கூறுகிறது.

இதன் காரணமாக தமது பகுதிகள் சிங்களமயப்படுத்தப்படுவதாக வட பகுதியிலுள்ள மக்களிடம் எண்ணம் நிலவுகிறது என்றும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

மக்கள் வேலைக்காகவோ இதர விடயங்களுக்காகவே வடபகுதிக்கு செல்வது பிரச்சினை அல்ல. ஆனால் அரசின் ஒரு கொள்கையாக தென் பகுதி மக்கள் வடகிழக்குப் பகுதிகளுக்கு கொண்டு செல்லப்படுவது கவலையளிக்கும் ஒரு விடயம் எனவும் சிறுபான்மையினர் உரிமைகள் அமைப்பின் செயல் இயக்குநர் மார்க் லாட்டிமர் தெரிவித்தார்.

நாட்டின் வடபகுதியில் மக்கள் நடமாடுவதற்கு இராணுவத்தால் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் போது, மற்ற பகுதி மக்கள் வடபகுதிக்கு சுதந்திரமாக செல்ல முடியும் என்பது தான் கேள்விகளை எழுப்புகிறது எனவும் அவர் மேலும் கூறினார்.

இலங்கையில் எந்த மக்களும் பாரபட்சமாக நடத்தப்படுவதில்லை என்று தேசிய பாதுகாப்பு ஊடக மையத்தின் இயக்குநர் லக்'மன் "ஹலுகல்ல பிபிசியிடம் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த அமைப்பு இலங்கையிலிருந்து செயற்படாத நிலையில், அதற்கு இலங்கை தொடர்பிலான புரிதல் எந்த அளவுக்கு இருக்கும் என்கிற கேள்வியும் உள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

## துப்பாக்கிச்..

மற்றைய நபர் படுகாய மடைந்துள்ளார். துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட நபர்கள் மோட்டார் சைக்கிளிலிலேயே தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தன புஷ்பகுமார எனப்படும் மோசா என்பவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். இரண்டு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதல் சம்பவமே இந்தத் தாக்குதலுகான காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொலிஸ் சேவையை தொழிலாக அல்லாமல் சமூகத்தின் கடமையாகக் கருதிப்பணியாற்றவும்

## - அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா



(யாழ்ப்பாணம்)

பொலிஸ் சேவையினை தொழிலாக கருதாமல் எமது சமூகத்திற்கான கடமையாகக் கருதி பணியாற்ற வேண்டும். இவ்வாறு பொலிஸ் பயிற்சியை முடித்து யாழ்ப்பாணம் திரும்பி யிருக்கும் பொலிஸ் இளைஞர் களுடனான சந்திப்பில் அமைச் சர் டக்ளஸ்தேவானந்தா கூறி னார்.

களுத்துறை பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் தமிழ் மொழி மூலமான பயிற்சியினை முடித்துக் கொண்டவர்களில் ஒருதொகுதியினர் நேற்று யாழ்ப்பாணத்தில் அமைச்சர் அவர்களைச் சந்தித்துக் கலந் துரையாடினர். அவர்களுக்கு தமது வாழ்த்துக்களைத் தெரி வித்துக்கொண்டதுடன் பொலிஸ் சேவையினை தொழிலாகக் கருதாமல் எமது சமூகத்திற்கான கடமையாக கருதி பணியாற்ற வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா மேற்கொண்ட நடவ டிக்கை காரணமாகவே தாம் பொலிஸ் சேவையில் உள்வாங் கப்பட்டு தனித்தமிழிலேயே தமது பயிற்சிகளை முடித்து வெளியேற முடிந்ததாகவும் இதற்காக அமைச்சர் அவர் களுக்கு நன்றி தெரிவிப்ப தாகவும் அத்துடன் இத்தகைய வாய்ப்பினை ஏனைய இளை ஞர் யுவதிகளுக்கும் பெற்றுக் கொடுக்க வேண்டும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடம் அவர்கள் கேட்டுக் கொண்டனர்.

# பாகிஸ்தான் இராணுவத் தளபதி வருகை இந்தியத் தளபதி வெளியேற்றம்

(கொழும்பு)

பாகிஸ்தான் இராணுவத் தளபதி மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு நேற்று இலங்கை வந்துள்ளார். பாகிஸ்தானுக்குச் சொந்தமான விசேட வானூர்தி ஒன்றில் இவர் கொழும்பை வந்தடைந்தார். அவரை விமான நிலையத்தில் வந்து இராணுவத் தளபதி ஜகத் ஜெயசூரிய வரவேற்றார்.

பாகிஸ்தான் இராணுவத் தளபதி இலங்கையில் தங்கியுள்ள காலத்தில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் படையதிகாரிகளையும் சந்திக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்த இந்திய விமானப் படைத்தளபதி தமது விஜயத்தை நிறைவு செய்து நேற்று இந்தியா திரும்பியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நாட்காட்டி தீக்கிரை இருநூறு பேர் கைது

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் உருவம் பொறித்த நாட்காட்டிக்கு எதிர்ப்புத் தெரிவித்து அதனைத் தீக்கிரையாக்கிய இருநூறு பேரை தமிழகப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

இந்திய இராணுவத்தின் பயிற்சி மையம் ஒன்றினால் வெளி யிடப்பட்டுள்ள 2011ஆம் வேண்டுக்கான நாட்காட்டியில் உலகத் தலைவர்களின் புகைப்படங்கள் இடம்பெற்றுள்ளது. அதில் மகிந்த ராஜபக்ஷ அவர்களின் புகைப்படமும் இணைக்கப்பட்டிருந்தது.

அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் நேற்று தமிழ்நாட்டில் பாரிய ஆர்ப்பாட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆர்ப்பாட்டத்தின் போது குறித்த நாட்காட்டியின் பிரதிகளுக்கும் தீவைத்து எரிக்கப்பட்டது. குறித்த நாட்காட்டியை வாபஸ் பெறுமாறு அவர்கள் வலியுறுத்தினர். அதன் போது நாட்காட்டியை தீக்கி ரையாக்கிய சம்பவம் தொடர்பில் இருநூறு பேர் தமிழகப் பொலி ஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## அங்காடி...

பேரூந்து நிலையப்பகுதியில் பழக்கடைகளுக்கென ஒதுக் கப்பட்ட அங்காடி பகுதியில் அமைச்சரவர்களினால் வழங்கப்பட்ட லொத்தர் சீட்டுக்களைப் பெற்றுக்கொண்ட பழவியாபாரிகள் தமக்குரிய கடைகளைத் தாமே தெரிவுசெய்துகொண்டனர். இந்த நிகழ்வில் யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்கு ணராஜா ஆணையாளர், மு.செ.சரவணபவ, மாநகர பதில் செயலாளர் இரத்தினசிங்கம் பொறியியலாளர் ஷென்ஸ்டன் வழக்கறிஞர் ரங்கன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பாதிக்கப்பட்டவர்களுக்கு...

நாடுகள் சபை குறிப்பிட்டுள்ளது.

இவரின் இவ் விஜயத்தின் போது நன்கொடையாளர்கள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் அரசாங்கத்தின் பிரதிநிதிகளையும் சந்திப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கையில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டோருக்கான அவசர நிவாரண நிதியம் ஒன்றும் கதரின் பிராங்கின் விஜயத்தை யொட்டி ஆரம்பிக்கப்படவுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை குறிப்பிட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமை விவகாரங்களுக்கான பிரதிச் செயலாளரும், அவசரகால நிவாரண பிரதி இணைப்பாளருமான கதரின் பிராக் இலங்கைக்கு விஜயம் செய்வது இதுவே முதற்தடைவ என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கிழக்கில்...

வழங்குவதற்கு குறிப்பிட்ட தொகை அவசியமானதாக இருப்பதாக இவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேவேளை, இலங்கையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் 43 பேர் உயிரிழந்துள்ளதுடன், 4 பேர் காணாமல் போயுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

இந் நிலையில், வெள்ளப் பெருக்கினால் மிகவும் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாண மக்களுக்கு இதுவரை நிவாரணங்கள் எதுவும் வழங்கப்படவில்லை என அம்பிட்டிய சுமணரத்தின என்ற பௌத்த மதகுரு கூறியிருப்பதாக சர்வதேச செய்தி நிறுவனமான அசோசி யட் பிரஸ் செய்தியாளர் கிரிசான் பிரான்சிஸ் எழுதியுள்ள செய்திக் கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு போதிய உதவிகள் வழங்கப்பட்டு வருவதாக ஊடகங்களில் தெரிவிக்கப்படு கின்ற போதிலும், உண்மையாகப் பாதிக்கப்பட்ட இம் மக்களுக்கு நிவாரணங்கள் எதுவும் வந்து கிடைக்கவில்லை என அவர் கூறியதாக இச் செய்திக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தங்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்காது காலதாமதப்படுத்தும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளைக் கண்டித்து மக்கள் இந்த பௌத்த விகாரைக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தியதாகவும் இச் செய்திக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு என அனுப்பப்பட்ட உணவுப் பொருட்கள், கூடாரங்கள் மற்றும் கூரைவிரிப்புக்கள் என்பன இலங்கை அரசாங்கத்தின் அலுவலகங்களில் முடக்கப்பட் டிருப்பதாகக் கூறி பாதிக்கப்பட்ட மக்கள் ஆயிரம் பேர் ஆரையம்பதியிலுள்ள அரசாங்க அலுவலகத்திற்குள் புகுந்து தாக்குதல் நடாத்தியிருந்தனர்.

இந் நிலையில், இலங்கையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான மக்கள் தொற்று நோய்கள், பட்டினி மற்றும் கண்ணிவெடி அபாயத்தினை எதிர்கொண்டி ருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்திருந்தமை குறிப்பிடத் தக்கது.

## கூட்டமைப்பும்...

தீர்வை முன்வைக்க வேண்டும்.

பொது அரசியல் தீர்வுக்காக உருவாக்கப்பட டுள்ள தமிழ்க் கட்சிகளின் அரங்கம் அரசியல் தீர்வொன்றை முன்வைக்கும்வரை தமிழ் கட்சி களின் அரங்கத்தில் உள்ள கட்சிகள் பிளவு படாமல் தொடர்ந்து செயற்படவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

பொது அரசியல் தீர்வு அவசியம் என, இந்திய அரசும் இலங்கை அரசும் ஏற்றுக்கொண்டுள்ள நிலையில் தனிப்பட்ட நோக்கங்களுக்காகவும் அரசியல் நோக்கங்களுக்காகவும் தீர்வை முன் வைக்காமல் தமிழ் கட்சிகள் பிரிந்து விடக்கூடாது என கலாநிதி குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

## ஆணைக்குழுவின்...

என்றும், இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உபய மெதவல தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதியின்றி நல் லிணக்க ஆணைக்குழு அமர்வை நடத்தியமை குறித்து இராணுவத்தினர் கேள்வி எழுப்பியதாக நாம் இலங்கையர் அமைப்பின் நிறைவேற்று அங்கத்தவரும் அனைத்துப் பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டாளருமான உதுல் பிரேமரட்ண குற்றம் சுமத்தியிருந்தார். இது பொடர்பாக ஊடகவியலா ளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இதனை அவர் தெரிவித்தார். இத்தகைய விடயங்களில் நாம் எவ்வாறு தலையிட முடியும், இந்த நாட்டில் இராணுவம் பெரியதொரு அமைப்பாக இருக்கின்ற போதிலும் இத்தகைய விடயங்களில் நாம் தலையிடுவோம் என்று அர்த்தமல்ல என அவர் தெரிவித்தா

## நல்லிணக்க...

அநுராதபுரம் மாவட்ட மக்களிடம் சாட்சியங் களைப் பெற உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

அதேவேளை, சீரற்ற காலநிலையால் அம்பாறை மாவட்டத்தில் சாட்சியங்களைப் பெறுவது தொடர்ந்தும் ஒத்திவைக்கப்பட்டுள்ள தாக உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் தலைவர் சீ.ஆர்.டி. சில்வா தெரிவித்துள்ளார்.

அத்துடன், மே மாதத்திற்குள் ஆணைக் குழுவின் முழுமையான அறிக்கையை சமர்பிக்க வுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கையில் குறிப்பிட்டப்பட்டுள்ள பரிந்துரை யின் பேரிலேயே இக் குழு நியமிக்கப்பட்டுள்ள்து.

பிரதி சட்டமா அதிபர் சவீந்திர பெர்னான்டோ தலைமையிலான இக் குழுவில் மூத்த அரச சட்டத்தரணிகள் குமாரரட்ணம், செத்திய குண சேகர மற்றும் டினல் ரத்நாயக்க ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

## இராஜதந்திர...

யுள்ளார்.

அலரி மாளிகையில் நடைபெற்ற இச் சந்திப் பில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் ஜனாதி பதியின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் வெளிவிவகாரஅமைச்சின் செயலாளர் றொமேஸ் ஜெயசிங்கவும் கலந்து கொண்டனர்.

புலிகளுக்கும், அரசாங்கத்திற்கும் இடை யில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றிருந்த காலப் பகுதியில் ரிச்சர்ட் ஆர்மிட்டேஜ் கொழும்புக்கு விஜயம் செய்திருந்ததுடன், டோக்கியோ நன் கொடையாளர் மாநாட்டிலும் கலந்து கொண்டி ருந்தார்.

இந் நிலையில், பல்வேறுபட்ட சர்வதேச இராஜதந்திர நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வரும் அரசாங்கத்துக்கு உதவும் நோக்குட னேயே அவர் கொழும்புக்கு விஜயம் செய்திருப்ப தாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரி விக்கின்றன.

அமெரிக்காவுடன் அண்மைக்காலத்தில் ஏற்பட்டுள்ள இராஜதந்திர நெருக்கடிகளைத் தணிப்பதற்கான வழிமுறைகள் தொடர்பாக ரிச்சர்ட் ஆர்மிட்டேஜின் ஆலோசனையைப் பெற இலங்கை அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாகவும் நம்பப்படுகின்றது.

இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் கொழும்புக்கு விஜயம் செய்துள்ள ரிச்சர்ட் ஆர்மிட்டேஜின் வருகை குறித்து அரசாங்கம் இதுவரை எவ்வித தகவல்களையும் வெளியிட வில்லை.

2001ஆம் ஆண்டு முதல் 2005ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அமெரிக்காவின் 13வது பிரதி இராஜாங்க அமைச்சராக ரிச்சர்ட் ஆர்மிட்டேஜ் பணியாற்றி இருந்தார்.

இதன் பின்னர் முரண்பாடுகளுக்கான சர்வ தேசக் குழுவின் சபை உறுப்பினராக இருந்த ரிச்சர்ட் ஆர்மிட்டேஜ், தற்போது "ஆர்மிட்டேஜ் இன்ரநசினல்" எனும் சர்வதேச வர்த்தக அபிவி ருத்தி, தந்திரோபாய திட்டமிடல் மற்றும் இராஜ தந்திர நெருக்கடிகளைத் தீர்த்தல் போன்ற விடயங் களில் ஆலோசனை வழங்கும் நிறுவனம் ஒன்றை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

யாழ்.மாவட்ட மக்களுக்கு
SEC
ஷாலோம்
SHALOM
SHALOM வழங்கும் நற்செய்தி...!
உங்கள் கனவு இல்லங்களையும் ஏனைய கட்டிடங்களையும் மாவட்டத்தின் எந்தப் பகுதியிலும் அழகுற நிர்மாணித்துக்கொள்ள SHALOM நிர்மாணப் பொறியியலாளர்கள் உறுதியான உத்தரவாதமளிக்கிறார்கள்.
குறித்த தவணைக்குள் .... குறைந்த செலவில்.... நவீன முறையில்...
வீடுகள்-கட்டிடங்கள் அனைத்தையும் அமைத்துக்கொள்ளவும் மாபிள் - ரெறாசோ வேலைகளை நேர்த்தியாக அழகுற செய்துகொள்ளவும் நம்பிக்கையுடன் தொடர்பு கொள்ளுங்கள்
SHALOM
20/1, 2வது ஒழுங்கை,
பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
(C/405)
தொலைபேசி : 0217901798 - 0771044861
தீவகத்தில்
SHALOM,
சிற்பன வீதி,
வங்களாவடி,
வேலணை.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஜனவரி 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.